www.tamilarangam.net

### பலியாகும் உறவு!

புலியென்றார் இல்லை சிங்கமென்றார் பின்னர்
புலியென்றார் புலியில்லைச் சிங்கம் – புலியென்று
பலியெடுப்போ ராரென்ற பயனற்ற சர்ச்சையிலே
பலியாகு தெம்முறவுப் பயிர்!


– ஈழமோகம்

SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 117 மார்ச்.6-19, 1997 விலை ரூபா 10.00




## சிங்கள பௌத்த ஜனாதிபதி?






## பொ.ஐ.மு. பயங்கரவாதம்!

### ஓட்ட மாவடி:

## திருப்தி தராத பதில்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இருவாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2,அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை- ரூபா 300
வெளிநாடு- U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04,ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

# பொ.ஐ.மு பயங்கரவாதம்

முன்புற அட்டையில் கைகளும் கால்களும்கட்டப்பட்ட நிலையில் தூணுடன் பிணைக்கப்பட்ட ஒருவரின் படத்தைப் பார்த்திருப்பீர்கள். தமிழ் விடுதலை இயக்கங்களின் மின்கம்பத் தண்டனை உங்களுக்கு சில வேளை ஞாபகத்திற்கு வரக்கூடும். ஆனால் மின் கம்பத் தண்டனை வழங்கப்பட்டவர்களை நிர்வாணமாக்கும் தன்மை தமிழ் இயக்கங்களிடையே இருந்ததில்லை என்பதும் கூடவே உங்களுக்கு ஞாபகம் வரலாம்.

அப்படியென்றால் இந்த நபர் யார்?

வரப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆனமடுவவில் உள்ள கறுவலகன்வெவ பிரதேச சபைக்குப் போட்டியிடும் ஐ.தே.க அபேட்சகர் வானின் சில்வா தான் அவர். அவருக்கு என்ன நடந்தது அவரே சொல்கிறார்.

"இலக்கத் தகடற்ற வாகனமொன்றில் வந்தவர்கள் என்னையும் என் நண்பர்களையும் கடத்திச் சென்று தாக்கி நிர்வாணமாக்கி தூணில் கட்டினார்கள்..."

"வேட்பாளர் மனுவை தாக்கல் செய்துவிட்டு வீட்டுக்கு வந்த நண்பர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது தான் அது நடந்தது. இரவு ஒன்பது மணியிருக்கும். இலக்கத்தக டற்ற ஒரு வாகனத்தில் வந்திறங்கிய பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் எம்மை அவ் வாகனத்தில் இழுத்து ஏற்றி சுமார் 5 கிலோமீற்றர் தொலைவுக்கு அப்பால் கொண்டு சென்றனர். வாகனத்திலிருந்து எம்மை இறக்கி ஐ.தே.கவிருந்து விலகுமாறும், போட்டியிலிருந்து வாபஸ் வாங்குமாறும் கோரி எம்மைத் தாக்கினர். என்னை மட்டும் இன்னும் 2 கி.மீ தூரம் இழுத்துச் சென்று கொல்லப் போவதாகப் பயமுறுத்தினர். என் உடைகளைக் களைந்து, கைகளையும் கால்களையும் கட்டிவிட்டு தூணொன்றுடன் நிர்வாணமான நிலையில் கட்டிப்போட்டனர். தேர்தல் போட்டியில் இருந்து விலகுமாறு கூறி என்னைத் தாக்கினர்... பின் அப்படியே என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டனர்."

"மறுநாள் காலை உறவினர்கள் என்னை தேடிவந்து கட்டவிழ்த்துவிடும் வரை நான் அப்படியே இருக்க வேண்டியிருந்தது. ஆனமடுவ பொலிஸில் இது பற்றி நான் முறையிட்டேன். யாரும் கணக்கெடுக்கவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தல் பிரச்சாரம் தொடங்கியதை அடுத்து பொ.ஐ.முவினால் பரவலான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பொதுவாக எல்லாக் கட்சிகளும் வன்முறையில் ஈடுபட்டிருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தேர்தல் செயலக பொலிஸ் பொறுப்பதிகாரி மஹிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ள போதும் அவற்றில் பெருமளவு வன்முறைகளை ஐ.தே.கவும் பொ.ஐமுவுமே நடாத்தியுள்ளதாக தெரிவருகிறது.

இந்நிலையத்தினது பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் தகவல்களின்படி கீழ்வருமாறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அறியமுடிகிறது. ஐ.தே.க-256, பொ.ஐமு-210, மு.ஐ.வி.மு-1, டெலோ-2, யூ.பி.எப்.-1, சுயேட்சைக்குழுக்கள்-13, பொது மக்கள் சார்பில்-29.

இம் மொத்த வன்முறை முறைப்பாடுகளில் அதிக அளவிலானவை இரத்தினபுரியில் (86) பதியவாகியுள்ளது. நாலந்த எல்லாவலவின் படுகொலைக்குப் பின்னணியிலேயே இந்தளவான வன்முறைகள் அங்கு இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. இதற்கடுத்தபடியாக கண்டியில் 57உம், மாத்தளையில் 47உம் பதிவாகியுள்ளன.

நாளாந்தம் கிடைக்கும் முறைப்பாடுகளை இந்நிலையம் பதிவு செய்வதோடு அது பற்றிய தகவல்களை பத்திரிகைகளுக்கு அனுப்பியும் வருகிறது.

எஸ்பீ

## திருத்தம்

இதழ் 116இல் பக்கம் 11இல் வெளியான சண்: விட்டுக்கொடாத புரட்சியாளர் என்ற தலைப்பிலான கட்டுரையை எழுதியவர் குமார் ரூபசிங்க எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அஜித் ரூபசிங்க எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ-ர்

## பெண் பொலிஸ்!

வவுனியா நகரப்பகுதியில் புலிகளின் ஊடுருவல் ஏற்படலாம் என்றும் அதனால் நகரத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுவதால் நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நடைரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தினர் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரும் ஆயுத பாணிகளாக பல இடங்களிலும் நிறுத்தப்படுகின்றனர்.

இதற்கு மேலாக விசேட ஆயுதப்பயிற்சி பெற்ற பெண்பொலிஸ்பிரிவொன்றும் வவுனியா நகரப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. நகரின் கேந்திர நிலைகளில் இவர்கள் ஆயுத பாணிகளாக நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த விசேட பிரிவினர் மஹியங்கனை பகுதியில் பயிற்சியளிக்கபட்டதாகவும் 60 பெண் பொலிஸார் வவுனியாவில் கடமை புரிவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தம்பு

## பொறுப்பு?

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியவர்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்படுகிறது. அதில் பழுதடைந்த தேயிலை, காலம் கடந்த பருப்பு, நீர்த்தன்மையுள்ள சீனி இப்படியான உணவு பொருள்களே கிடைக்கிறது. முன்னர் புலிகள் இருந்தபோதும் இப்படி பழுதடைந்த பொருட்கள் வழங்கப்பட்ட போது ஈழநாதம், உதயன், ஈழநாடு பத்திரிகைகளில் 'அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் பழுந்தடைந்தவை' என்று பெரிய எழுத்துக்களில் செய்தியாக இருக்கும். ஆனால் முன்னர் 1995இல் இவ்வாறான பொருட்கள் வழங்கப்படும் போது புலிகள்தான் தமது இருப்பை மாற்றி நல்லதை எடுத்துவிட்டு எமக்கு பழுதானதை தருகிறார்கள் என்றும் மக்கள் பேசிக்கொண்டனர். ஆனால் இப்போது கப்பலில் வரும் உணவுப்பொருட்கள் நல்ல ரகமாக இருப்பதை ஏனைய கடைகளில் காணலாம். அப்படியானால் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் உலர் உணவு நிவாரணப்பொருட்கள் ஏன் பழுதடைந்து காணப்படுகின்றன. இதற்கு யார் பொறுப்பு. செயலகத்தில் கேட்டால் புனர்வாழ்வு அமைச்சுத்தான் காரணம் என்றனர்.

கரவையூரான்

# மகளிர் தினமும் மகளிர் பிரதிநிதித்துவமும்!

வழமைபோல இம்முறையும் மார்ச் 8ம் திகதியன்று "சர்வதேச பெண்கள் தினம்" கொண்டாடப்படுகிறது. இம்முறையும் பெண்கள் தினத்துக்கான ஆயத்தங்களை பெண்கள் அமைப்புகள் மும்முமரமாக ஈடுபட்டுவருகின்றன. அவ்வாறான அமைப்புகளில் அரச சார்பற்ற அமைப்புகள், கட்சிகள் சார்ந்த அமைப்புகள், இரண்டையும் சாராத சுதந்திர அமைப்புகள் என்பவை முக்கியமானவை. இவற்றில் கட்சி சார்ந்த பெண்கள் அமைப்புகள் அல்லது கட்சிகளுக்குள் கிளையாக இயங்குகின்ற பெண்கள் அணி என்பவை பெரும்பாலும் இம்முறை சர்வதேச-பெண்கள் தின நினைவு கூரலை கைவிட்டுவிட்டனர். காரணம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களின் முன்னிலையில் பெண்களின் பிரச்சினை இரண்டாம் பட்சமானதாக அல்லது தேவையற்றதாகப் போய் விட்டுள்ளது போலும்.

பொதுவாக பெண்கள் அமைப்புகளைப் பொறுத்தவரையில் உலகம் முழுவதும் பெண்களின் எழுச்சியையும், பலத்தையும், பெண்களின் கோரிக்கைகளையும் உன்னிப்பாக கவனிக்கும் இந்நாளை கூடிய பட்சம் பயன்படுத்த விளைவதே இயல்பானது. ஆனால் இங்குள்ள அமைப்புகளுக்கு இது முக்கியமாகப் படவில்லை. அதைவிட தேர்தல் அவர்களுக்கு முக்கியமாகிவிட்டது. இந்த கட்சி சார்ந்த அமைப்புகள் போலவே பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்முறை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்சிகளுக்கு ஆதரவளித்து இயங்கும் வேலைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. பெரும்பாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியை வெல்லச் செய்வதே பெருமளவான அரசசார்பற்ற பெண்கள் அமைப்புகளின் நோக்கமாக இருப்பதைக் காண முடிகிறது. இதில் முக்கியமாக அவதானிக்க வேண்டியது என்னவென்றால் அவ்வாறான பெண்கள் அமைப்புகள் எவ்விதத்திலும் பெண்களின் கோரிக்கைகளை முதன்மைப்பத்திய நிபந்தனைகள் எதுவுமில்லாமல் ஆதரவளிப்பதே.

பொ.ஐ.மு.வே ஐ.தேகவுக்கு சரியான மாற்று என்றும் ஐ.தேகவோடு ஒப்பிடுகையில் ஜனநாயகம், போர், இனப்பிரச்சினை, மனித உரிமை மீறல் என்பவை முன்னரை விட நல்ல நிலையில் அணுகப்படுவதாகவும், ஓரளவு சாத்தியமான அரசியல் தீர்வு முன்மொழியப்பட்டிருப்பதாகவும் இவ்வமைப்புகளைச் சார்ந்தவர்கள் பகிரங்கமாக கூறித் திரிவதைக் காணமுடிகிறது.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தாவது இவ்வமைப்புகள் அவதானத்துடன் அணுகுகின்றனவா என்றால் அதுவும் இல்லை.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் 40 வீதத்தினர், 16-35க்கு இடைப்பட்ட இளைஞர்களாக இருக்க வேண்டும் எனும் விதி தேர்தல் ஆணைக்குழுவினரால் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்விதி மீறப்பட்ட பல பட்டியல்கள் இம்முறை நிராகரிக்கவும் பட்டன. இவ்வாறான "இளைஞர்" பிரதிநிதித்துவத்தைப் பெற பிரயத்தனம் செய்த ஆணாதிக்க ஆட்சியதிகார கட்டமைப்பு பெண்கள் பிரதிநிதித்துவம் குறித்து சிறிதும் சட்டை செய்யவே இல்லை. இதில் ஆச்சிரியமும், அனுதாபமும் கொள்ள வேண்டிய விடயமென்னவென்றால் இது குறித்து எந்தவொரு பெண்கள் அமைப்புமே கவனத்தில் கொள்ளாதது தான்.

இந்த 40 வீத இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கான பின்னணியை நோக்குவது இங்கு முக்கியமானது.

1987-1989 காலப்பகுதியில் நடந்த அரச பயங்கரவாதத்தை எவரும் இலகுவில் மறக்கமாட்டார்கள். அந்தக் காலப்பகுதியில் ஜே.வியியினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பிரேமதாசவின் படையினரால் கொன்றொழிக்கப்பட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்ட போது சர்வதேச ரீதியில் பிரேமதாச அரசாங்கம் சாடப்பட்டது, கண்டிக்கப்பட்டது. இதை மூடி மறைப்பதற்காகவும் இளைஞர் பிரச்சினைகளை தீர்க்க வந்தவராகவும் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை பிரேமதாசவுக்கு இருந்தது. அதன் விளைவாக 1989இல், "இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று பிரேமதாசவால் உருவாக்கப்பட்டது, அவ் ஆணைக்குழுவில் இருந்த ஐவரில் ஒருவர் இன்றைய நீதித்துறை அமைச்சர் (அன்றைய கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர்.) ஜீஎல்.பீரிஸ், இன்னொருவர் ஐ.நா.சபையில் பெண்கள் மீதான வன்முறை பற்றிய அறிக்கையாளராக கடமையாற்றும் ராதிகா குமாரசுவாமி.

அவ்வாணைக்குழு விசாரணையின் முடிவில் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அப்பிரேரணைகளில் ஒன்றுதான் அரசியலில் இளைஞர்களுக்கு 40 வீத பிரதிநிதித்துவம் என்பது.

அவ் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகளை முழுமையாகப் பார்க்கும் போது அது இளைஞர்களை கட்டிப்போடுவது எப்படி? இளைஞர்களின் புரட்சிகர குணாம்சங்களை வளரவிடாமல் தடுப்பது எப்படி? என்பது போன்ற இலக்கைக் கொண்டே தயாரிக்கப்பட்டிருப்பது தெளிவாக விளங்குகிறது. மற்றொரு அம்சம், அது "இளைஞர்" என கருதிக் கொண்டது ஆண்களை மட்டுமே என்பது. இளைஞர்கள் சம்பந்தமாக ஆராயப்பட்ட அவ் ஆணைக்குழு அறிக்கையில் எந்த அத்தியாயமும் "இளம்" பெண்கள் பற்றி ஆராயப்படாததும் விதிவிலக்காகவே பெண்களை சந்தித்து விசாரித்துள்ளனர் என்பதுவும் முக்கியமானது. அப்படிப்பட்ட ஒரு ஆணைக்குழுவால் "இளைஞன்" களுக்கு மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் விதிகள் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

அது மட்டுமன்றி அவ் ஆணைக்குழுவில் பெண்நிலைவாதி என்று உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒருவர் இருந்தும் இவ்விடயம் குறித்து அக்கறை செலுத்தப்படவில்லையென்றால் அதை சட்டமாக அமுலுக்கு கொண்டு வந்த ஆணாதிக்க சட்ட அமுலாக்க கட்டமைப்பை பற்றி மட்டும் கூறவா வேண்டும்?

"பிரதிநிதித்துவம்" எனும். போது ஜனத்தொகையில் சரிபாதியாக இருக்கின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான பிரநிதிநிதித்துவம் இருக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும். வெறுமனே அரசியலமைப்பில் "சட்டத்துக்கு முன் அனைவரும் சமம்' எனும் போலி வாசகம் மாத்திரம் போதுமானதல்ல. இன்னமும் சர்வதேச ரீதியில் பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதுவம் 5 சதவீதத்தைக் கூட தாண்டவில்லை. என்பதே யதார்த்த நிலை. இந்நிலையில் குறைவிருத்தியுடைய (குறைவிருத்திக்குள்ளாக்கப்பட்ட) பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஆகக் குறைந்தபட்சமேனும் மேலே கொண்டு வருவதெனில் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். அப்படியாக விசேட கவனிப்பு செலுத்துவதாகவிருந்தால் குறைந்தபட்சம் அக்குறிப்பிட்ட காலத்துக்கு வேட்பாளர் பட்டியலில் 50 வீதத்துக்கும் அதிகமான வீதத்தை பெண்களுக்கு வழங்குவது அத்தியாவசியமானது. ஆனால் இங்கு 3 வீதத்தைக் கூடக் காணவில்லை.

இதன் அர்த்தம் வேட்பாளர் பட்டியலில் பெண்களின் எண்ணிக்கையை கூட்டிவிட்டால் பெண்களின் பிரதிநிதித்துவம் கூடிவிடும் என்பதல்ல. எப்படியோ வாக்காளப் பெண்கள் கூட ஆண்களை நோக்கியே தமது வாக்குகளையிடுவார்கள் என்பதும் வேட்பாளப் பெண்களும் தமது வெற்றியின் பின் பெண்களை பிரதிநித்துவப்படுத்தப் போவதில்லை என்பதுவும் உண்மை. ஆனால் இந்த முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்புமுறை மாற்றமுறுவது வரையிலான காலம்வரை பெண்களது அரசியல் ஈடுபாட்டை நிர்ப்பந்திக்க கணிசமான அளவுக்கு இது உதவுமென்று நம்பலாம்.

இந்தியாவில் கூட பாராளுமன்றத்தில் 30 வீத பெண் பிரதிநித்துவ கோரிக்கை நாடு முழுவதும் மிகவும் துடிப்பாக எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நமக்கு சில கேள்விகள் எழுகின்றன.

இன்னமும் பெண்களின் பாராளுமன்ற பிரதிந்துவம் குறித்த அசமத்துவ நிலை குறித்து அரச மட்டத்திலேயோ அரசுசாரா மட்டத்திலேயோ கேள்வி எழாததன் காரணம் என்ன? ஏன் ஒரு முறையேனும் பெண்கள் அமைப்பினரால் கூட குரல் எழுப்பப்படவில்லை? 1987-1989இல் நடந்த இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தான் இன்று 40 வீத இளைஞர் பிரதிநிதித்துவம் வழங்கப்படக் காரணம் என்றால் பெண்கள் கூட தமது உரிமைகளுக்காக அப்படியொரு தனித்த போராட்டத்தை முன்னெடுத்தால் தான் கவனத்தில் கொள்ளப்படுமோ?

இக்கேள்விகள் நியாயமானமுறையில் பரிசீலிக்கப்படாவிட்டால் அப்படியொரு நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்.சரவணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை ஒரு பௌத்த நாடுதான் என்கிறார் ஜனாதிபதி

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை இலங்கையின் அரசியலில் நிரந்தரமாக நிலைநாட்டிக் கொள்ள ஒற்றையாட்சி முறை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த முயற்சிக்கு முதல் சவாலாக, பல்லினப்பாங்கான இலங்கையில் பிராந்திய சுயாட்சியின் அடிப்படையிலே தமிழ் மக்களின் சுயாட்சிக்கான உரிமை பற்றிய கோரிக்கை 1950ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் ரீதியான இன முரண்பாடு மேலெழ ஆரம்பித்தது. இம்முரண்பாடு நாளடைவில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களினால் இராணுவமயப்படுத்தப்பட்டதன் விளைவாக ஒரு மாபெரும் யுத்தமாக உருவெடுத்துள்ளது. இந்த யுத்தத்தில் இரண்டு இலக்குகளை இனம் காணலாம். ஒன்று, அரச இராணுவ முயற்சிகள் மூலமாக சிங்கள பௌத்த ஆதிக்கத்தை அரசியலில் நிலைநாட்டுவதற்கு எதிராக தமிழ் மக்களினால் விடுக்கப்படும் சவால்களை இராணுவ ரீதியாக முறியடித்து தமிழ் மக்களை சிங்கள பௌத்த ஆதிக்கத்திற்கு உட்பட்ட இனமாக நிலைப்படுத்திக் கொள்ளல், இரண்டாவது பௌத்த ஆதிக்கத்தை நிலை நாட்டுகின்ற அரசின் அரசியல் இராணுவ முயற்சிகளையும் ஏனைய முயற்சிகளையும் முறியடித்து தமிழ் மக்களுடைய சமத்துவத்தையும் சுயகௌரவத்தையும் அரசியல் சுதந்திரத்தையும் மீண்டும் நிலைநாட்டிக்கொள்வதை இலக்காகக் கொண்ட தமிழ் மக்களின் இலக்கு.

இவ்விரு இலக்குகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பாடான இலக்குகள் எனும் காரணத்தினால் இந்நாட்டில் இன முரண்பாடு தீர்க்கப்பட முடியாததொன்றாக கடந்த பல தசாப்தங்களாக வளர்ந்து வந்துள்ளது. இந்நிலைமைகளுக்கு மத்தியில் சந்திரிகா குமாரணதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி இப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதில் நேர்மையான கடமைப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றது என்று இன்னும் நம்புகின்ற சிறுபான்மையினத்தவர் கணிசமானளவு இருக்கின்றனர்.

ஆனால் இவ்வரசாங்கம் அவ்வகையான கடமைப்பாட்டைக் கொண்டுள்ளதா என்ற கேள்விக்கு ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் மூலம் கிடைத்த பதில் விடையளிப்பதாக இருக்கின்றது. பெப்ரவரி மாதம் 22ம் திகதியன்று ரூபவாஹினி தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட ஜனாதிபதி சந்திரிகாவின் மேடைப் பேச்சில் 'இலங்கையொரு பௌத்த நாடு' எனக்கூறியமையும், பெப்ரவரி 25ஆம் திகதி கண்டியில் நடை



பெற்ற பொதுக்கூட்டத்தில் 'இராணுவத்திற்கு இளைஞர்கள் சேர்வதற்காக மகாசங்கத்தினர் முன்வந்து உதவி செய்ய வேண்டும்' என்ற கோரிக்கையை விடுத்தமையும் முக்கிய விடயமாக சுட்டிக்காட்டப்பட வேண்டியவை.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக்கப்பட வேண்டுமென்பதுவும் பௌத்த மதம் அரச மதமாக்கப்பட வேண்டுமென்பதுவும் மகாசங்கத்தின் பெரும்பான்மையினர் உட்பட சிங்கள பௌத்த இனவாதிகளின் கோரிக்கைகளாகும். இக்கோரிக்கைகளானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்தியல் அடிப்படையாக அமைந்துள்ளதோடு பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் கருத்தியலாகவும் உருவாகியுள்ளது. இலங்கை ஒரு பல்லினப் பாங்கான பல மதங்களைக் கொண்ட நாடென்பதுவும், இன, மத, மொழி சமத்துவம் உத்தரவாதப்படுத்தப்படுவதன் மூலமே இன முரண்பாடு தீர்க்கப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்படும் என்னும் நிலைப்பாட்டை பொ.ஐ.முன்னணி ஆரம்பத்தில் பிரச்சாரப்படுத்தியது. இதற்கு சமஷ்டி ரீதியான அரசியல் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதுவும் பிரகடனப்படுத்தப்படாத நிலைப்பாடாக இருந்தது. 1995ஆம் ஆண்டு ஆவணி மாதம் பொ.ஐ.முன்னணி வெளியிட்ட அரச யாப்பு சீர்திருத்தத்திற்கான பிரேரணையும் இந்நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. இப்பிரேரணை தொடர்பாக சிங்கள பௌத்த சக்திகளின் எதிர்ப்பும் 'ரிவிரெச' படையெடுப்பின் மூலம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகள் விரட்டியடிக்கப்பட்டதன் மூலம் அரச இராணுவத்திற்கு கிடைத்ததாகக் கூறப்படுகின்ற இராணுவ வெற்றியும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை இராணுவ நடைமுறைகளின் மூலமாக நிலைநாட்டி விடலாம் என்ற நம்பிக்கையை இந்த அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறது. அரசின் தீர்வுப் பிரேரணையை விடுதலைப்புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்புவதை தொடர்ந்தும் தவிர்த்து வருகின்றமையும், ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இப்பிரேரணையின் குறைபாடுகள் பற்றி கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான கோரிக்கையை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருவதுவும் அரசாங்கத்தின் தீர்வுப் பிரேரணை 1996ம் ஆண்டு தை மாதம் சட்ட நகல் வடிவில் முன்வைக்கப்பட்ட பொழுது அதனுடைய 'தரம்' குறைந்து காணப்படுவதும் பௌத்த மதத்திற்கு முதன்மையிடம் கொடுப்பதற்கான நிலைப்பாட்டை பிரகடனப்படுத்தியிருப்பதுவும் மேற்கூறிய அரசின் நிலைப்பாட்டின் மாற்றத்தை உறுதி செய்வதாக அமைகின்றன.

விடுதலைப் புலிகளுக்கெதிரான அரசாங்க இராணுவம் அடையும் வெற்றிகளானது மீண்டும் அரசியலில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டும் அரசாங்கத்தின் முயற்சியை முன்னெடுப்பதாக அமையுமேயன்றி பல்லினப்பாங்கான மதச்சார்பற்ற அரசை ஏற்படுத்துவதன் மூலம் இன முரண்பாட்டுக்கான முறையான அரசியல் தீர்வையோ அல்லது அதற்கான நடைமுறையையோ ஏற்படுத்தப் போவதில்லை என்பதுவும் இவ்வரசாங்கத்தின் சமீபத்திய நடைமுறைகள் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. தமிழர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதற்குப் பலமான எதிர்ப்புக்களை தொடர்ந்தும் பிரகடனப்படுத்தி வருகின்ற மகாசங்கத்தினரிடம் இந்தப் பேரினவாத யுத்தத்திற்கு ஆட்திரட்டுவதற்கு ஒத்துழைப்பைக் கோருவதும், இது ஒரு பௌத்த நாடு என மேடையிலே பிரகடனப்படுத்துவதும் இவ்வரசாங்கத்தின் உள்நோக்கத்தை வெளிப்படையாகப் பிரகடனப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதை தலையாய கடமையாகக் கொண்டு அரசாங்கத்தின் பேரினவாத முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற தமிழர்களும், பேரினவாத உள்நோக்கம் கொண்ட சமாதானத்திற்கான யுத்தம் எனும் பதாகையை ஏந்திக்கொண்டு செல்கின்ற வெண்தாமரை இயக்கத்துடன் இணைந்து செல்கின்ற புத்திஜீவிகளும் இந்நிலைமையை சரியாக விளங்கிக்கொள்வது மிக முக்கியமானதாகும்.

சக்தி

# தீர்வுப் பொதியைத் தீர்மானிக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள்


ஐ. பயஸ் ரஸ்ஸாக்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்றதன் பிற்பாடு நடைபெறப்போகும் முதலாவது தேர்தல் தான் மார்ச் 21ம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல். இத்தேர்தல் குறிப்பாக இரண்டு பிரதான கட்சிகளுக்கும் முக்கியமான தேர்தல் பலப்பரீட்சையாக அமையப்போகின்றது.

பொ.ஐ.மு அரசு இத் தேர்தலுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கும் காரணம் இத் தேர்தலின் முடிவில் இருந்துதான் தீர்வுத் திட்டத்தின் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது. எப்படியாவது தீர்வுப் பொதியை மக்கள் மீது திணித்து விடுவதற்குரிய வழிவகைகளில் ஒன்றாக இத் தேர்தலை கையாள நினைக்கிறது அரசு.

தமிழ், முஸ்லிம்களின் முற்று முழுதான ஆதரவினைப் பெறாத இத் தீர்வினை அமுல் செய்வதற்குரிய கைங்கரியங்களை அரசு மேற்கொண்டு வருகின்றது. அதற்கு இத் தேர்தலும் துணையாய் அமையப் போகின்றது. இத் தேர்தலில் பொ. ஐ.மு அரசு வெற்றிவாகை சூடுமாயிருந்தால், தீர்வு விடயத்திற்கு சிங்களப் பெரும்பான்மை சமூகத்திடம் மாற்றுக் கருத்து இல்லை என்ற நிலைப்பாட்டிலிருந்தே அரசு கருமமாற்றத் தொடங்கும். அத்தோடு சிறுபான்மை மக்களை பரவாய் பண்ணாத தோறணையில் நடவடிக்கை மேற்கொள்ளுமென்பதில் ஐயமில்லை. நடைபெறப்போகும் தேர்தல் ஒரு மினித் தேர்தலாய் இருப்பினும், இதன் முடிவுகள் பல முக்கிய விடயங்களை தீர்மானிக்கப்போகும் ஒன்றாக அமையும்.

இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு காலம் காலமாய் பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருப்பினும் அவை எவையும் குறிப்பிட்ட இலக்கை அடையவில்லை. அவ்வாறு முன்வைக்கப்பட்ட தீர்வுகளிலே முக்கியமானவையாக பண்டா-செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965), ஜே.ஆர் - தொண்டமான் ஒப்பந்தம், திம்புப் பேச்சுவார்த்தை, ஜே.ஆர் - ராஜீவ் இலங்கை இந்திய ஒப்பந்தம், பிரேமா - பிரபா பேச்சு, ஹமீட் - பாலசிங்கம் பேச்சு, பொ.ஐ.மு - புலிகள் பேச்சு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு குறிப்பிடும்படியான தீர்வுகள் எதுவும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவில்லை. நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் சென்ற அரசாங்கங்கள் முயற்சிகள் எடுத்திருப்பினும் அவை எல்லாம் தோல்வியிலேயே முடிவுற்றன.



இதற்கான காரணம் என்ன? மக்களின் தெளிவான அபிப்பிராயங்களை பொருட்படுத்தாத, தீர்க்கமற்ற, செயற்பாடுகளே தீர்வு முயற்சிகளின் பின்னடைவுக்கு காரணமாய் அமைந்ததைக் காண முடியும். அத்தோடு மேற்கூறப்பட்ட முயற்சிகளின் உள்ளடக்கங்கள் குறித்து மக்கள் எவ்விதமான தெளிவுமற்றவர்களாகவே காணப்பட்டனர். ஜனநாயக கோட்பாடுகளின்படி மக்களின் பங்குபற்றுதல் இல்லாத எவ்விதமான முயற்சிகளும் உண்மையான குறிக்கோளை அடைவது கஷ்டமானதாகவே இருக்கும்.

அவசரகாலநிலைமையினைப்பயன்படுத்தி தான்தோன்றித்தனமாய் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், மக்களின் பூரண ஆதரவினைப் பெறவில்லை. இதனால் எய்தப்படவிருந்த குறிக்கோளும் நோக்கை அடையவில்லை.

அரசினால் முன்மொழியப்பட்டிருக்கும் இத் தீர்வு குறித்து அரசின் பங்காளிக் கட்சிகளிடையேயும் கருத்து முரண்பாடு நிலவுகிறது. சிறீமணி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய (லலித்) முன்னணி இத் தீர்வை நிராகரித்து மாற்றுக்கருத்தை முன்வைக்கின்றது. அதைப்போல இதர கட்சிகளும் தீர்வின் பல்வேறு அம்சங்களை விமர்சிக்கின்றன.

இதைவிட சிங்கள பௌத்த பிக்குகள், மகாசங்கங்கள் இத்தீர்வின் முழுமைத்தன்மையை எதிர்க்கின்றன. இது குறித்து முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்ணான்டோ கருத்துத் தெரிவிக்கும் போது ''மகா சங்கங்களின் விமர்சனம் குறித்து அரசு மிகுந்த சிரத்தை எடுக்க வேண்டும். இதற்கு அரசு கட்டுப்பட்டு இருக்கிறது'' எனச் சொல்கிறார். ஆகவே மகாசங்கங்களின் நிலைப்பாடு தீர்வுப் பொதியில் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்யும்.

ஏலவே தீகவாபி பிரச்சினையை காரணமாக வைத்து பல உயர்மட்ட பௌத்த பிக்குகள் அரசு தொடர்பாக அதிருப்தி அடைந்து கொண்டனர். கண்டி நகரில் அண்மையில் நடைபெற்ற சிங்கள எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பௌத்தபிக்குகள் பல ஆவேச உரைகளை முழங்கினர்.

இதற்கடுத்தாற் போல தமிழ்க் கட்சிகள் தீர்வுக்குறித்து ஸ்திரமான நிலைப்பாட்டை இன்னும் வெளியிடவில்லை. தீர்வுப் பொதியில் வடகிழக்கு இணைப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. வடகிழக்கு இணையாத தீர்வை தமிழ்க்கட்சிகள் ஏற்குமா என்பது வினாக்குறியே.

தமிழ்க் கட்சிகளின் அடிமனதில் தீர்வு குறித்து சந்தேகமும், இரண்டு மனமும் கொண்ட நிலை தீர்வு விடயத்தை இழுத்தடித்துக் கொண்டு இருக்கின்றது. வடகிழக்கு இணைப்பு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் விட்டுக் கொடுக்க முடியாத நிலை. இப்படியான தர்ம சங்கடமான

→ 17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வல்லூறுகளுக்கு இரை கொடுப்பதா?

அபூநிதால்

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் சொல்ல விரும்புவது;

1990களின் கொடுமை மிகு தமிழ் - முஸ்லிம் கலவர நிகழ்வுகளுக்குப் பின் வடகிழக்கு எங்குமே காணப்பட்ட சாம்பல் மேடுகளிலிருந்து படிப்படியாக துளிர்த்து வந்த தமிழ் முஸ்லிம் உறவு மருதமுனை, ஓட்டமாவடிச் சம்பவங்களினால் அச்சத்திற்கும் அவலத்திற்கும் உள்ளாகியுள்ள இன்றைய சூழலில் விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இக் கொடூரமிகு நிகழ்வுகள் குறித்தும் - இதன் பின்புலம் குறித்தும், தமிழ் முஸ்லிம் பிளவுக்காக வாய்பிளந்து காத்துக் கிடக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாத வல்லூறுகள் குறித்தும் தெளிவும் தீர்வும் கொண்டிருக்க வேண்டிய அவசியமான இறுதிக் காலகட்டம்தான் இது!

தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பக் கூடியதும் அதனை ஒரு நொடியில் தகர்த்து விடக்கூடிய சக்தி பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரன் அவர்களும் இன்றைய நிலைமை பற்றிய வெளிப்பாட்டில் பின்பற்ற வேண்டிய நடைமுறை சார்ந்த விடயங்கள் மிகவும் முக்கியமாகப் படுகிறது.

முதலில்; முஸ்லிம் ஊர்காவல் படை தொடர்பான விடுதலைப் புலிகளின் மதிப்பீடு அல்லது கருத்து புலிகளால் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்படவேண்டியதே! முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றமும் அதன் தேவையும் ஏன் ஏற்பட்டது என்ற யதார்த்தமான வினாவுக்கான பதில் மிக முக்கியமானது. தமிழ் ஆயுதக் குழுக்களிடமிருந்து முஸ்லிம் கிராமங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலையும், ஆயுத அடக்குமுறையையும் எதிர்கொள்வதற்காகவே, அன்று எந்த வழியும் இல்லாத முஸ்லிம் சமூகத்தால் உருவாக்கப்பட்டதே முஸ்லிம் ஊர்காவல் படை. இந்த ஊர்காவல் படையின் தோற்றத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவும் தமிழ் மக்களுக்கெதிராக ஊர்காவல் படையை பயன்படுத்தும் உள்நோக்கமும் இருந்ததென்பதை மறுப்பதிற்கில்லை. ஆனாலும் அன்று இயக்கங்கள் முஸ்லிம்களை கொன்றும் முஸ்லிம்களின் உடமைகளை அழித்துக்கொண்டும் இருந்த கொடூர சூழலில் - சகல புறக்காரணிகளையும் நிராகரித்துவிட்டு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படையில் சேர வேண்டியிருந்தது.

அன்றிருந்த சூழலில் தமிழ் ஆயுதக் குழுக்களின் அத்துமீறல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் எதிராக முஸ்லிம் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, முஸ்லிம்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தக்கூடிய சுயாதீனமான இராணுவத்தை கட்ட முடியாத பலவீனமான சமூகமாக முஸ்லிம் சமூகம் இருந்ததால் அரசின் வலைக்குள் விழுவது தெரிந்திருந்தும் மாற்றுவழியில்லாத நிலையால்தான் அரசாங்கத்தின் உதவியுடன் ஊர்காவல் படை தோற்றுவிக்கப்பட்டது. இது உண்மை. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த நிலையில் இதன் பின் வந்த சூழலிலும், நடைமுறையிலும், முஸ்லிம் ஊர்காவல் படையினரின் இருப்பில் எம் போன்றவர்களுக்கு எந்தவிதமான உடன்பாடும் இல்லாத நிலையிலும் கூட அச்சமும், பீதியும் நிறைந்த சூழலில், உயிருக்கு உத்தரவாதமில்லாத சூழலில் முஸ்லிம்கள் நிராயுதபாணிகளாக நிற்பதை நோக்கும் போது ஊர்காவல் படையின் இருப்பும் தேவையும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

1985 ம் ஆண்டு தான் ஊர்காவல் படையின் ஆரம்பம் என நினைக்கிறேன். அக்கால கட்டத்தில்தான் பொதுவாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் இயக்கங்களுக்கும் முஸ்லிம்களுக்குமான முரண்பாடுகள் கூர்மையடைந்து அக்கரைப்பற்று, கல்முனை, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா போன்ற பிரதேசங்களில் தமிழ் முஸ்லிம் கலவரங்கள் தீவிரமாக வெடித்தது. தமிழர் முஸ்லிம் வரலாற்றில் பாரிய இடைவெளியை ஏற்படுத்திய முதல் சூழலும் இதுதான், இக்கால கட்டத்துடன்சேர்த்துத் தான். முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றத்தையும் விடுதலைப்புலிகள் பார்க்க வேண்டும்.



1990 ஜூன் மாதத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைக் காலகட்டத்தின் போதும் முஸ்லிம் கிராம இளைஞர்கள் ஆயுதம் தரிப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. ஊர்காவல் படையின் இருப்பு முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு நிரந்தரத் தேவையில்லை. அது வரலாற்றில் ஒரு தற்காப்பு காலகட்டம்தான். முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான ஆயுத அச்சுறுத்தல்கள் முற்றாக நீங்கிய சூழலில் முஸ்லிம் சமூகத்திற்கு ஊர்காவல் படையின் தேவை அவசியமற்றதும், நிராகரிக்கப்பட வேண்டியதும் ஆகும். ஆனால் இன்று முஸ்லிம் சமூகம் விடுதலைப் புலிகளிடம் இருந்தோ ஏனைய ஆயுத அச்சுறுத்தல்களில் இருந்தோ விடுபட்டுவிட்டதா, என்ற வினாவுக்கான பதிலை அளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கும், அதன் தலைவர் அவர்களுக்கும் உரியது. மாறாக, வெறும் விடுதலைப் புலிகளின் துண்டுப் பிரசுரங்கள் மாத்திரம் உத்தரவாதத்தைத் தந்து விடாது.

இன்று தமிழ் முஸ்லிம் மக்களினது ஐக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கும் காரணிகளுள் முஸ்லிம் ஊர்காவல் படையும் ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை. இந்தச் சவாலை நாம் முறியடிக்க வேண்டுமானால், ஊர்காவல் படை தோற்றம் பெற்ற காலகட்டக் காரணிகளை இல்லாமல் ஆக்குவதன் மூலமே சாத்தியப்படுத்தப்படமுடியும். ஆகவே, விடுதலைப் புலிகளும், அதன் தலைவரும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக உறுதியான உத்தரவாதமும் அதனை நடைமுறைப்படுத்தும் உண்மையும் வெளிப்பட்டவுடனேயே முஸ்லிம் சமூகமே முஸ்லிம் ஊர்காவல் படையின் தேவையை மீள் பரிசீலனைக்குட்படுத்தும் - இல்லாமல் ஆக்கிவிடும்.

ஆகவே விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் முஸ்லிம் மக்கள் தொடர்பான பாதுகாப்பு உத்தரவாதத்தை உடனடியாக வழங்குதல் வேண்டும். விடுதலைப் புலிகளின் உறுதியற்ற உத்தரவாதம் தொடரும் வரை சிங்கள அரசும் அதன் படைகளும் முஸ்லிம் இளைஞர்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும், பயன்படுத்துவதை தடுத்து நிறுத்த முடியாது போய் விடும். இதில் சரியான பார்வையை விடுதலைப் புலிகள் பின்பற்றுவது இன்னும் இன்னும் தமிழர் முஸ்லிம் ஐக்கியத்தை வளர்க்கவே உதவும். இல்லையேல் நியாயமான உத்தரவாதம் கிடைக்காதவரை முஸ்லிம் ஊர்காவல் படை இருப்பது என்பதும் விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஊர்காவல் படையை சுடுவதும் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். நேற்று மருதமுனை, ஓட்டமாவடி, நாளை? எந்த முஸ்லிம் கிராமமோ, எத்தனை தமிழ் முஸ்லிம் மக்கள் கொல்லப்படப்போகிறார்களோ என்ற அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது. ஆகவே இதனைத் தவிர்ப்பதற்கு சரியான தீர்வு விடுதலைப் புலிகளிடம் மட்டும் தான் இருப்பதாக நான் நம்புகின்றேன்.

அடுத்தது தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவல் படை தொடர்பான வெறுப்பும், அச்சமும் கொண்டிருப்பது உண்மையே. ஆனாலும் முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றம் தொடர்பான அவசியக் காரணிகள் தொடர்பாக தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் நியாயங்களை பரிசீலனைக்கு கூட உட்படுத்த தயார் இல்லாதவர்களாக இருப்பதாகவே நான் நம்புகிறேன். இத்தோற்றப்பாட்டிற்கு பெரும்பான்மை தமிழ் இனவாதம் ஆதிக்கம் பெற்ற வெகுஜன சாதனங்களின் பிரச்சாரமும் துணை போகின்றன.

முஸ்லிம் ஊர்காவல் படையின் தேவையானது முஸ்லிம்களைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளத்தான் வேண்டும். விடுதலைப் புலிகள் அல்லது அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ, புளொட், முஸ்லிம் கிராமங்களைத் தாக்கும் போதும் முஸ்லிம்களைக் கொல்லும் போது முஸ்லிம்கள் தொடர்ந்தும் நிராயுதபாணிகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமாகாது! ஆகவே விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பான நியாயமான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கிய பின்னும் கூட, தொடர்ந்தும் முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படையில் இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கெதிராக செயற்படின் அது நிச்சயம் தவறானதும், விரோதமானதும் என்பதே பெரும்பான்மை முஸ்லிம்களின் கருத்தாகும் என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

தமிழ் மக்களின் இராணுவமான தமிழ் இளைஞர்களை தமிழ் மக்கள் எப்படிப் பார்க்கின்றார்களோ, அதே போலத் தான் நிராகரிக்க முடியாத சூழலில், முஸ்லிம் ஊர்காவல் படைதொடர்பாக உடன்பாடில்லாத போதும் கூட முஸ்லிம் ஊர்காவல் படையை முஸ்லிம்கள் தங்களுடையவர்களாக பார்க்கும் மனோநிலையை தவறு என்று வாதிட முடியாதல்லவா? இதனை இல்லாமலாக்குவது விடுதலைப் புலிகளினதும், தமிழ் மக்களினதும் கைகளில் தான் இருக்கிறது.

முஸ்லிம் மக்களுக்குச் சொல்ல விரும்புவது - சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே தமிழர்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டில் உரிமை மறுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வந்திருக்கிறோம். இதனை யாரும் மறுக்கமுடியாது! இந்த உண்மையை மறந்து வடக்கு கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் நமது நண்பர்கள் போல் காட்டிக் கொண்டு நம்மீது ஆதிக்கம் செலுத்தும் சிங்களத் தலைமைகளை நம்பி ஏமாந்து கொண்டு ஒடுக்கப்படும் தமிழ் மக்களுடன் விரோதம் பாராட்டுவது வடகிழக்கு முஸ்லிம்களுக்கு ஆரோக்கியமன்று. ஆகவே, முஸ்லிம்கள் தமிழ் மக்களுடனும், தமிழ் முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து போராடுவதன் மூலம் தான் எதையாவது பெற்றுக்கொள்ள முடியும் என்பதை எவரும் மறந்து விட முடியாது. (அமைச்சர் பதவிகளை அல்ல.) இன்று நடைபெறும் தமிழ் மக்களின் போராட்டம் தோல்வியில் முடியுமேயானால், அதற்காக தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்கும் சிங்களத் தலைமைகளுடன் இணைந்து கொண்டு அதனைப் பலவீனப்படுத்துவார்களேயானால், இந்த நாட்டில் சிறுபான்மை இன, உரிமைப் போராட்ட வரலாற்றில், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம்கள் துரோகமிழைத்து, முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் துரோக மிழைத்தவர்களாகி விடுவோம். இந்த யதார்த்தத்தை முஸ்லிம்களும், முஸ்லிம் காங்கிரசும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் ஓட்டமாவடியில் நடைபெற்ற சம்பவம் ஒரு பொலிஸ் காவலரணின் அண்மையில்தான் நடைபெற்றிருக்கிறது. தமிழ் மக்களைக் கொன்ற விஷமிகளை உடனடியாக அடையாளம் காணல் வேண்டும். தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்குமிடையே விரோதத்தைத் தூண்டி தங்களுடைய தொடர்ச்சியான ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள சிங்களப் பேரினவாத வல்லூறும், அதற்குத் துணையாக ஒரு சில தமிழ் முஸ்லிம் அரசியல் பித்தலாட்டக்காரர்களும் தக்க தருணம் பார்த்து நிற்கிறார்கள் என்பதை முஸ்லிம்கள் மறந்து விடக்கூடாது.

கடந்த 27 பெப்ரவரி 97 இல் விடுதலைப் புலிகளின் பிரதேசத் தலைவர்களுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையானது கடந்த 90களின் பின் ஏற்பட்ட முதலாவது விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் சந்திப்பாகும். இது வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் உறவில் ஒரு படி முன்னோக்கிய செயற்பாடாகும். இதனை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்ல இருதரப்பும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். சமூகச் சூழலை தகர்த்தெறிய காத்துக் கிடக்கும் வல்லூறுகளுக்கு நாம் ஒருபோதும் வாய்ப்பு வழங்கிவிடக்கூடாது.

**தமிழ் முஸ்லிம் மக்களின் எதிர் காலம் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தில் தான் இருக்கின்றது. இல்லாது விடின் நிறைய நாம் இழந்து தான் ஆக வேண்டும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் அரசியலை விபச்சாரப் படுத்திய மலையக அரசியல் வியாபாரிகள்

ச. பாலகிருஷ்ணன்.

இலங்கையிலே மற்றுமொரு தேர்தல் நடைபெறவிருக்கிறது. உள்ளூராட்சி சபைகளுக்காக நடைபெறவிருக்கும் தேர்தலில் மிகவும் ஆரவாரமானதும் வன்முறைகள் நிறைந்ததுமான தேர்தல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற ஒரே இலக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் களத்தில் பல்வேறு கூட்டணிகள் உருவாகியுள்ளன. மலையக அரசியலைப் பற்றி ஒரு விமர்சனக் கண்ணோட்டமாக இக்கட்டுரை அமைகிறது.

தேர்தல் என்பது சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும், நடைபெறுவதை உத்தரவாதப் படுத்த வேண்டியது அரசினதும் மக்களினதும் கடமையாகும். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதன் மூலமாகவே பிரஜைகள் தமது சுயநிர்ணய உரிமையை முறையாகப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆனால் இலங்கையின் தேர்தல் மரபுகளானது பணப் பிரயோகத்தின் மூலமும், பயமுறுத்தல், துப்பாக்கிப் பிரயோகம், கள்ள வாக்குப் போடுதல், வன்முறையைப் பிரயோகித்தல் போன்ற பல்வேறு நாசகார வேலைகளின் மூலமும் பல தசாபதங்களாக இலங்கையின் தேர்தல் மரபுகளானது மாசுப்படுத்தப்பட்டே வந்துள்ளது. இந்நிலைமை காலத்துக்குக் காலம் அதிகரித்து வருகின்றமையை கடந்த இரண்டு மூன்று தசாப்த கால நடைமுறைகள் நிரூபிக்கின்றன. இவற்றை விட இனவாதம், பிராந்திய வாதம், சாதியம் போன்ற ஜனநாயக விரோதப் பிரச்சாரங்களின் மூலமாகவும் மக்களின் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டே வந்துள்ளன.

ஒவ்வொரு பிரஜைக்குமுள்ள சுயநிர்ணய உரிமையை ஒரு ஜனநாயக சமுதாயத்தில் பயன்படுத்துவதற்கு தேர்தல்களே களமாக அமைகின்றன. தேர்தல் பிரச்சாரங்கள் ஜனநாயக மரபுகளுக்கு இணங்க அறிவியல் ரீதியான கருத்தாடல்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்ற சகல தரப்பினரும் தங்களது கருத்தியல் நிலைப்பாடுகளையும் அரசியல் வேலைத்திட்டங்களையும் கொள்கை விளக்கங்களையும் பிரச்சாரப்படுத்தும் பொழுது மக்கள் தங்களுடைய வாக்குகளை அளிப்பது தொடர்பாக தாமாகவே சுயமாக நிர்ணயித்துச் செயற்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது. ஆனால் இலங்கையின் அரசியல் களத்திலே கடந்த பல தசாப்தங்களாக இம்மாதிரியான சூழ்நிலை இல்லாதொழிக்கப்பட்டிருப்பதோடு, பெரும்பாலும் ஜனநாயக விரோத நடைமுறையினூடாகவே தேர்தல் பிரச்சாரங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டும் வருகின்றன. பெரும்பாலும் ஆட்சியிலுள்ள அரசியல் கட்சியே தேர்தல்களில் ஊழல்களை விளைவிப்பதில் முன்னணி வகித்தும் தந்துள்ளன. மேற்கூறப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகள் முற்றிலும் மீறப்பட்ட அரசியல் நடைமுறைகளுக்கு மலையக அரசியல் சிறந்த உதாரணமாக அமைகின்றது. அரையடிமை வாழ்விலிருந்து இன்னும் விடுபடாத மலையக சமுதாயத்தின் அறியாமையானது, மலையக அரசியல்வாதிகளுக்கு பாரிய மூலதனமாகத் தொடர்ந்தும் பயன்பட்டு வருகின்றது. ஒரு புறத்தில் இன உணர்வுகளைத் தூண்டி விட்டு, மறுபுறத்தில் சந்தர்ப்பவாத ரீதியில் வாக்குறுதிகளை அள்ளி வீசி இவர்கள் நடத்தும் அரசியலின் தன்மையானது இத் தேர்தலிலும் தொடர்கின்றமையை தெளிவாக இனங்காணலாம்.

### இ.தொ.காவின் அரசியல்:

17 வருட கால ஐ.தே.கட்சியின் பேரினவாத ஜனநாயக விரோத ஆட்சியைப் பாதுகாப்பதன் மூலம் தமக்கு வழங்கப்பட்ட அற்ப சொற்ப சலுகைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அக்கட்சிக்குத் தாலாட்டுப் பாடி வந்த தொண்டமான், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இருவாரங்களுக்கு முன்னர் ஐ.தே. கட்சியின் பக்கமிருந்து இரவோடிரவாக பின் கதவு வழியாக பொதுஜன முன்னணியின் அமைச்சராக மாறினார். 17 வருடங்களாக மேடை மேடைகளாக ஐ.தே.கட்சிக்கும் அதன் தலைமைகளுக்கும் வாழ்த்துப் பாடியதோடு, அக்கட்சியின் தமிழர் விரோத கொடூரங்களுக்கு எல்லாம் முகமூடியாகத் திகழ்ந்த தொண்டமான், 1994 ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே ஐ.தே.கட்சிக்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, பட்டப்பகலிலே நுவரெலியா நகரில் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் தொழிலாளர்களை ஒன்று கூட்டி, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் ஒரு பொய்ப் பத்திரத்தை கையளித்து, தொழிலாளர்கள் குடியிருக்கின்ற குடியிருப்பும் வீட்டுத் தோட்டக் காணியும் சொந்தமாக்கப்பட்டு விட்டது' என்னும் பொய்யை மக்களின் முன் கூறியதன் மூலம் தொண்டமானுடைய 50 வருட கால அரசியல் யதார்த்தத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

17 வருட காலமாக ஐ.தே.கட்சியின் தலைவர்களை வாயாரப் புகழ்ந்து கொண்டிருந்து விட்டு அவ்வணியிலிருந்து பொதுஜன முன்னணிக்கு வந்ததன் பின்பு 'நாங்கள் நம்பிக்கையுடன் ஒத்துழைத்தோம். அவர்கள் எங்கள் உரிமைகளைத் தர மறுத்து விட்டார்கள்' என்று தன்னுடைய கபட அரசியலை நியாயப்படுத்த முயன்றவர் தொண்டமான். இப்பொழுது பொதுஜன முன்னணியுடன் இணைந்ததன் காரணமாக 17 வருடங்களாக அவர் தூற்றிய வாயினாலே இப்பொழுது சந்திரிகாவை புகழ்ந்து வருகின்றார். சுவரொட்டிகள் மூலமாகவும் மேடைப் பேச்சுகள் மூலமாகவும் கடந்த் 2 வருடங்களாக சநதுர்காவின் அரசு மேற்கொண்ட தமிழர்களுக்கெதிராக ஒடுக்கு முறைகளையும் படுகொலைகளையும், விசேடமாக மலையக மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பொலிசாரின் அட்டகாசங்களையும் மூடி மறைத்து புகழாரம் பாடுவதன் மூலம் அப்பாவி மலையக வாக்காளர்களை மீண்டுமொருமுறை ஏமாற்ற முனைந்திருப்பது தெளிவாகின்றது. தன்னுடைய பேரனை வாரிசாக்குவதை நோக்கமாகக் கொண்டு அவருக்குத் தேவையான அரசியல் அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பது தான் தொண்டமானின் ஒரே எதிர்பார்ப்பு என்பது யாவருமறிந்த விடயமே. சலுகைகளுக்கு மண்டியிடுவதன் மூலமும் ஒரு இனத் தனித்துவத்தைக் காட்டிக் கொடுப்பதன் மூலமும் கடந்த நான்கு தசாப்தங்களாக மலையக மக்களுக்கு ஒரு பெரும் சாபக் கேடாக இவரது அரசியல் மாறியிருக்கிறது.

### மலையக மக்கள் முன்னணியின் அரசியல்:

மறுபுறத்தில் ஐ.தே.க. அரசு இ.தொ.காவின் ஒத்துழைப்புடன் மலையகத் தமிழ் இளைஞர்களுக்கெதிராக மேற்கொண்ட இனவெறி ஒடுக்குமுறைகளை இ.தொ.கா.வுக்குள்ளிருந்தே எதிர்த்ததன் காரணமாக இ.தொ.காவுடன் முரண்பாட்டை ஏற்படுத்திக்கொண்டவர் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அவர்கள்.

இருப்பினும் 1989ஆண் ஆண்டுப் பொதுத்தேர்தலிலே இ.தொ.காவின் சார்பில் போட்டியிடச் சந்தர்ப்பம் கொடுக்கப்படாததன் காரணத்தினால் தனிக்கட்சியை ஆரம்பித்த சந்திரசேகரன், இ.தொ.கா. மூலம் ஐ.தே.கட்சிக்கு சென்றடையும் மலையக மக்களின் வாக்குகளைக் குறைப்பதற்கு உடந்தையாக செயற்படுவதற்கு இவருக்கு பணமும், வேறு உதவிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியால் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட்து. தமக்குத் தேர்தலில் பணம் கொடுத்ததற்கு நன்றிக்கடனாக தன்னுடைய பாராளுமன்ற ஆதரவை பொ.ஐ. முன்னணி ஆளும் கட்சியாக உருவாவதற்கு வழங்கினார்.

இதன் மூலம் பிரதி அமைச்சர் என்ற சலுகையும் இவருக்கு வழங்கப்பட்டது. கடந்த இரண்டரை வருடங்களாக பொ.ஐ.மு. முன்னெடுத்துச் சென்ற அனைத்து தமிழர் விரோத அடக்கு முறைகளையும் உணராதவர் போன்று மௌனம் சாதித்ததன் மூலமாக, இவ்வரசின் இனப்படுகொலைக் கொள்கைக்கு ஒரு ஆதரவாளராக மாறியுள்ளார். பல நூற்றாண்டுகளாக அபிவிருத்தி அடைத்து வந்த யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசாரத்தை தகர்த்தெறிந்த 'ரிவிரச' படையெடுப்பின் வெற்றியை கொண்டாடும் முகமாக ஜனாதிபதி செயலகத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவிற்கு சமூகமளித்தன் மூலம் இவரின் தமிழ் உணர்வும் கடமைப்பாடும் இவருக்கு வழங்கப்பட்ட அமைச்சரவை சலுகைக்களுக்காக, பேரினவாத அரசிடம் தாரைவார்த்துக்கொடுக்கப்பட்டுவிட்டதென நிதர்சனமாக உணர்த்தியவர் சந்திரசேகரன்.

சந்திரசேகரனின் இந்த அரசியல் பித்தலாட்டமானது தனது அரசியல் குருவான தொண்டமானின் அரசியல் பித்தலாட்டத்தை மிஞ்சக்கூடிய வகையில் வளர்ந்து வருகின்றது என்பது தெளிவாகின்றது. எனினும், அரசிடம் மண்டியிட்டுக் கிடக்கும் சந்திரசேகரன், பொ.ஐ.முவுடன் இணைந்து இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பெரும் தடையாக தொண்டமான் பொ.ஐ.மு. உறவு அமைந்து விட்டது. பொ.ஐ.முன்னணியைப் பொறுத்தளவில் அதற்கு மலையகத் தமிழ் மக்களின் நலனில் எவ்வித அக்கறையும் இல்லையென்பதுவும், அவர்களுக்குத் தேவை மலையக மக்களின் வாக்குகள் மட்டுமே என்பதும் யாவரும் அறிந்த விடயமே. எனவே அவ்வாக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ''ஊழியம் செய்வதில்'' சந்திரசேக்ரனை விட தொண்டமான் திறமைசாலி என்பதுவும் பொ.ஐ.முவுக்கு நன்கு தெரிந்த விடயமாகும். எனவே இம்முறை ம.ம.மு. தனியாகப் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மலையக மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக அவர்களின் இன உணர்வுகளைத் தூண்டும் அரசியலிலே மீண்டும் இறங்கியுள்ளார்கள். சலுகைக்களுக்காக பேரினவாத அரசாங்கத்திற்கு துணை போகின்ற அதே வேளை மக்கள் மத்தியில் அதற்கு மாறாக இனவுணர்வுகளை கொட்டி வளர்க்கின்ற அரசியலை நடாத்துகின்ற இவர்களின் கபடத்தனத்தை மக்கள் சரியாக இனங்காண்பது அவசியமானதாகும். ஒரு புறத்தில் யுத்தக் கெடுபிடிகளின் மூலமும், பொலிசாரின் அட்டகாசங்கள் மூலமாகவும் தமிழ் மக்களை ஒடுக்க முயலுகின்ற அதேவேளை தீர்வுப் பிரேரணை எனும் போர்வையில் ''சமாதானத்திற்கான யுத்தம்'' எனும் செயற்பாட்டை ஒத்த செயற்பாடாகவே மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

### செல்லச்சாமியின் நாடகம் :

தொண்டமானுடன் முரண்பட்டுக் கொண்டு தொண்டமானுடைய சதி முயற்சி மூலம் அவரது பேரனை இ.தொ.காவின் செயலாளராக்குவதற்காக அதிலிருந்து வெளியேற்றப்பட்ட செல்லச்சாமி அவர்கள் கடந்த தேர்தலிலே பொ.ஐ.முவுடன் இணைந்து செயற்பட்டார். எனினும் தமிழர்களின் வாக்குகளை கவர்வதை நோக்கமாகக் கொண்டுள்ள பொ.ஐ.முவுக்கு செல்லச்சாமியின் ஆதரவை விட தொண்டமானின் ஆதரவு முக்கியமாக அமைந்து விட்டது. அறியாமையிலிருக்கும் மக்களை தாரைவார்த்துக் கொடுத்து அரசியல் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதில் சாணக்கியம் ப்டைத்த தொண்டமான் அவர்களுக்கு இந்த

→19



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஜயமான, கஜநாயக்கா கொலை: மோசமான தவறு

காங்கேசன்துறையின் இரண்டு தொழிற்சாலைத் தளத்திலும் கோபமும் துக்கமும் கொப்பளித்தன. ஜயமானவினதும், கஜநாயக்காவினதும் கொலைகளைக் கண்டித்து துண்டுப்பிரசுரம் வெளியிட வேண்டுமென்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அனுதாபச் செய்தி அனுப்ப வேண்டும் என்றும் அங்குள்ள தொழிலாளர்கள் பெரிதும் விரும்பி நின்றனர். ஆனால் இந்த விருப்புணர்வும் அச்சமேலீட்டால் அமிழ்ந்து விட்டது. காட்டிக்கொடுப்பவர்கள் உள்ளுக்குள்ளேயே இருந்த நிலையில் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் தலைவர்களில் ஒருவராகத் தங்களையும் இனங்காண யாருமே அஞ்சி முன்வரவில்லை. சிமெண்ட் தொழிலாளர்களால் வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் பன்னிரண்டு விடுதலைப் புலிகள் இறந்ததிற்கு வருத்தம் தெரிவித்திருந்தது. கொலையுண்ட சிங்களவர்களைப் பற்றி அது குறிப்பிடப்படவில்லை.

ஐந்தாம் திகதி இரவு கொலைசெய்யப்பட்ட மற்றொருவர் ஒப்பந்தத்திற்கு பிறகு சுண்ணாகத்தில் தனது பேக்கரிக் கடையைத் திரும்பவும் தொடங்க வந்திருந்த ஒரு வயதுபோன சிங்களவராவார். இந்தச் சிங்கள பேக்கரிக்காரர் தன்னை வந்து சந்தித்ததை பற்றி அவ்வூர் உதவி அரசாங்க அதிபர் நினைவு கூறுகிறார். அவர் தனது அலுவலகத்தில் அலுவலில் மூழ்கிப்போயிருந்த போது சிரந்தாழ்த்தி வணங்கியவாறு ஒருவர் அவரை அண்மித்தார். பார்த்தால் நிறைய கஷ்டங்களை அனுபவித்தவர் போல் தோன்றியது. வந்த மனிதர் அவரை 'மாத்தயா' (ஐயா) என்று விளித்தார். யாழ்ப்பாணத்தில் அந்த நேரத்தில் சிங்களம் பேசப்படுவதைக் கேட்டு வியப்புற்ற உதவி அரசாங்க அதிபர் அந்த மனிதரின் கதையைக் கவனமாகக் கேட்டார். 1983 இனக்கலவரத்திற்குப் பிறகு தான் சுண்ணாகத்தில் தனது தொழிலைக் கைவிட்டு தென்னிலங்கைக்குப் போக நேர்ந்து விட்டதாம். சிறிய தொழிலை வைத்து நடத்துபவர் என்ற முறையில் அவருக்கு வாழ்க்கையைக்கொண்டு நடத்த வேறு வழிவகை தெரியாததாலும் சுண்ணாகத்திற்கு திரும்பியும் வந்து தனது தொழிலைத்திருப்பியும்தொடங்குவதைத்தவிர வேறு மாற்று வழி இல்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார். அந்த ஒரு பாவமும் அறியாத அப்பாவி மனிதர் கொலை செய்யப்பட்டது குறித்து அந்த உதவி அரசாங்க அதிபர் ஆழ்ந்த வருத்தமுற்றார்.

ஐந்தாம் திகதி இரவு வல்வெட்டித்துறையில் கொலைசெய்யப்பட்ட ஒரு சிங்களக் காவல்துறை அதிகாரியைப்பற்றிய குறிப்பு கீழே தரப்படுகிறது. அந்தப்பகுதியில் குடியிருந்த ஒரு தொழில் துறை சார்ந்தவர் ஒருவர் கூறிய பிரகாரமே இந்தக் குறிப்பு கூறப்படுகிறது. ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டதை அடுத்து அங்கு பணிபுரிந்த சில சிங்கள பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மாலை வேளைகளில் அங்குள்ள உள்ளூர் 'பார்' ஒன்றுக்கு குடிக்கவும் சுமுகமாகப் பழகவுமாக அங்கு வருவதுண்டு. அப்படி ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் அன்று 5ம்திகதி இரவு அந்த 'பாரில்' இருந்திருக்கிறார். இரவு எட்டுமணியளவில் விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசையும் இன்னொருவரும் பாருக்குள் நுழைந்து அந்தப் பொலிஸ் உத்தியோகஸ்தரை இரக்கமேயின்றித் தாக்கத் தொடங்கினார்கள். பின் அவர் வெளியே இழுத்துவரப்பட்டு ஒரு மரக்கட்டையால் அடித்துக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையைச் செய்ததும் மற்ற சிங்களவரைக் கொன்றதும் 'பொதுமக்களே' என்றும் பன்னிரண்டு விடுதலைப் புலிகள் தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சியால் அவர்கள் பெரிதும் ஆத்திரம் கொண்டிருந்தனர் என்றும், மறுநாள் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இத்தகைய மனிதாபிமானமற்ற செயலுக்குத் தாங்களே பொறுப்பாளிகள் ஆக்கப்பட்டது குறித்து வல்வெட்டித்துறை மக்கள் ஆழந்த மன வேதனையுற்றனர்.

உண்மையில் இந்தக்கொலைகளை யார் செய்தார்கள் என்று தெரியவில்லை என யாழ்ப்பாணத் தினசரிகள் செய்தி வெளியிட்டன. இதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் அப்பாவிச் சிங்கள மக்கள் நிறையபேர் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் நீண்ட காலம் வாழ்ந்திருந்த 35 சிங்களவர்கள் துப்பாக்கிக்கு இரையாகினர். மட்டக்களப்பின் விஷேட இலக்குப் படைத் தலைவர் நிமால் சில்வா நிலக்கண்ணி வெடியால் கொல்லப்பட்டார். அதே வாகனத்தில் பயணம் செய்த மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனிமுத்துவும் கொல்லப்பட்டார். இதனையடுத்து சிலதினங்களுக்குள் மாத்திரம் மொத்தம் சுமார் 200 சிங்களப் பொது மக்கள் கொலைசெய்யப்பட்டதாக பி.பி.ஸி அறிவித்தது.

ஒப்பந்தம் நிகழ்ந்தேறிய பிறகு சிங்களப் பொது மக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதை வரவேற்கிறோம் என்றும் அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படமாட்டாது என்றும் விடுதலைப் புலிகளின் துணைத்தலைவர் மாத்தயா இலங்கையின் தேசிய பத்திரிகையான 'வீக் எண்டில்' தெரிவித்திருந்தார். இதையும் நாம் இப்பொழுது இந்தச் சம்பவங்களுடன் தொடர்புப்படுத்திப் பார்க்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான தமிழர்கள் இந்தக் கொலைகளைத் தமது விருந்தோம்பும் பண்புக்கு ஒவ்வாத நடவடிக்கையாகவே கருதினர். ஒப்பந்தத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத்திற்கு வந்த சிங்களவர்கள் பலரும் தமிழர்களைத் தங்கள் உடன் பிறப்புக்கள் என்றும் அவர்களுக்கு இதுகால வரையில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதி தமிழர்களைப் புரிந்து கொள்ளவும் இதுவே தருணம் என்ற உணர்வுடனும் தான் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர் என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பல மாதங்களாகத் தங்கள் கைகளாலேயே உணவு ஊட்டி உபசரித்த இராணுவ வீரர்களை கொலை செய்தமை மகத்தான தவறு என்று விஷேசமாக பல பெண்கள் உணர்ந்தனர். இன்னுமொரு சம்பவத்தில் அரசுக்கு சொந்தமான ரூபவாஹினியைச்சேர்ந்த நான்கு அலுவலர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டதாகவும், அவர்கள் கொலையுண்டிருக்கவேண்டும் என்றும் கருதப்பட்டது. சுபாஷ் ஹோட்டலில் தங்களின் தேனிலவைக்கழித்துக்கொண்டிருந்த தமிழர்களான ஓர் ஆங்கில விரிவுரையாளரும் அவரது துணைவியும் அறை அறையாக புகுந்து சிங்களவர்களைத் தேடிக் கொண்டிருந்த ஆயுதந் தாங்கிய கும்பலால் மூர்க்கத்தனமாகப் படுக்கையிலிருந்து எழுப்பப்பட்டனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளைக் கொழும்பிற்குக் கொண்டு செல்லும் முயற்சியினால் ஏற்படப்போகும் விளைவுகளைப் பற்றி தீக்ஷித்திற்கு முன்னரேயே தெரிந்திருந்ததால் அவரால் செய்து முடித்திருக்கக்கூடிய காரியத்தை - தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த முயற்சியைத் தடுப்பதை அவர் ஏன் செய்யவில்லை என்ற கேள்வியை ஒருவர் கேட்கலாம். ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட இந்திய அமைதிப்படை அதிகாரியின் கூற்றுப்படி, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களைக் கொழும்பிற்குக் கொண்டு செல்வதைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளைக் கைவிட்டு விடுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது புதுடில்லியிலிருந்து தான். புதுடில்லி அந்த ஆணையை தனது பொறுமையை இழந்து தனது மறுபுறத்தைக் காண்பிக்க பிறப்பித்தது என்பதும், அது தீக்ஷித்தின் முடிவு அல்ல என்பதும் இதிலிருந்து அர்த்தமாகிறது. திலீபனின் மரணத்தின்போது அச்சந்தர்ப்பத்தில் தாம் கோரியதை பெருமளவில் பெற்றுக்கொண்டுவிட்ட புலிகள் ஏன் இந்த மாதிரியாக எதிர்பாராத விதத்தில் செயற்பட்டார்கள்? ஏதோ ஒரு வழியில் ஒப்பந்தத்தில் அதிருப்தி கொண்டு விட்ட இரு தரப்புக்கும் இடையில் நின்று தொடர்ந்து இருபக்கத்திற்காகவும் வாதம் நடத்திக்கொண்டிருந்த தனது பங்கினைக் குறித்து இந்தியரும் ஒரு வேளை சலிப்படைந்திருக்கக்கூடும்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பதினேழு விடுதலைப் புலிகளும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் ஒக்டோபர் 5ம்திகதி இரவிலிருந்து சிங்களவர்கள் கொலைசெய்யப்பட்டதும் சேர்ந்து ஒப்பந்தத்திற்கு விடுக்கப்பட்ட பகிரங்கமான நேரடிச் சவாலாகும். கைநழுவிப் போய்க்கொண்டிருக்கும் சூழ்நிலைகளின் மத்தியில் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் சும்மா இருப்பது குறித்து இந்திய அரசு குற்றஞ்சாட்டப்பட்டு ஏற்கெனவே அது மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருந்தது. இனியும் இந்திய அரசு எதுவும் செய்யாமல் சும்மா இருந்தால் இந்தியா நிறைவேற்றும் என்று நம்பி அமுல்படுத்தவேண்டிய பல விஷயங்களுக்காக ஒப்பந்தத்திற்காகத் தம்மைப் பணயம் வைத்திறங்கிய இலங்கை அரசாங்கத்தைக் கைகழுவி விட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும்.



இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.ஸி.பந்தும், இந்திய இராணுவத் தளபதி கிருஷ்ணா சுந்தர்ஜி அவர்களும் உடனேயே கொழும்பு வந்து சேர்ந்தனர். இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தொழிக்க திட்டம் கொண்டிருப்பதாக சிலோன் டெய்லி நியுஸ் அக்டோபர் 9ம் திகதிய ஏட்டில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது. இந்தியா ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ள வந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அது செயற்பட்ட விதமும், அதன் விளைவாக ஏற்பட்ட துக்ககரமான விளைவுகளும் பின் விளைவுகளும் தான் கேள்விக்குரியன.

தமிழர்களிடையே ஓரளவு பிரபலமடைந்திருந்த ஒரு சூழ்ச்சித் தந்திரோபாய கொள்கையைப் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது ஜனாதிபதி ஜயவர்த்தன மிகவும் தந்திரமான பேர்வழி. அவர் இந்தியாவுடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டு முடிந்தவுடன தன் காரியங்களை திறம்பட செய்வதில் இறங்கி விட்டார். அவரின் தந்திரோபாயத்தின் உச்சக்கட்டம் தான் பன்னிரண்டு விடுதலைப் புலிகளின் தற்கொலையும் இதனால் இந்திய தமிழர்களுக்கு எதிராகப் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமாகும். இது ஒரு சூழ்ச்சி வலை. இலங்கை இராணுவத்தால் செய்து முடித்துக் கொள்ள முடியாத செயலை இந்தியாவே செய்யும்படியான சூழலை உருவாக்கி இந்தியாவை இந்தச் சூழ்ச்சி வலைக்குள் சாதுரியமாக விழச் செய்தார் ஜனாதிபதி ஜயவர்த்தன. 1988 டிசம்பரிலிருந்து பதவியை விட்டிறங்கிய ஜனாதிபதி ஜயவர்த்தன அவர்களும் இந்த முதற் கொள்கையை இவ்வாறு ஆதரித்தது புரிந்து கொள்ளத்தக்கதே.

இவ்வாறான சூழ்ச்சித் தந்திரோபாயக் கொள்கைகளில் பலவீனமான அம்சங்கள் நிறையவே உள்ளன. ஏனெனில் மனிதச் செயற்பாடுகளில் தெரிய அல்லது விளங்க முடியாத விடயங்கள் நிறைய இருக்கின்றன. இதனால் ஒரு கொள்கைக்கு நேர் எதிரான இன்னுமொரு சூழ்ச்சிக் கொள்கையையும் எளிதில் உருவாக்கிக் கொள்வதும் சாத்தியமே. உதாரணத்திற்கு இப்படியும் சொல்லலாம்: இலங்கை வாழ் சிங்களவர்களும் தமிழரும் ஸ்திரபுத்தி அற்றவர்களாகவும் பேச்சுவார்த்தை கொண்டு நடாத்துவதில் நம்ப முடியாதவர்களாகவும் இருக்கக்கண்ட இந்தியர்கள் அவர்களைத் தவறான வழிக்கு இட்டுப் போகும் வலையில் சிக்க வைத்திருக்கலாம். இப்படியாக இரு தரப்பினருக்கும் இந்திய அரசின் மேலாதிக்கம் தவிர்க்க முடியாத தாகியது. விசேஷமாக ஊன்றிய நலன்களைச் சார்ந்த மற்றைய சக்திகளின் செயற்பாடுகளைத் தவிர்த்து விட்டு பார்த்தால், தமிழ் சமூக அரசியலின் உள்ளே உருவாகி வந்த நிலைமைகள் ஒப்பந்தத்தை ஏற்கெனவே சிக்கலுக்குள் வீழ்த்தி விட்டிருந்தன. மோதலில் இறங்கிய எந்தப் பகுதியினருக்கும் சம்பவங்களை கட்டுக்குள் கொண்டு வரவோ அல்லது கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவோ திறமையோ, வழிவகைகளை வகுத்துக் கொள்ளும் திறனோ இல்லாமல் இருந்தது என்பது சம்பவங்களில் இருந்து தெளிவாகிறது. தேவை ஏற்படுமானால் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க சாதுரியத்திறமையோடு கூடிய வழி முறைகள் தன்னிடம் இருப்பதாக இந்திய இராணுவத்தின் தென் பிராந்தியத் தலைவர் லெஃப்டினன்ட் ஜெனரல் தெபீந்தர் சிங் ஜூலை 29ம் திகதி ஒப்பந்தத்தையடுத்து விடுத்த அறிக்கைகளிலிருந்து இத்தகைய நம்பிக்கை உருவானது உண்மையே. ஆனால் அக்டோபர் 10ம் திகதியிலிருந்து செயற்பட ஆரம்பித்த இந்திய இராணுவத்தினரின் போக்கும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட உயிரிழப்புகளும் பொருள் நாசங்களும் நுட்பமான சத்திர சிகிச்சை ஒன்றினை உறுதி கூறி விட்டு ரம்பம் கொண்டு சிகிச்சை நடத்திய ஒரு சித்திரத்தையே மனதில் தோற்றுவிக்கின்றது. தமிழ் பிரதேசங்களில் குறிப்பாகப் பொது மக்கள் வாழ்ந்த பகுதிகளில் ஷெல் தாக்குதலை நடத்தியும் குண்டுகளை வீசியும் நடவடிக்கை மேற்கொண்ட இலங்கை அரசின் இராணுவப்போக்கைக் கடுமையாக விமர்சித்த இந்தியத் தூதரகம், அதே போன்ற செயல்களை இந்திய இராணுவம் செய்த போது சம்பவங்களை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்ததே தவிர அவற்றைக் கட்டுக்குள் கொண்டு வரும் எதனையும் செய்து கொள்ள முடியாத நிலையிலேயே இருந்தது.

www.tamilarangam.net



# புலிகளுடனான பேச்சுவார்த்தை: நடந்தது என்ன?

**பெப். முதல் வாரத்தில் ஓட்டமாவடி, மாவடிச்சேனை பகுதிகளில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள் இனிமேலும் தொடராதிருப்பதை உறுதி செய்ய வேண்டுமென்பதற்காக கல்குடாத் தொகுதி முஸ்லிம் பள்ளிவாசல்கள் நிறுவனங்களின் சம்மேளனம் பெப். 12ந்திகதியன்று ஓட்டமாவடி ஜூம்மா மஸ்ஜிதில் அவசர அவரசமாகக் கூடியது. இச்சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தையே இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவும் என அக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அபிப்பிராயப் பட்டதன் காரணமாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வடிப்படையில் பிரேதச சபை உறுப்பினரும், திடீர் மரண விசாரணை அதிகாரியுமான ரி.பி.ஜலால்தீன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடினார். அவர்களும் பூரண ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். பெப். 26ம்திகதி இலுப்படிச் சேனையிலுள்ள விடுதலைப்புலிகள் காரியாலயத்தில் இப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதில் கலந்து கொண்ட எஸ்.எல்.எம்.ஹனீபா அவர்கள் இங்கு எழுதுகிறார்.**

கடந்த பெப். 26 அன்று பகல் 12.30 மணியளவில் நாம் இலுப்படிச் சேனையில் அமைந்திருந்த புலிகளின் காரியாலயத்தைச் சென்றடைந்தோம். குளிர்தரும் மரங்கள் செறிந்த அந்த வீட்டில் ஏற்பாடுகள் அனைத்தும் வெகு கச்சிதமாகவிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) வாகனத்திலிருந்து இறங்கிய எம்மையெல்லாம் கீதன் அவர்களும் கார்த்திக், ராம், விசு, மார்ஷல், ஆகியோரும் வரவேற்று அழைத்துச் சென்றார்கள். வீடியோக் கமராக்கள் இரண்டு இயங்கத் தொடங்கியது. அவ்வப்போது 'க்ளிக்'கள் வேறு. எல்லா வசதிகளும் கொண்ட ஒரு நகரச்சூழல் உள்ளே அமைந்திருந்தது. ஏற்பாடுகள் அனைத்தும் கன கச்சிதமாகச் செய்திருந்தார்கள். பேச்சுவார்த்தை மேசையில் பிரபாகரனின் படம். சுவரில் பிரமாண்டமான கிட்டுவின் படம் மாட்டப்பட்டிருந்தது. கதிரையில் அமர்ந்ததும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அறிமுகம் செய்து வைத்தார்கள். அத்துடன் எமது பேச்சுவார்த்தை இவ்வாறே அமையவேண்டும் என்றும் சொன்னார்கள்.

தமிழ் முஸ்லிம் மக்களின் பரஸ்பர உறவும் புரிந்துணர்வும் பற்றியதே எங்கள் பேச்சுவார்த்தையின் மையமாகும். கீதன் அவர்களுடைய வரவேற்புரையைத் தொடர்ந்து நான் பேச்சை ஆரம்பித்தேன்.

''இத்தகைய அசம்பாவிதங்கள் தமிழ் முஸ்லிம் கிராமங்களில் ஏற்படும் போது அப்பாவித் தமிழ் முஸ்லிம் மக்கள் பலியாகக் கூடாது. இதனைத் தவிர்த்துக் கொள்ள இரு தரப்பினரும் ஒன்று பட்டுச் செயல்படவேண்டும்'' என்ற எனது வேண்டுகோளுக்கு - அவர்கள் '' தமிழ்க் கிராமங்களின் தலைவர்கள் கிராம சேவையாளர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுத்து இன்னுமொரு சந்திப்பில் இதுபற்றித் தெரிவிக்கிறோம்'' என்றார்கள்.

இந்தப் பதில் எனக்குத் திருப்தி தரவில்லை. ஏனெனில் இன்று கிழக்கின் அனைத்துத் தமிழ்க் கிராமங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் கல்முனையிலிருந்து பவ்சரில் வந்து கொண்டிருந்த முஸ்லிம் பயணிகள் மூவர் சுங்காங்கேணியில் வெட்டுக் காயங்களுக்கிலக்காகி ஸ்தலத்திலேயே கொல்லப்படுவதைத் தடுத்திருந்திருக்கலாம். தற்பொழுது இவர்களுடன் பயணித்த ஒருவர் பொலநறுவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். தங்களைத் தாக்கியவர்களிடம் துப்பாக்கிகள் இருந்ததாகவும் கூறுகிறார்.

அதேநேரம் ''சுங்காங்கேணியில் எம்மவர்கள் கொல்லப்படும் போது தமிழ்த் தொழிலாளர்கள் பலரும் எமது பாதுகாப்பிலேயே இருந்தார்கள். மறுதினம் தான் நாங்கள் இவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று விட்டோம். ஆக, கலவரத்தில் சுங்காங்கேணியைச் சேர்ந்த எவரும் கொல்லப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது'' என்றேன்.

மீண்டும் அவர் '' எமது போராட்டம் முஸ்லிம்களையும் இணைத்தது தான்... நாங்கள் ஒரு போதும் முஸ்லிம்களை எதிரிகளாக எண்ணியதேயில்லை. எமக்கு எதிராக ஆயுதமேந்தியவர்களே எமது எதிரிகள். அதில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடில்லை'' என்றார்.



எஸ்.எல்.எம்.ஹனீபா

உடனே நான் ''1990க்குப் பிறகு ஓட்டமாவடியில் மட்டும் ஐம்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம் பொலிஸ், இராணுவ ஊர்காவல் படையினர் உங்களால் கொல்லப்பட்டபோது இந்த முஸ்லிம் தீவிரவாதக்காரர்கள் வாய் பொத்திக் கைகட்டியே நின்றார்கள். அப்படியென்றால் பெப். 9இல் மட்டும் ஏன் இவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் என எண்ணிப் பாருங்கள். அன்றைய தினம் முஸ்லிம்களின் பெருநாள் தினம். நீங்கள் அவரை வீடு தேடிவந்து சுட்டிருக்கிறீர்கள். பெருநாள் மாவடிச்சேனை மக்களுக்கு மட்டுமல்ல கிட்டத்தட்ட உலகில் மூன்றிலொரு பங்கு முஸ்லிம்களுக்குமுரிய தினம். நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுத்திருக்கலாம். மறுநாள் தோட்டாக்கள் தீர்ந்துவிடவா போகிறது. அல்லது இந்த யுத்தம் தான் முடிவுக்கு வரப்போகிறதா? இந்த உணர்வுகளை நீங்கள் மதிப்பதினால் ஒரு போதும் உங்கள் போராட்டம் பின்னடையப்போவதில்லை'' என்றேன்.

அதற்கு அவர்கள் நாளாந்தம் எங்களால் கொல்லப்படுகின்ற சிங்கள இராணுவ பொலிஸ்காரர்களின் சடலங்கள் சிங்களக் கிராமங்களைச் சென்றடைகிறது. சிங்கமக்கள் நினைத்திருந்தால் தமிழர்கள் போகும் வாகனங்களை மறித்தும் - சிங்களப் பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழர்களைக் கொன்றும் குவித்திருப்பார்கள். எங்களுடைய போராட்டத்தைச் சிங்களப் பொது மக்கள் புரிந்து கொண்டார்கள். நமது மொழி நமது மண் எனக் கூறும் நீங்கள் ஏன் இன்னமும் புரிந்து கொள்ள அல்லது தெளிவு காண மறுக்கிறீர்கள்? எமது போராட்டம் நாம் அடைய விருக்கும் தமிழ் ஈழம் அது தமிழர்களுக்கு மட்டுமல்ல- அது முஸ்லிம் மக்களுக்குமுரியதுதான் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்'' என்றார் கீதன்.

உடனே நான் ''உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான். முஸ்லிம்களில் 99% வீதமான மக்கள் தமிழ் மக்களுடன் சகோதரவாஞ்சையுடன் வாழ்ந்து கொள்ளவே விரும்புகிறார்கள். எங்கோ ஒரிருவர் தூண்டிவிட கும்பல்கள் சேர்ந்து செய்யும் இத் தகாத காரியங்களுக்கெல்லாம் முழு முஸ்லிம்களையும் பொறுப்பாளிகளாக்க வேண்டாம். அது மருதமுனையாக இருந்தாலென்ன? மாவடிச்சேனையாகயிருந்தாலென்ன? எங்கள் மக்கள் இத்தகைய கொடுமைகளை வெறுக்கிறார்கள். மாவடிச்சேனையில் மூவர் கொல்லப்பட்ட அதே நேரம் இருநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் எம்மால் காப்பாற்றப் பட்டார்கள். அந்த உண்மையை உரத்துச் சொல்ல தமிழர் தரப்பில் யாரும் தயாரில்லை. இதுதான் இன்று எமக்குள்ள பெரிய சோகம். எமது இளைஞர்களால் எரிக்கப் பட்ட சடலங்களில் இரு சடலங்களே அடையாளம் காணப்பட்டன. மற்றைய சடலம் யாருடையது என்பதே தெரியாது. அது ஒரு முஸ்லிமுடையதாகவும் இருக்கலாம். இன்று பெப். 26 வாழைச் சேனை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி அவர்களால் உரிமை கோரப்படாத இச்சடலம் பாதுகாக்கப்பட வழியின்றி புதைக்கப்பட்டும் விட்டது. இத்தகைய கொடுமைகள் இனிமேலும் ஏற்படாது தவிர்த்துக் கொள்ள விரும்புகிறோம்.

வடகிழக்கில் சட்டம் பாதுகாப்பு ஒரு புறமிருக்க இறைவனின் தண்டனைக்கு அஞ்சுகிறோம். இது முஸ்லிம்கள் செய்யும் காரியமுமல்ல... இதில் நீங்களும் தெளிவு காண்பதுடன் இப்படியான சூழ்நிலையில் அகப்பட்டுப் போகின்ற மக்களை நாம் பாதுகாப்போம். தமிழ்க் கிராமங்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறீர்கள். எனவே இவற்றிற்கு நீங்கள் தான் பெரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். கடந்த காலங்களில் நாம் பெற்ற அனுபவங்களிலிருந்து இதனை வேண்டிக் கொள்கிறோம். என்றேன்.

உடனே அவர்கள் ''இந்தக் குழப்பங்களுக்கும் எங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை'' என்றார்கள். ''அது மட்டுமல்ல தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்போது அதனைத் தூண்டிவிட்டு தமிழ் முஸ்லிம் உறவைக் குலைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கும் இது வாய்ப்பளிப்பதன் மூலம் பயன் பெறத்துடிக்கும் மூன்றாவது சக்தியைப் புரிந்தவர்களாக செயல்படவேண்டும் என்றார்கள். மூன்றாவது சக்தியே என்று குறிப்பிட்டார்கள் அது எது எனக் குறிப்பிடவில்லை. தொடர்ந்த கீதன் அவர்கள் ''இப்படியான குழப்பங்கள் உருவாகும் போதெல்லாம் பெரும் விபரீதங்களைத் தடுக்கும் பொருட்டு எமது போராளிகளை அப்பிரதேங்களிலிருந்து விடுவித்துக் கொள்வோம் என்றார்கள். உடனே நான் இடைமறித்து ''இல்லை! இல்லை!! இப்படியான இக்கட்டான வேளைகளில்தான் பணி அவசியம். உங்களால தான் நடுவழியில் அகப்பட்டுக்கொள்ளும் முஸ்லிம் பயணிகளைப் பாதுகாக்க முடியும்'' என்றேன்.

மீண்டும் நான் ''எது எப்படியிருந்தாலும் பெப். 10 திங்கள் இரவு 9 மணியளவில் எமது கிராமத்தை நோக்கிய எறியப்பட்ட மோட்டார் குண்டுகளை புலிகளே அடித்தார்கள்'' என்பதுதான் பரவலான பேச்சு. அதிலும் சாராவெளிப்பக்கமிருந்து வந்ததைக் கண்டதாகவும் சொல்கிறார்கள். அதில் எமதூரைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டார்கள். ஒருவர் தமிழ், முஸ்லிம் உறவின் அவசியம் பற்றி எமக்கெல்லாம் எடுத்துரைக்கும் சகோதரர் கே.எம்.அப்துல்காதராகும். (1977இல் அமிர்தலிங்கம் அவர்கள் இவரின் வீட்டில் தேநீர் உபசாரத்தில் கலந்து கொண்டார்கள் என்பதற்காக கல் எறிகளைப் பெற்றுக்கொண்டவர். அப்துல்காதர் அவர்கள் என்பதையும் இவ்விடத்தில் தமிழ் நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.) அத்துடன் அக்குண்டுகளில் அருண் என அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்கள்'' என்றேன்.

உடனே அவர்கள் '''உங்களுக்கு 'அருண் குண்டைக் காட்டவா? அதன் செல்லும் தூரம் 200 மீட்டர் மட்டுமேயாகும். உங்கள் ஆறு மட்டும் 1/2 கிலோ மீட்டர் தூரமுள்ளது. எங்களுக்கு பொது மக்கள் மீது குண்டுகள் அடிக்க வேண்டிய அவசியமேயில்லை. அது மட்டுமல்ல பெப். 12 அன்று வாழைச்சேனைக் கோழிக்கடை வீதியிலும், தமிழ்க் கிராமமான வாழைச்சேனை பேத்தாளையிலும்- சாராவெளிக் கருகிலுள்ள முருக்கன் தீவிலும் குண்டு அடித்தவர்கள் யார்? என்ற கேள்விகளை எனக்குத் திருப்பி விட்டார்கள்! உடனே நான் யார் அடித்தார்கள் என்பதுதான் மக்களுக்கும் எமக்குமுள்ள சந்தேகம். சண்டை முனைப்பில் எல்லோரும் மக்களை மறந்து விடுகிறார்கள். இன்று யாராக இருந்தாலும், பாரிய ஆயுதங்கள் உங்களிடமும் ஆயுதப் படைகளிடமுமே உண்டு. பொது மக்கள் மீது இவற்றைப் பிரயோகிக்க கூடாது என்பதுதான் எமது ஆதங்கமும் அன்பான வேண்டுகோளும்'' என்றேன்.

பொழுது சாய்ந்து விட்ட வேளையில் எமது பேச்சை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

முஸ்லிம் தமிழ் உறவின் அவசியம், கலக நாட்களின் போது இரு பக்க அப்பாவிகளின் உயிர் உடைமைகள் பாதுகாப்பு ஆகிய அம்சங்களே எமது உரையாடல்களின் உயிரோட்டமாகத் திகழ்ந்தது. இவற்றையே இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகத் திருப்பித் திருப்பி பேசினோம்.

வேறு, முஸ்லிம்களின் இருப்பு ? சமூக அரசியல் பொருளாதார விடயங்கள் எதுவும் நாங்கள் பேசவில்லை. அவற்றைப் பேச எமக்கு யாரும் அங்கீகாரம் வழங்கவுமில்லை. நாங்கள் எந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளோ? உரிமை கோரும் இயக்கங்களின் உறுப்பினர்களோ இல்லை. எங்களுக்கும் எங்களைப் போன்ற சாதாரண மக்களுக்கும் குண்டுகள் விழுந்த இரவுகளிலிருந்த் மரணப் பீதியே எங்களைப் புலிகளுடன் பேசித்தீர்க்க வேண்டும் என முன் தள்ளியது. எனது உரை எமது மக்களின் மனச்சாட்சியின் குரலாக ஒலித்திருந்தால் அது ஒன்றே போதும்! இங்கே வீதிகளில் நின்று கொண்டு தமிழ் மக்களுடன் உரசும் உணர்ச்சிக்காரர்களும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டவர்களாக வாழ முனைந்தால், எமது சமூதாயம் உங்களைப் போற்றிப் புகழும். இறுதியாக இவ்விடயங்கள் அத்தனைக்கும் ஒத்தாசை புரிந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கணேசலிங்கத்திடம் சில கேள்விகள்

கணேசலிங்கம் அவர்களின் அண்மைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வீராவேசப் பேச்சுக்களையும் அறிக்கைகளையும் அவர் அதனை விட்டு வெளியேறி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆதரவுடன் போட்டியிடுவதற்கான காரணங்களையும் பார்க்கும் தமிழ் மக்கள் உண்மையில் 'மெய்சிலிர்த்து' நிற்பர். தமிழ் மக்களுக்கு இவ்வாறான ஒரு தலைவர் இதுவரை இருந்தது மில்லை; இனிமேல் இருக்கப் போவதும் மிகவும் சந்தேகமே?

அவர் கடந்த காலங்களில் கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி வடகிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கும் தனது உயிரைத்துச்சமென மதித்து ஆற்றிய 'சேவைகள்' ஏராளம். ஆனாலும் அவருடைய அரசியல் எதிரிகளின் பின்வரும் வினாக்களுக்கு பத்திரிகை மூலமாகவோ அல்லது அவரது பிரசாரக் கூட்டங்கள் மூலமாகவோ உரிய விடைகளைக் கூறினால் அவர் 'மதிப்பு' இன்னும் மக்கள் மத்தியில் கூடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

1. உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதென அரசாங்கம் தீர்மானித்து கொழும்பு மாநகர சபையைக் கலைத்ததும் - தனது பதவி பறிபோன பின்னர்தான் ஐ.தே.க. தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையையும் செய்யாது என்பதை இவர் அறிந்தாரா? இல்லாவிடில் மேயர் பதவியிலிருக்கும் போதே தனது பதவியை இராஜினாமாச் செய்து அறிக்கைகளை விடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளராக மாறியிருக்கலாமல்லவா?

ஐ.தே.கட்சி இதுவரை தமிழ் மக்களுக்குச் செய்த தீமைகளுக்கு பொருளாளராக உயர்பதவி வகித்த இவரும் பொறுப்பென்பதை இவர் அறியவில்லையா? அத்துடன் ஒரு பெரிய கட்சியின் பொருளாளர் தனது பதவியை இவ்வளவு காலம் போன்று ஒரு கடிதத்தின் மூலம் திடீரென இராஜினாமாச் செய்ய முடியுமா?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி எண்ணற்ற அப்பாவித் தமிழ் இளைஞர்களை வடகிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் கூட அப்போதைய ஐ.தே.க. அரசு கொன்று குவித்த போது இவரது இனப்பற்று எங்கே போயிற்று?

கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழ்க் கிராமங்கள் ஆயுதப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு மதத்தலைவர்கள், ஊர்ப்பெரியவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக விரோதிகள் எல்லோரும் ஒரே வாகனத்தில் ஏற்றி அடைக்கப்பட்டு முகமூடிப் பொம்மைகள் முன் நிறுத்தி விசாரணை செய்யப்பட்ட போது அவருடைய தன்மானம் எங்கே போயிற்று?

கடந்த ஆட்சிக் காலத்தில் வட கிழக்கில் பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்தப்பட்டது மட்டுமன்றி, யாழ்குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கூடக் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்ட போது இவர் நாட்டில் இருக்க வில்லையா?

வட கிழக்கில் இலங்கை - இந்திய இராணுவங்களின் அடக்குமுறைகள் ஐ.தே.கட்சினால் அமுல்படுத்தப்பட்ட போது இவர் தன்னுடைய பொருளாளர் பதவியையும் கட்சியையும் விட்டு வெளியேற நினைக்கவில்லையா?

கொழும்பு மாநகரில் தமிழ் மக்கள், குறிப்பாகப் பெண்கள் இரவு உடையுடன் கூட பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டபோது அவர் முதல் குடிமகனாக மட்டுமன்றி கட்சியின் பொருளாளராகவும் இருந்துள்ளார் என்பதை மறுக்க முடியுமா?

எல்லாவற்றையும் விட, கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கொழும்பு மாநகரசபை முதல்வர் பதவிக்கு ஒரு தமிழரை (அதுவும் இவரை) தாங்கள் நிறுத்தப் போவதாக அறிவித்து சிலபத்திரிகைகளில் இவருடைய பெயர் வெளிவந்த நிலையிலும் திடீரெனப் பல்டி அடித்து ஐ.தே.க வேறு ஒருவருக்கு அப்பதவியைக் கொடுத்த போது இவருடைய சுயமரியாதை எங்கே போயிற்று?



முன்னைய ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி விஜேதுங்க அவர்கள் சிறுபான்மை மக்களை மரம் செடி கொடிகளுக்கு உவமித்துக் கூறிய போதும் அவருடன் கரம் கோர்த்து ஒரணியில் நின்றது ஞாபக மில்லையா?

இந்தக் கேள்விகள் ஒருபுறமிருக்க மறுபறத்தே கணேசலிங்கம் அவர்கள் புகழ்மாலை சூட்டும் பொ.ஐ.மு குறித்தும் கேள்விகள் எழாமலில்லை. இதோ அக்கேள்விகள்:

கடந்த ஆட்சியின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவென இந்திய அரசின் உதவியுடன் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் முறையை எதிர்த்தவர்கள் யார்? தேர்தலில் பங்கு பற்றாமல் அதனைப் பகிஷ்கரித்தவர்கள் யார்?

கடந்த ஆட்சியில், தமிழர் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாக இருந்த அமரர் அமிர்தலிங்கத்தைக் காலி முகத்திடலில் பாக்கு மரத்தில் கட்டி இரண்டாகப் பிளக்க வேண்டுமெனக் கூறிய பாணந்துறை எம்.பி. நெவில் பெர்னாண்டோ போன்றோரை நிர்ப்பந்தம் காரணமாக அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். கட்சியை விட்டு வெளியேற்றிய போது அவர்களை மாலையிட்டுத் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

தமிழ்ப் பகுதிகளுக்குச் ஷெல் வீச்சு, வட கிழக்கில் இராணுவ அத்து மீறல்கள், தமிழர்கள் சுற்றி வளைக்கப்பட்டு கைதாவது (அஸ்வர் எம்.பி. அவர்களின் பாராளுமன்ற அண்மைய உரையைப் பார்க்கவும்). எல்லாம் நிறுத்தப்பட்டு இந்த ஆட்சியில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்களா?

தீர்வுப்பொதியை நிறைவேற்ற ஜனாதிபதியின் கரங்களால் பலப்படுத்த வேண்டுமெனக் கூறுமிவர் அதன் உள்ளடக்கத்தை அறிவாரா? காணிப்பகிர்வு, பொலிஸ் அதிகாரங்கள், வடகிழக்கு இணைப்புப் போன்ற முக்கிய விடயங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென அமைச்சர் பீரிஸ், அவர்கள் இப்போதும் கூறும் போது தீர்வுப் பொதியின் இறுதி வடிவத்தை தமிழ் மக்கள் எவ்வாறு அறிய முடியும்?

இவையெல்லாவற்றையும் விட மிக முக்கியமான அவரது கூற்று யாதெனில், தலைவர் ரணில் அவர்கள் மிகவும் நல்லவர்; ஆனால் கட்சியிலுள்ள மற்றவர்கள் இனவாதிகள் என்பதாகும். இது உண்மையாக இருக்குமானால் இன்னும் சில வருடங்களின் பின்னால் அவர் பின்வருமாறு கூற மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்கள் மிகவும் நல்லவர். அவருடைய கூட்டணிக் கட்சிகளிலுள்ள ஸ்ரீமனி அத்துலத் முதலி போன்றோர் தீர்வுப் பொதியை நிறைவேற்ற விடாமல் செய்து விட்டார்கள்.

**ரேசன்**

# சமாதானத்திற்கான பெண்களும் புலிகளும்

சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பு தனது 6வது கறுப்பு ஆடைப் போராட்டத்தை பெப்ரவரி 16ம் திகதி லண்டனில் நடாத்தியது. 1996ம் ஆண்டு செப்டெம்பர் 18ம் திகதி அதாவது சர்வதேச சமாதானத் தினத்தன்று அரசிற்கும், புலிகளுக்கும் சமாதானம் தொடர்பாக அழுத்தம் கொடுப்பதற்காக இவ்வமைப்பால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம், தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் 18ம் திகதி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொழும்பு, கண்டி, குருநாகல், ஹட்டன் ஆகிய பிரதேசங்களில் இதுவரை நிரந்தர சமாதானத்திற்கான தேவையை வலியுறுத்தி கறுப்பு ஆடை அணிந்த பெண்களால் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது பற்றி சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பின் இணைப்பாளர் மங்கலிக்காவுடனான உரையாடலின் போது அவர் ''1990, இரண்டாவது ஈழப்போர் தொடக்கம், காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்கள், அகதிகளின் எண்ணிக்கை, சித்திரவதைகள் போன்றனவே சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பின் போராட்டங்களின் தோற்றுவாய்க்கு காரணமாயிருந்தன. 10 வருட கால எமது வரலாற்று அனுபவத்தினூடே, நாம் வன்முறைகளினாலும், யுத்தத்தினாலும் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே என்பதை உணர்ந்து கொண்டோம். இதனால் முடிந்த வரை தொடர்பூடகங்களைப் பாவித்துக் கொண்டு இந்த யுத்த வாதத்துக்கும், இனவாதத்துக்கும் எதிராக அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுப்பதற்காகவே போராட்டங்களை மேற்கொள்கின்றோம்'' என்றார்.

தமது நோக்கங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில் ''யுத்தம் தொடர்பான தீமைகளை மக்களுக்கு அறிவுறுத்தல் - இது குறுகிய கால நோக்கம் - பெண்களுக்கெதிரான வன்முறைகள், பாலியல் வல்லுறவுகள் , சித்திரவதைகள், அத்துடன் பெண்களை புலிகள் தற்கொலைப் போராளிகளாகப் பயன்படுத்துவதற்கு எதிராகச் செயற்படுதல், பெண்களை யுத்தக் கருவியாகப் பயன்படுத்தல், குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் பிரதேச மக்களினது துன்ப நிலை போன்றவை தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்துவது, அந்நிலைமைகளுக்கெதிராக செயற்படுவது, மலையக மக்களின் பூரண குடியுரிமையை கேள்விக்குள்ளாக்குவதற்கு எதிராக, தேசிய நீரோட்டத்தில் மலையகத்தவரின் இறமைகள் புறக்கணிக்கப்படுவதற்கு எதிராக செயற்படுவது என்பனவே தமது நோக்கங்கள்'' என்றார்.

''நீண்ட கால நோக்கமாக தேசிய ரீதியில் சமாதான இயக்கத்தினையும் சமாதானம் தொடர்பான நடவடிக்கைகளையும் கட்டி எழுப்புவதுடன் நீண்ட கால நிரந்தரமான சமாதானத்திற்காக அரசுக்கும், புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்தல்'' என்றும் குறிப்பிட்டார்.

''கறுப்பு நிறம்'' , வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுவரும் அனைவருக்கும் எதிராகப் பிரயோகிக்கப்படும் எதிர்ப்புக் குறியீடு என்பதால் கறுப்பாடைகளை அணிந்து தாம் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுவதாகவும் சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பினர் குறிப்பிடுகின்றனர். பெண்களுக்கெதிரான ஆணாதிக்க வன்முறைகள், பாலியல் வல்லுறவு ஆகியவற்றை எதிர்த்தல் என்ற அடிப்படையின் கீழ் இவ்வமைப்பினர் கிரிஷாந்தி தொடர்பான போராட்டங்களில் கறுப்பு ஆடையுடன் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பினரின் இக் கறுப்பு ஆடைப் போராட்டம் தொடர்பாக தொடர்பூடகங்கள் எவ்வாறான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தன என்பது சுவாரசியமானது. குறிப்பாக திவயினவில் ''எச்சரிக்கையாக உருவெடுத்திருக்கும் தகவல் பிரிவு'' என்ற தலைப்பில் வெளிவந்திருந்த கீர்த்தி வர்ணகுலசூரிய எழுதிய கட்டுரையை பிரசுரித்ததன் மூலம், இப்போராட்டம் தொடர்பாக எவ்வாறான கருத்தை அவர்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்த முனைந்தனர் என்பது தெளிவாகிறது. யாழ்ப்பாணத்தில் கிரிஷாந்தியும் அவரது குடும்பமும் கொல்லப்பட்டமையை சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பினர் அதிக பிரபலப்படுத்தியுள்ளனர் என்ற குற்றச்சாட்டை இக்கட்டுரையாசிரியர் முன் வைக்கின்றார். '' ... கிரிஷாந்தி விடயமானது புலிகளுக்கும் கொழும்பு வாழ் தமிழ் புலிகள் ஆதரவு தொடர்பூடகங்களுக்கும் சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. கறுப்பு உடை அணிந்த, புலிகளுடன் தொடர்புடைய பெண்கள், கொழும்பிலும், கண்டியிலும் எதிர்ப்புக் காட்டி இச்சம்பவத்தை சர்வதேச மயப்படுத்தினர்'' எனஅதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரந்தலாவையில் பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டமை, எல்லைக் கிராம சிறுவர்கள் கொலை செய்யப்பட்டமை, ஸ்ரீமகாபோதி படுகொலைகள், ஏனைய பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளானமை போன்றவற்றுடன் ஒப்பிடும் போது, கிரிஷாந்தியின் விடயம் ஒன்றும் முக்கியத்துவமானதல்ல என்பதே அக்கட்டுரையின் தொனியாகும்.

இக்கட்டுரை தொடர்பாகவும் மங்கலிக்காவிடம் வினவிய பொழுது, அவர் ''இது தான் இலங்கையின் யதார்த்தம் . இதுதான் இன்றைய சமூகத்தில் பெண்ணடிமை தனத்துடன் இனவாதம் கலந்தவுடன் ஏற்படும் நிலை. பெண்களின் அரசியல் தொழிற்பாடுகள் இவ்வாறே முடக்கி விடப்படுகின்றது'' என்றார்.

**-ரட்ணா**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | ★ யுத்தம் பெண்களது வாழ்வில் ஏற்படுத்திய விளைவுகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? | ★ திறந்த பொருளாதாரத்தூடாக அறிமுகமான சுதந்திர வர்த்தக வலயம் பெண்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது? | ★ நம் நாட்டில் ஜனாதிபதியும் பிரதமரும் பெண்களாக அங்கம் வகிக்கும் இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பெண்கள் தொடர்பாக ஏற்பட்ட மாற்றங்கள் எவையெனக் கூறமுடியுமா? | ★ பெண்களது விடுதலை தொடர்பான விழிப்புணர்வு கல்வியாளர்களிடமும் மத்திய தர வகுப்பில் குறித்த ஒரு பிரிவினரிடமும் மட்டுமே காணப்படுகின்றது. பரந்துபட்ட பெண்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படாமைக்கு என்ன காரணம்? |
|---|---|---|---|---|
|  சுனிலா அபேசேகர, பெண்நிலைவாதி, மனித உரிமையாளர் | குறிப்பாக யுத்தம் நிலவும் பிரதேசங்களில் பெண்கள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். இடம்பெயர வேண்டிய நிலை, உறவினரை, கணவனை, பிள்ளைகளை இழக்க வேண்டிய நிலை, புலிகளுடன் இணைய நேரிடுதல் எனப் பல பிரச்சினைகளுக்கு அப் பெண்கள் முகம் கொடுக்கின்றனர். அத்துடன் சமீப காலங்களில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் யுத்தம் காரணமாக முழு நாடும் இராணுவ மயப்படுத்தப்படுவதால் யுத்தம் நிலவாத பிரதேசங்களில் வசிப்பவர்கள் கூட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. கொழும்பு வாழ் தமிழ், முஸ்லிம் பெண்கள் வீதித்தடைச் சோதனை முகாம்களில் சந்தேகத்தின் பேரில் பிரச்சினைப்படுகின்றனர். விலைவாசி உயர்வு, வன்முறைக் கலாசாரம், ஆயுதபலம் என்பனவும் பெண்களை மிக மோசமாக பாதிக்கின்றது எனலாம். | சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் புரியும் பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் அதிக சுரண்டலுக்குட்படுகின்றனர். ஊழியத்தை விட அதிக உழைப்பு, கோட்டாமுறை, மேலதிக வேலை, விடுமுறை இன்மை என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் கிராமப்புறப் பெண்கள் பெருமளவில் கொழும்பு, கொழும்பு சுற்றுப் பிரதேசங்களில் தங்கி வேலை செய்வதால் அதிக சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். நூற்றுக்கு நூறு வீதம் தீமை ஏற்பட்டது என்றில்லை. சுய சம்பாத்தியம் ஓர் நன்மை. நாம் அவர்களைப் பற்றி பொருளாதார ரீதியாகவே ஆய்வுக்குட்படுத்துகின்றோமே தவிர சமூக, கலாசார ரீதியில் அல்ல. மீண்டும் அவர்கள் ஊர் திரும்பி எப்படி மணமுடித்து வாழ்கின்றனர் என்பதை நாம் ஆராய்வதில்லை. | எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லையெனலாம். நாம் எந்நாளும் கூறுகின்றோம், தெற்காசியாவில் பெனாசிர் பிரதமராயிருந்தார். காலிதாசியா பிரதமராயிருந்தார். எனவே அந்நாட்டு பெண்களுக்கு நன்மை என்று. எந்நாட்டிலாயினும் ஒரு பெண் அரசியல்ரீதியாக முன்வந்திருப்பது குடும்ப பின்னணியினால் அல்லது வர்க்க பின்னணியினால் ஆகும். மாறாக பெண் என்ற ரீதியில் அல்ல. எந்தப் பெண்ணுமே நிலவும் அரசு இயந்திரத்திற்கு உட்பட்டு நாட்டை ஆள முற்படும் போது அவர்களிடம் தாம் பெண்கள் என்ற விசேடத் தன்மை காணக்கிடைக்காது. இவ்வாறான அரசியல் இயந்திரத்திற்கு உட்பட்ட பெண்கள், தமது பிரச்சினைகள் உரிமைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனலாம். இவர்கள் அரச கட்டிலேறினாலும் பெண்கள் பிரச்சினைகள் பற்றிய தெளிவும், தீர்வுக்கான தேவையும் அவர்களுக்கில்லை. | பெண்விடுதலை பற்றிக் கதைப்பதை விட பெண்களின் துன்பநிலைகளைக் கதைப்பது முக்கியமானது. ஏழைப் பெண்கள் வேலைக்குப் போகும் பெண்கள் ஆகியோர் எம்மை விட அதிகமான துன்பங்களுக்கு ஆளாகுகின்றனர். பிரச்சினை யாதெனில், இவற்றை விளங்கிக் கொள்ளும் சாத்தியமும் தீர்வுக்கான சந்தர்ப்பமும் குறைவு என்றே கூற வேண்டும் எனினும் பிரச்சினைகளை அதிகமாகச் சந்திப்பவர்கள் அவர்களாக இருப்பதனால் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காண்பதன் மூலமே உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். |
|  சுமிகா பெரேரா, 'எய' சஞ்சிகை ஆசிரியர் | யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும், பிள்ளைகளுமே. குறிப்பாக யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட வடக்கு - கிழக்கு வாழ் பெண்கள் அகதி முகாமில் துன்பப்படுகின்றனர். பெண் என்ற ரீதியில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றனர், கொலை செய்யப்படுகின்றனர். உதாரணமாக சமீபகால நிகழ்வுகளைக் கூறிக் கொள்ளலாம். | ஒருபுறத்தில், கிராமிய மட்டத்துப் பெண்கள், நகரத்துக்கு வந்து தமது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வழி ஏற்படுகின்றது. எனினும், மறுபுறத்தில் அவர்களது தொழில் சுரண்டலுக்குள்ளாதல் போன்ற தீமைகளும் உண்டு. அதிகமான பெண்களுக்கு, வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும், நவீன தொழில்நுட்பம், அறிவு என்பன அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இருபது வருடங்களாக தொழில் புரிந்தாலும் ஒரு சட்டையைத் தைத்துக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். குறிப்பிட்ட உடையின் பகுதியை வெட்டித் தைக்கவே அவர்கள் பயிற்றப்படுகின்றனர். ஆனால் நகரத்தையே கண்டிராத பெண்கள் நகரத்துக்கு வந்து தனியே பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கப் பழகியுள்ளமையை குறிப்பிடத்தான் ஆகவேண்டும். | பெண்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டிருக்கின்றது என்று என்னால் கூறமுடியாது. வரலாறு முழுவதும், வேறு நாடுகளில் கூடப் பெண்கள் அரசியல் தலைமைத்துவம் பெற்றிருந்தனர். இலங்கை உட்பட அவர்கள் குடும்பப் பின்னணியினால் இவ்வாறான உயர்நிலையை அடைந்துள்ளனர். இதனால் ஏதேனும் நன்மை ஏற்பட்டுள்ளது என நான் நினைக்கவில்லை. முழுமையாகப் பெண்கள் பலாத்காரத்திற்குள்ளாகின்றனர், சுரண்டலுக்குள்ளாகின்றனர், வேலை செய்யும் இடங்களில் தாழ்த்தப்படுகின்றனர், இவையெல்லாம் இன்னும் நீங்கவில்லை. சாதாரணமாக, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பெண்களாக உள்ளதனால் உங்களுக்குப் பிரச்சினைகள் இல்லையென்று எவராவது கூறலாம். பெண்கள் பட்டயம் கூட இன்று பெயரளவிலேயே உள்ளது. அவர்களுக்கு பெண்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டுமெனும் எண்ணமிருந்தாலும் அது பரந்தளவில் இல்லையென்றே கூறலாம். நாம் அவ்வாறு எதிர்பார்க்கவுமில்லை. | அவர்களுக்கு பெண்கள் விடுதலை தொடர்பாகப் பரந்த அறிவு இல்லாவிட்டாலும், பெண்கள் என்ற ரீதியில் பிரச்சினைகளை நன்கு உணர்ந்துள்ளனர். குடிபோதையில் வரும் கணவனிடம் அடி, உதை, குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பு, பட்டினியைத் தவிர்க்க வேலைக்குச் சென்றால் உழைப்புக்கேற்ற ஊதியமின்மை என்று பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் கீழ்மட்டத்திலுள்ள பெண்கள் அனுபவிக்கின்றனர். அவர்கள், பெண்கள் விடுதலை தொடர்பாக அறிந்திராவிட்டாலும், ஏதோ ஒரு மாற்றத்தை விரும்புகின்றனர் எனலாம். |
|  திலினா வீரசிங்க, பெண்நிலைவாதி, பத்திரிகையாளர் | யுத்தம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அதிகம் பாதிப்பிற்குள்ளாவது பெண்களும், பிள்ளைகளுமே ஆவர். இலங்கையில் மட்டுமல்ல, யுத்தம் நடைபெறும் அனைத்துப் பிரதேசங்களிலும் இது நிகழ்கிறது. நாம் யுத்தத்தை சாதாரண விடயமாகவே நோக்குகின்றோம். எனினும், இதன் மூலம் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்படும் உளரீதியான பாதிப்புகளை நாம் கவனத்தில் எடுப்பதில்லை. கிருஷாந்தியின் விடயம் தொடர்பாகப் பல மனித உரிமை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் என்பன போராட்டத்தில் ஈடுபட்டன. தனியே இது கிருஷாந்தியின் விடயத்தை எதிர்க்கும் கோஷமாக இருப்பதனால் இதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இருபது வருட கால யுத்த வரலாற்றில் இவ்வாறான கிருஷாந்திகள் எத்தனையோ பேர் இறந்திருக்கலாம். மறுபுறம் தாய்மார்களின் விருப்பமின்றிப் பிள்ளைகள் போரில் ஈடுபடுத் தப்படுகின்றனர். பொதுவாக, யுத்தம் பெண்களை சுமப்பவர்களாகவே மாற்றுகின்றது. அதேவேளை சுய தீர்மானம் எடுக்கக் கூடியவர்களாக ஆண்கள் உள்ளனர். முழு சமூகமும் இராணுவமயப்படுவதால் யுத்தம் நடைபெறாத பிரதேசத்தவரும் பாதிக்கப்படுகின்றனர். | தொடர்பூடகவியலாளர் என்ற ரீதியில் சுதந்திர வர்த்தக வலயப் பெண்களுடன் நான் அதிக தொடர்பு கொண்டுள்ளேன். அங்கு வேலை செய்யும் பெண்களது ஒரே வேண்டுகோள் "எம்மைப் பற்றி அதிகமான அவதூறுகள் சமூகத்தில் உள்ளன. அவை பொய்யானவை எனக் கூறுங்கள்" என்பதாகும். பொருளாதார ரீதியில் சுதந்திர வர்த்தக வலயம் நன்மை எனக் கூறப்படுகின்ற போதிலும் கலாசார ரீதியில் அவை அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று கூறப்படுகின்றது. சுமார் 20 வருட கால வரலாற்றைக் கொண்ட (யுத்தம் போன்று) சுதந்திர வர்த்தக வலயத்தில் நம் நாட்டுப் பெண்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தொழில் பாதுகாப்பின்மை, சுரண்டல், பாலியல் தொந்தரவுகள் என்பவற்றைக் குறிப்பிடுத்தானாக வேண்டும். சுமார் 90%மான பெண்கள் அங்கு வேலை செய்கின்றனர். ஆனால் இவ்வரசாங்கம், அரசசார்பு நிறுவனங்கள் என்பன அவர்கள் பிரச்சினைகளில் தலையிட விரும்பவில்லை. | நான் இதை மறுக்கிறேன். குறிப்பாக உலகத்தில் முதல் பெண் பிரதமரைப் பெற்ற நாடு என்ற பெயரை நாம் பெற்றிருந்தாலும் அது சிறப்பான விடயம் மட்டுமே. எமக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கின்றது? நமது நாட்டுப் பெண்கள் மத்தியில் போஷாக்குக் குறைவு அதிகரித்துச் செல்கிறது. கருச்சிதைவு, சிசு மரணங்களும் அவ்வாறே. நமது அரசியலில் ஒரு சில பெண்களது பங்களிப்பு இருந்தாலும், அது சுதந்திரமான நிலையல்ல. பல செயற்திட்டங்கள் இருந்தாலும் அவை சிறப்பாகச் செயற்படுத்தப்படவில்லை. அரசியல் மட்டத்தில் இருக்கும் பெண்களில் எத்தனைபேர் பெண்களுக்காகக் குரல் கொடுக்கின்றனர். சட்டங்கள் கூட பெண்களுக்குச் சாதகமானதாக இல்லையே. | பெண்களது விடுதலை என்பது ஒரு நாகரிகமான சொல்லாக மாறி விட்டது. விடுதலை பற்றிக் கதைப்பதை விடப் பெண்களது துன்ப நிலை பற்றியே கதைக்க வேண்டும். நானும் பெண் என்ற ரீதியில் இத் துன்ப நிலைகளை உணருகிறேன். விடுதலையைப் பற்றிக் கதைக்க வேண்டியுள்ளது ஏன்? பெண்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்பது பற்றி பெண்களே உணருவதாக இல்லை. பெண்கள் அமைப்புகள் கூட சிற்சில பிரச்சினைகளுக்கும் கோரிக்கைகளுக்குமே போராட வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் விழிப்புணர்வை ஏற்படுத்த அல்ல. இதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியாது. விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமானால் கிராம, பிரதேச, தேசிய ரீதியில் சகல இன, கலாசாரப் பெண்களும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் பிரச்சினையை விளங்கிக் கொள்ளாதவர்களால் ஒரு போதும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. |
|  செல்வி திருச்சந்திரன், பெண்நிலைவாதி, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் | யுத்தமானது பெண்களது வாழ்வில் மட்டுமல்ல, ஆண்கள், பிள்ளைகள் என அனைவரினது வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதேவேளை பெண்களுக்குச் சில பிரத்தியேகமான பாதிப்புக்களை மிக வன்மையான முறையில் ஏற்படுத்துகின்றது என எடுத்துக் கொள்ளலாம். இந்த ரீதியிலேயே பெண்களும் யுத்தமும் என்ற விடயத்தை நோக்க வேண்டும். யுத்தம் காரணமாக 2,3 விதங்களில் பெண்கள் பிரத்யேகமாக தாக்கப்படுகின்றனர். பொதுவாக ஆண்களிடம் தங்கி வாழும் நிலை எமது சமூகத்தில் இருப்பதால் குறிப்பிட்ட ஆணின் மறைவு பெண்களை வறுமை நிலைக்கு தள்ளுவதனால் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர். அடுத்து பெண்களுக்கு ஏற்படும் பிரத்தியேகமான பால் நிலை சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் கூறலாம். எங்கு யுத்தம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் பெண்களை ஆண்கள் உடமைப் பொருளாகப் பாவித்து, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்த ரீதியில் யுத்தங்காரணமாக பெண்கள் தாக்கப்படுகின்றனர். | இத் தொழில்வாய்ப்புக் காரணமாக பொருளாதார நன்மைகள் ஏற்படுகின்றதாயினும், நமது பெண்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பெண்களின் இரண்டாம் பட்ச நிலை காரணமாக கடைநிலைப்பட்ட கடினமான வேலையே வழங்கப்படுகின்றது. ஓய்வற்ற நிலை, மென்மையான கைகளைப் பாவித்து வேலை செய்யக்கூடிய நிலை, அலுப்பு, சலிப்பு, கண்பாதிப்பு, புற்றுநோய் என்பவற்றுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. பெண்கள் தினத்தை அனுஷ்டிக்கும் இச் சந்தர்ப்பத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிலாளர்கள் என்ற ரீதியில் எத்தனை பெண்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தல் நன்று. | சர்வதேச ரீதியாக பெண்களுக்கு அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் காரணமாக பெண்கள் விவகார அமைச்சு பெண்கள் இலாகா என்று வசதிகள் ஏற்படுத்தித் தந்தாலும் முழுதாகப் பெண்கள் அபிவிருத்தியைப் பற்றிக் கவனத்தில் எடுக்கின்றனர் எனக் கூறமுடியாது. அரசு என்ற தத்துவத்துக்கு உட்பட்டு இயங்கும் எந்த ஸ்தாபனமோ கீழ் மட்டத்திலிருக்கும் பெண்களது பிரச்சினைகளை தீர்த்து விடும் எனக் கூறமுடியாது. இதன்படி பெண்கள் உரிமை பெண்களது விடுதலை என்பன மாற்றுக் கலாசாரத்துக்குரியதாகவே உள்ளது. ஜனாதிபதியோ, பிரதமரோ, அத் தத்துவத்துக்கு உட்பட்டிருப்பதால் அவ்வட்டத்திலிருந்து விலகி, பெண்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதாக எனக்குத் தோன்றவில்லை. | மத்தியதர வகுப்பினரே குடும்பம், கலாசாரம், என்ற கட்டுப்பாட்டிற்குள் அடங்கியுள்ளனர். கீழ்மட்டப் பெண்களுக்கு ஓரளவுக்கு ஒரு சில உரிமைகள் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் இவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மத்தியதர வகுப்பினருக்குத்தான் கட்டாயம் விழிப்புணர்ச்சி தேவை. அவர்களுக்குப் பல திட்டங்கள் வகுக்க வேண்டிய தேவையும் உள்ளது. அதே நேரத்தில் அத் திட்டங்கள் கீழ் வகுப்புப் பெண்களுக்கு ஒத்துவராது எனலாம். திட்டங்களை இனங்கண்டு அவற்றை சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரயோகிப்பதன் மூலமே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம். |

நேர்காணல் : ரத்னா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ள குடும்பங்களில் வன்முறை நிலவி வருகிறது. இதற்கு மத, இன, சமூக வேறுபாடுகள் கிடையாது. குடும்பங்களில் ஏற்படும் முரண்பாடுகள் பெரும்பாலும் வன்முறையிலேயே முடிவுறுகின்றன. மனித விழுமியங்கள் மதிப்பிறக்கப்பட்ட, சமூகம் போராட்டமும் கொந்தளிப்பும் ஒன்றாக உள்ள எமது நாட்டில் வன்முறை சாதாரண வழக்கில் உள்ள ஒரு சொல்லாக மாறி விட்டுள்ள நிலையில், இத்தகைய ஒரு நிலை ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல.

***குடும்ப வன்முறை:***

குழந்தைகட்கும் பெண்களுக்கும் எதிரான பல்வேறு வன்முறைகளில் ஒன்றாக குடும்ப வன்முறை (Domestic Violance) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தமது குடும்பங்களில் நடக்கும் இவ்வன்முறைக்கு பெரும்பாலும் குழந்தைகளும் பெண்களுமே உள்ளாவதுடன், அவர்கள் அவற்றுடன் இயைபுற்று வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்தத் துன்பங்களுடன் பெண்கள் வாழ நிர்ப்பந்திக்கப்படும் அதேவேளை



இதே சூழலிலே வளர்ந்துவரும் ஆண்கள் இவ்வாறான வன்முறையில் தாமும் வளர்ந்தவர்கள் ஆகுகையில் தம் பங்குக்கு செய்யத் தொடங்குகிறார்கள். இதனால் இந்தக் குடும்ப வன்முறை ஒரு முடிவே அற்ற சக்கரமாக சந்ததி சந்ததியாக தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. சண்டை சச்சரவுகளுக்கு மத்தியில் வளர்ந்து வரும் குழந்தைகள் மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களாக வளர்வதுடன் பெரும்பாலும் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும் மாறுகின்றனர்.

இலங்கையில் குடும்ப வன்முறைகள் நிலவுகின்ற போதும் அது இன்னமும் ஒரு தனியான விவகாரமாக கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பெண்களுக்கு எதிரான குற்றம் ஆனது பெரும்பாலும் பலரது கவனத்தை ஈர்க்காத ஒன்றாகவோ, அது வாழ்வில் இணைந்த அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ இருந்து விடுகின்றது.

***வன்முறைகளின் போது பெண்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள்?***

பெண்கள் ஆய்வு மையத்தினால் (CWR) நடாத்தப்பட்ட ஆய்வொன்றின் போது இத்தகைய வன்முறைகளின் போது பெண்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பது குறித்து கிடைத்த பெண்களின் அபிப்பிராயம் என்னவென்றால் தாம் பாரம்பரிய விதிகளுக்கும் பொதுவான நடைமுறைக்கும் ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பதை இவை உணர்த்துகின்றன என்பதேயாகும். பெண்களை மோசமாக நடாத்துவது குறித்த கேள்விக்கு பெண்களின் அபிப்பிராயமாக இருந்ததெல்லாம் தம்மை அடிப்பதற்கும், உதைப்பதற்குமான 'உரிமை' ஆண்களுக்கு உண்டு என்பதுதான். குறிப்பாக குடும்பப் பிரச்சினைகளில் இந்த 'உரிமை' ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய வன்முறைக்கு காரணம் பெண்களின் தவறுதான் என்பது பெண்களாலேயே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இத்தகைய வன்முறை நடவடிக்கைகள் ஏன் எமது கலாசாரத்துடன் இணைந்திருக்கின்றன. நாம் ஏன் காலம் காலமாக இத்தகைய வன்முறைகளுக்கு உள்ளாக வேண்டும் என்பது பற்றி அவர்களிடம் எந்தக் கேள்வியும் இருப்பதாகத் தெரியவில்லை.

***சட்டத்தில் வாய்ப்பு இல்லை:***

ஆயினும், சொத்துரிமை தொடர்பான விடயங்களில் மட்டும் இப்பெண்கள் தமது இரண்டாம் தரத் தன்மையையோ, சமூக நடைமுறைகளையோ ஏற்றுக்கொள்பவர்களாக இல்லை. மாறாக, அவற்றைத் தீவிரமாக எதிர்க்கின்றார்கள். இதில் ஏற்படும் பிணக்குகளுக்கு தீர்வு காண அவர்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் துணிகிறார்கள். கடந்த 15 ஆண்டு காலமாக கள ஆய்வுகளில் ஈடுபட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் இன்று நடைமுறையில் உள்ள சட்ட அமைப்பின் போதாமையை இனம் காட்டுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக செய்யப்பட்ட இந்த ஆய்வு திருமணமான பெண்களுக்கு கணவன்மார்களால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளில் இருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள இன்றைய சட்டத்தில் எந்தவாய்ப்பும் இல்லையென்பதைத் தெளிவுபடுத்துகின்றது. கணவனுக்கு எதிராக பாதுகாப்பை பெறும் உத்தரவை நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ள பெண்ணுக்குள்ள ஒரே வழி விவாகரத்துக்கு விண்ணப்பிப்பது மட்டுமேயாக உள்ளது. இதற்கு ஏற்ற விதத்தில் முற்போக்கான மாற்றங்கள் சட்டத்தில் ஏற்படுத்தப்படுதல் அவசியமாகும். சிலவேளைகளில் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பினும் கூட பெண்கள் இந்த நீதியைப் பெறுவதற்கான அறிவற்றவர்களாக, அல்லது வாய்ப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

> *கொழும்பு பல்கலைக்கழகத்தின் பெண்ணியக் கல்வி தொடர்பான கலை முதுமாணிப்பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு(1996ம் ஆண்டு) உசாத் துணைக்காக வழங்கப்பட்ட கமலினி விஜய திலக்கவின் "Domestic Violance -A Silent cry' என்ற கட்டுரையின் சுருக்கமான மொழி பெயர்ப்பு மார்ச் 8 பெண்கள் தினத்தையொட்டி வெளியிடப்படுகிறது.*

***சுனிதாவின் தயக்கம்:***

சுனிதா ஒரு கல்லூரி ஆசிரியை. அவளுக்கு மூன்று வளர்ந்த பிள்ளைகள். கணவன் முன்கூட்டியே ஓய்வு பெற்றுக்கொண்டவர். அவருக்கு நல்ல ஒரு தொகை ஓய்வூதியமாகக் கிடைக்கின்றது. அவர் ஒரு குடிகாரர். தன்னிடம் பணம் குறையும் போதெல்லாம் மனைவியிடம் பணம் கேட்டு தொல்லை கொடுப்பார். அவள் மறுக்கும் போது, அவளைத் தாக்குவார். இது அடிக்கடி நடக்கிற ஒரு சம்பவமாக இருந்த போதும் சுனிதா இதிலிருந்து விடுபட பொலிஸாரின் உதவியை நாடத் தயங்குகிறாள். சற்றுத் துணிவு கொண்டு அவள் பொலிஸில் முறையிட்டாலும் பிறகு இன்னும் அதிகமாகத் தான் தாக்கப்படுவேன் என்று அவள் அஞ்சுகிறாள். தான் வசிக்கும் வீடு அவளுக்கே சொந்தம் என்பதால் வீட்டை விட்டு வெளியேறவும் அவள் விரும்பவில்லை. தவிரவும், விவாகரத்தினை நோக்கிப் போகவும் அவள் விரும்பவில்லை. ஏனென்றால் அவளது பிள்ளைகள் மணம் முடிக்கும் வயதை எட்டியவர்களாக இருக்கின்றார்கள். விவாகரத்து அவர்களது திருமண வாய்ப்புக்களைப் பாதிக்கும் என்று அவள் கருதுகிறாள். சமூக கலாசார விழுமியங்கள் அவளது முடிவெடுக்கும் தன்மையில் செல்வாக்குச் செலுத்துவதால், தனது கணவனது தாக்குதல்களுக்கு உள்ளாகியபடி மௌனமாக தன் வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கிறாள்.

***லதாவின் தியாகம்?***

லதா ஒரு மூன்று வயதுக் குழந்தையின் தாய். கணவனுக்கு திடீர் திடீரென வரும் வெறி போன்ற கோபம் காரணமாக அவன் தொடர்ந்து தாக்குவதை மௌனமாக சகித்துக் கொண்டிருக்கிறாள். அவள் பல தடவை முயன்ற போதும் கணவனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள முடியவில்லை. கணவனது இந்த வன்முறைகளின் மத்தியில் வளரும் தன் குழந்தை அநியாயமாக பழுதாகிவிடுமே என்று புத்திசாலித்தனமாக அவள் புரிந்து கொண்டிருக்கிறாள். ஆயினும், தான் பிரிவதால் உருவாகப்போகும் தன்னையும், பிள்ளையையும் மட்டுமே கொண்ட குடும்பம் குறித்த பெரியோர்களது அணுகுமுறை தொடர்பான அச்சம் அவளை சட்ட நடவடிக்கை எடுப்பதில் தயங்கச் செய்கிறது. விளைவு லதா ஒரு தியாகியாக 22 வயதிலேயே நாற்பது வயதுப் பெண் போல வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

***லூசி நல்ல தாய் இல்லையா?***

லூசியின் விடலைப் பருவ மகன் (Teen aged Son) போதைவஸ்துக்கு அடிமையாகி விட்டவன் என்பது உறுதியாகி விட்டது. அவன் தனது போதைப்பொருளை வாங்குவதற்காக தாயிடம் பணம் கேட்கிறான். மாநகர சபையின் வீதிகளைச் சுத்தம் செய்கிற ஒரு சாதாரண தொழிலாளியான அவளது ஊதியத்தில் அவளால் எவ்வளவுதான் கொடுக்க முடியும். அவள் கொடுக்காத பட்சத்தில் மகன் அவளைத் தாக்குகிறான். அவள் பொலிஸாரிடம் அவனைக் கைது செய்யுமாறு அல்லது கண்டிக்குமாறு முறையிட்டாலோ, அவர்கள் அவனிடம் போதைப் பொருட்கள் இருப்பதை நிரூபிக்கும் நிரூபணங்களுடன் வருமாறு கேட்கிறார்கள். அடிக்கடி அவள் தனது வீட்டின் வாசற்படியில் உடைந்து தொங்கும் இதழ்களுடனோ, முகக் காயங்களுடனோ உட்கார்ந்திருப்பதைக் காணலாம். அவள் பொலிஸில் பல தடவை முறையிட்டும் எந்தப் பயனும் இல்லை. 'ஒரு மகன் தாய்க்கு அடிக்கிறான் எனறால, அந்தத் தாய் ஒரு நல்ல தாயாக எப்படி இருக்க முடியும். அவள் ஒரு நல்ல தாய் அல்ல' என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆக, சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகளிடமிருந்து அவளுக்கு எந்த உதவியோ கருணையோ கிடைக்கவில்லை.



***வேறு வழி இல்லையா?***

பிஸ்ஸோ, மறுதலையாக தனது குழந்தைகள் மீது நல்ல கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவளது கணவனிடம் தினமும் அவன் குடிக்கின்ற போதெல்லாம் அடிவாங்குகிறாள். அவளது சமூகத்தில் இத்தகைய விடயங்கள் கண்டிக்கப்படுவதில்லை. மாறாக, இவை அன்றாட, மனைவியருக்கு உள்ள இயல்பான, நெருக்கடிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன! ஆனால், தனது பிள்ளைகளைக் கணவன் கண்டித்த போது அவளது கோபம் எல்லை மீறி விட்டது. அவள் வீட்டில் இருந்த உலக்கையால் ஒரு பலமான போடு போட்டுவிட்டாள். அவள் தனது கணவனை ஏன் கொன்றாள் என்ற கேள்விக்கு, அவள் அளித்த பதில் இதுதான்: 'அவனது மிலேச்சத்தனமான நடவடிக்கைகட்கு முடிவு காண வேறு வழி தெரியவில்லை. அவளுக்குத் தனது திருமண வாழ்வுக்கு முடிவு கட்டுவதற்குரிய சட்டபூர்வ வழி இருப்பது தெரிந்திருக்கவில்லை. இந்த அறியாமை அவளை இன்று சிறையில் தள்ளிவிட்டுள்ளது.

இத்தகைய பெரும்பாலான சம்பவங்களின் போது தமக்கு எதிரான வன்முறைக்கு காரணமாக இருப்பது தாம் அல்லது தமது தவறுகளே என்று தான் பெண்கள் கருதுகிறார்கள். சமூக விழுமியங்களைப் பேணுவது பெண்கள் தான் என்ற ஆழ வேரூன்றி உள்ள நம்பிக்கையே அவர்கள் இப்படிக் கருதுவதற்குக் காரணமாகும். பரம்பரை பரம்பரையாக கைமாறி வரும் சமூக விழுமியங்களும் பெறுமானங்களும் மிகவும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றன. பெண்களுக்கெதிரான வன்முறையின் இன்னொரு வடிவம் தான் பாலியல் ரீதியான முறைகேடாகும். இந்த வன்முறை பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராகவே நடாத்தப்படுகின்றது. திருமணமான பெண்களுக்கு எதிராக கண

வன்மார்கள
யல் வல்லுற
முறைமை எ
யும் காட்டு
பாலியல் ச
இருந்து விடு
பும் இல்ல

சந்தர்ப்பங்
ரீதியான
அவமானப்
உள்ளாவதா
உண்டு.
***தண்டனை***
மாலா ஒரு
பெண். தனி
பார்க்கும் உ
உள்ள ஒரு
சந்தோஷம
கணவன்
வேலை நிமி
வந்த பின்,
றங்களை
ளுக்கு பரிச்
பூட்டுவதும
முறைகளில்
அவன் நிர்
குகிறான்
முடியாத
'விசித்திரம
கொடுத்து
மணம் செய்
ளுக்கு இனை
ளுக்கோ வய
சொல்ல
இறுதியில்
களைத் தாங்
என்று வந்த
செய்ய முடி
அதிஷ்டவ
தியசாலைக்
பட்டு கொ
தேறிவருகிற
தில் தற்கொ
தண்டனை
அவள் அ
ணம் இருக்கி
***தப்பும் குற்***
ஆறு வயது
மத்திய கிழ
வேலைக்கு
ரமணி தனது
பில் வளர்ந்
கடைத்தெரு
கொண்டு
மிகவும் மே
நிலையில்
ரமணியைக்
விசாரித்த
அழுது அ
மாமன் தன்
தெரிவித்தா
பாலியல் வ
பட்டிருப்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாத்தப்படும் பாலி
றித்து எமது சட்ட
கயை அக்கறையை
லை. இத்தகைய
த வன்முறையில்
எத்தகைய வாய்ப்
பெரும்பாலான

பெண்கள் சட்ட
யை ...டுவதில்
ண்டிய நிலைக்கு
தைத் தவிர்ப்பதும்

கு?
சிகரமான இளம்
றையில் வேலை
உத்தியோகத்தில்
ளுனை அவள்
ணம் முடித்தாள்.
ாடு ஒன்றிற்கு
கப் போய்விட்டு
த்தில் சில மாற்
னித்தாள். அவ
ற்றதும், வெறுப்
பியல் உடலுறவு
மாறு அவளை
க்கத் தொடங்
கதுவும் செய்ய
அவ... அவனது
ர்சைக்கு இடம்
. புதிதாக திரு
ணத்தால் அவ
கனது நண்பர்க.
தவர்களுக்கோ
ாக இருந்தது.
இந்த இம்சை
முடியாத நிலை
ள் தற்கொலை
கொண்டாள்.
அவள் வைத்
ண்டு செல்லப்
கொஞ்சமாக
ங்கைச் சட்டத்
ற்சிக்கு பெரும்
பதால் இன்று
நோக்கிய வண்

ள்:
யின் தாயார்
டொன்றுக்கு
ருந்தார். சிறுமி
யின் கவனிப்
ர். ஒரு நாள்
கறி வாங்கித்
ம்பிய பாட்டி
தாக்கப்பட்ட
இருக்கும்
டுக்கிட்டாள்.
ந்தச் சிறுமி
படித் தனது
த்தார் என்று
சிறுமி தான்
உள்ளாக்கப்
கொள்ளவே

# குடும்பங்களில் வன்முறை: ஒரு மௌன அழுகை!

தமிழில்: அரவிந்தன்

இல்லை. மாநகரசபை வைத்திய சாலையில் அவளைப் பரிசோதித்த வைத்தியர் தான் அவள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். ஆயினும் அந்தப் பாட்டி பொலிஸில் முறைப்பாடு செய்ய விரும்பவில்லை. காரணம் தனது மகன் கைது செய்யப்பட்டு விடுவான் என்பதே. தனது மகனைப் பாதுகாக்கும் அவளது நடவடிக்கையால் ஒரு குற்றவாளி தண்டனையில் இருந்து தப்பிவிடுகிறான். இந்தக் குற்றம் வெளித்தெரியாமல் மறைக்கப்பட்டு விட்டது.

இப்படிப் பல சம்பவங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன. குறிப்பாக, பாதிக்கப்படுபவர்கள் யாருடைய பராமரிப்பிலாவது தங்கி இருக்க வேண்டிய நிலையில் இது நடைபெறுகின்றது. குடும்பத்தின் ஒரு உறுப்பினர் உதாரணமாக சகோதரன், தகப்பன், பாட்டன், அல்லது மாமன் போன்றவர்கள் தான் இச் சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளாக இருக்கின்றனர். இவை வெளியே தெரிந்தால் வரும் அவமானம் மற்றும் சமூகத்தின் பிற பகுதியினரால் ஒதுக்கப்படல் போன்றவை காரணமாக இவ்விடயங்கள் வெளியே சொல்லப்படுவதே இல்லை. இதன் விளைவு என்னவென்றால் இத்தகைய சம்பவங்கள் எழுதப்படாத, பரிகாரம் காணப்படாத சம்பவங்களாகிப் போய் விடுகின்றன. பாதிக்கப்பட்டவர் அவர் குழந்தையாகவோ வளர்ந்தவராகவோ இருக்கலாம். உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் ஏற்பட்ட வடுக்களுடன் வாழ்ந்து தொலைக்க வேண்டியதுதான்.

***வன்முறைக்குக் காரணம் என்ன?***

Women in need (WIN) என்ற அமைப்பினால் குடும்ப வன்முறைகள் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வொன்று கணவன்மாரின் வன்முறை நடவடிக்கைகட்கான காரணங்களையும் இத்தகைய நடத்தை தன்மையையும் பற்றிக் குறிப்பிடுகின்றது. அத்துடன் இவ்வாய்வானது இத்தகைய விடயங்கள் தொடர்பான தவறான கருத்துக்கள் நிலவுவதையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

பல்வேறு இனக்குழுமங்கள் சேர்ந்த வருவாய் குறைந்த நகர்ப் புறத்தில் வாழ்கின்ற 200 பெண்கள் எதேச்சையாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் 60% ஆனவர்கள் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர். 24% ஆன பாதிக்கப்பட்டவர்கட்கு வாழ்வதற்கு தனிப்பட்ட வருமானம் இருந்தது. 35% ஆனவர்கள் தமக்குச் சொந்தமான வீடுகளிலேயே வன்முறைகட்கு முகம் கொடுத்தபடி வாழ்ந்துகொண்டிருந்தனர். 36% ஆனவர்கள் கணவனதும் அல்லது அவனது குடும்பத்தினரதும் வீடுகளில் இருந்தனர். 5% ஆன பெண்களே தமது கணவன்மாருடன் சேர்ந்து வீட்டை சொந்தமாக வாங்கி வைத்திருந்தனர். 26% ஆனவர்கள் வாடகை வீடுகளில் குடியிருந்தனர். குடும்ப வன்முறையை சகிக்க முடியாமல் 38% ஆன பெண்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருந்த போதும் மீண்டும் வந்து தங்களின் கணவன்மாருடன் இணைந்து கொண்டுள்ளனர். முடிவே அற்ற இத்தாக்குதல்களைச் சகித்தபடி இந்த இடத்தில் வீடுகளை விட்டு வெளியேறுவது வெறும் தற்காலிகத் தீர்வாக மட்டுமே இருக்க முடியுமே என்று அவர்கள் கண்டு கொண்டார்கள்.

98% ஆன பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் ஆவர். 42% ஆன இப் பெண்கள் கர்ப்பமாக இருக்கும் பொழுதே தாக்கப்பட்டுள்ளார்கள். 29% ஆன பெண்கள் தாம் மட்டுமன்றி தமது குழந்தைகளும் தாக்கப்படுவதாக கூறுகின்றார்கள். 95% ஆனவர்கள் திருமணத்திற்கு முன் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கவில்லை. 75% ஆன பெண்கள் தம்மைத்தவிர வேறு நபர்களுடன் தமது கணவன்மார் வன்முறையாகப் பழகுவதில்லை என்று கூறுகின்றனர். அதாவது குடும்ப வன்முறையானது திட்டமிட்டுப் பெண்கள் மீது தனிமையான முறையில் வீடுகளில் வைத்தே நடாத்தப்படுகின்றது. அதுவும் வேறு சந்தர்ப்பங்களில் கொஞ்சமும் வன்முறை இயல்பு இல்லாத கணவன்மார்களால் இது செய்யப்படுகின்றது என்பதும் இந்த ஆய்வில் இருந்து தெளிவாயிற்று.

மரத்துண்டுகள், தளபாடத்தின் உடைந்த பகுதிகள் முதல் கத்திகள் போன்ற ஆயுதங்கள் பாதிக்கப்பட்ட பெண்களில் 51% ஆன பெண்கள் மீது பாவிக்கப்பட்டுள்ளன. இந்த வன்முறையானது வெறும் ஓரிரண்டு அடிகளை ஆண்கள் கொடுப்பதுடன் முடிவுறவில்லை என்பதை இது காட்டுகின்றது. இவ்வாய்வின் போதே மிகவும் பாரதூரமானதும் தொடர்ச்சியானதுமான முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பல சம்பவங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

18% ஆன பெண்கள் இந்த நிலைக்கு குடியே காரணம் என்று கூறுகின்றனர். ஆயினும் 82% ஆன பெண்கள் குடியும் ஒரு காரணமேயன்றி வேறு காரணங்கள் உள்ளன என்கிறார்கள். குடி தவிர்ந்த பல்வேறு காரணங்களை அவர்கள் தந்தார்கள். அவர்களது அபிப்பிராயத்தின்படி, பெண்களின் வீட்டு வேலைகள், நிதி நிலைமைகள், குழந்தைகளோடு தொடர்பான விடயங்கள், கூட்டுக் குடும்ப நிலைமைகள், வேலைச்சுமை, பாலியல் மற்றும் மனோரீதியான காரணங்கள் போன்றவையும் வன்முறைக்குக் காரணமாகின்றன என்கிறார்கள்.

88% ஆன தாக்கப்பட்ட பெண்கள் தம்மீதான தாக்குதல்கள் நியாயப்படுத்தப்பட முடியாதவை என்கிறார்கள். ஆனால் 12% ஆன பெண்கள் தம்மீதான தாக்குதல்களுக்கு தம்மையே குறைகூறுகிறார்கள். ஆண்களே குடும்பத்தின் பிரதான வருமானத்தைத் தேடுபவர்களாக இருப்பதால் அவர்களுக்கு பெண்களைத் தாக்கும் உரிமை இருப்பதாக பெண்களே கருதுகின்றனர்.

இந்த ஆய்வு பொருளாதார நிலைமைகள் ஏற்படுத்தும் தாக்கங்களால் உருவாக்கப்படுகின்ற மன அழுத்தங்களே குடும்ப வன்முறைக்கு காரணமாக இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றது. பொருளாதார ரீதியான நெருக்கடிகள் காரணமாக பெண்களைத் தாக்குவதற்கு காரணம் குடும்ப அமைப்பில் உள்ள பால் ரீதியான உறவு முறைகளே ஆகும். (Gender Relation ship) ஆண்களுக்கும் பெண் களுக்கும் இடையிலான இறுகிப்போன பால் ரீதியிலான ஏற்றத்தாழ்வுறவானது குடும்பங்களில் இருப்பதும் இவ் வன்முறைக்கு காரணமாக இருப்பதை இவ்வாய்வு எடுத்துக் காட்டுகின்றது.

மனைவியை அடித்தலும் பெண்களுக்கெதிரான வன்முறையும் இன மத சமூக குழுக்களிடையே எத்தகைய வேறுபாடுகளுமின்றி ஒரே விதமாக நடக்கின்றன. இது எல்லாப் பெண்களுக்கும் பொதுவாய் உள்ளது. இதிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பும் மிகவும் மட்டுப்பட்டதாகவும் விகிதாசாரப்படி மிகவும் குறைவானதாகவுமே உள்ளது. குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் குறித்த ஒரு புரிதலை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் அப்பால் சமூகத்தினை இது தொடர்பாக விழிப்பூட்டுவதும் அவசியமாகும். அப்போது தான் இவற்றுக்கான பரிகாரங்களைக் காணவும் பெண்கள் அதிகாரம் உள்ளவர்களாக மாறவும் முடியும்.

மேலும் பிற வன்முறைகள் பிரதானம் பெறுகின்ற காலங்களில் குடும்ப வன்முறைகள் கவனிப்பற்றுப் போய் விடுகின்றன. சட்ட நிறைவேற்று அதிகார பீடங்கள் குடும்ப வன்முறையை வெறும் 'தனிப்பட்ட குடும்ப விடயம்' என்று ஒதுக்கி விடுகின்றன. இந்த விவகாரம் அவரவர் குடும்பங்களுக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்று அவை கருதுகின்றன. சமூகம் கூட 'குடும்ப விவகாரங்களில்' பிறர் 'தலையிட' க் கூடாது என்பதையே விரும்புகின்றது. சமூகத்தில் இந்த அக்கறையற்ற போக்கும் பதில் தாக்குதல் குறித்த அச்சமும் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் நீதி கிடைக்காதவர்களாக 'பலமுள்ளவன் செய்வதே சரி' என்பதை ஏற்றுக்கொண்டவர்களாய் வாழ வேண்டி உள்ளது.

குடும்ப வன்முறை தொடர்பான புரிதலை ஏற்படுத்தவும் அதன் குறிப்பான தன்மையைப் புரிய வைக்கவும் உரிய திட்டங்கள், தொடர்பு சாதனங்கள் ஊடாகவும், பிற தொடர்பு வழிமுறைகளினூடாகவும் மேற்கொள்ளப்படலாம். இது பெண்கள் பற்றிய பழைய இறுகிப்போன விம்பத்தை மாற்றுவதற்கும், சமூகத்தின் மனதில் பெண்களுக்கு ஒரு பயனுள்ள பாத்திரம் உருவாக்கப்படுவதற்கும் உதவுவதாக அமையும். அதனால் வன்முறை, பழக்கங்களை உருவாக்கும் பால் ரீதியான இறுகிப்போன சிந்தனைகளை மாற்றுதல் சாத்தியப்படலாம்.



பெண்கள் தமக்குள்ள சட்டரீதியான உரிமைகளை, சட்டத்தை அறியும் முயற்சிகள் மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக இவ்விடயத்தில் அக்கறை உள்ள பெண்கள் அமைப்புகள் செயற்பட முடியும். சட்டம் சம்பந்தமாக முடிவு செய்யும் மட்டங்களில் இதற்கான அழுத்தத்தைக் கொடுக்கலாம். இதன் மூலமே நீண்ட கால நோக்கில் பெண்கள் குடும்ப வன்முறையில் இருந்து பரிகாரம் காண்பதற்குரிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கான பெரும் சாத்தியப்பாடுகள் உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 25

### தொலைக் காட்சி

குழந்தையின் ஒரு நாள் வாழ்க்கை பற்றிய எமது இது வரையான கலந்துரையாடல், தொலைக் காட்சி அவர்களது பெறுமானங்கள், நடத்தைகள் எல்லாவற்றிலும் ஏற்படுத்தும் செல்வாக்குக் குறித்து பேசாமல் முற்றுப்பெற முடியாது. குழந்தைகள் தொலைக்காட்சியைப் பார்ப்பதில் மிகவும் ஆர்வம் உடையவர்களாக உள்ளார்கள். புத்தகம் படிப்பதை விடவும், இசையைக் கேட்பதை விடவும், உரையாடலில் ஈடுபடுவதை விடவும் அவர்கள் அதை விரும்புகிறார்கள்.

தொலைக்காட்சியில் காட்சிகளை காண்பிப்பதற்கான பண ரீதியான ஆதரவினை தருபவர்களைப் பொறுத்தவரை சிறுவர்களே அவர்களது முழுமையான பார்வையாளர்




களாவர். சிறுவர்கள் விரைவில் ஒரு விடயத்தை ஏற்கச் செய்யப்படவும் நம்பச் செய்யப்படவும் கூடியவர்கள். அவர்கள் ஓசை நயம் வாய்ந்த சொற்றொடர்களை மிகவும் சிறப்பாகக் கற்றுக் கொள்கிறார்கள். இவற்றைச் சுலோகங்களைப் போல் ஒலிபரப்பு செய்வதினை அப்படியே பிரதி செய்து சத்தமிட்டு பெற்றோரை தொந்தரவுக்குள்ளாக்குகின்றனர். அவர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பாக சிறிய விடயங்களையே கேட்கின்றார்கள். இதற்கு சுயமோ கலைத்துவமோ தேவைப்படுகிறது. குதிரைகளும் துப்பாக்கி ஏந்திய மனிதர்களும் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றனர். ஆக, மணிக்கணக்காக இடையிடையே நாளுக்கு நாள் வன்முறையையும் கொலையையும் எதிர்கொள்கிறார்கள் - இடையிலே கலந்து வரும் ஓசைகளையும் விளம்பரங்களையும் சேர்த்து.

பெற்றோர் தொலைக்காட்சி தொடர்பாக இரு விதமான உணர்வுகளுக்கு ஆட்படுகின்றனர். குழந்தைகள் குழப்படி இன்றி அமைதியாக இருந்து தொலைக்காட்சி பார்க்கின்றார்கள். இதனால் பெற்றோரின் தொல்லை குறைகிறது என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அதே வேளை அவர்கள் குழந்தைகளின் கண்களுக்கும் மனதுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பையும் பற்றி கவனமாக இருக்கின்றார்கள். நீண்ட நேரம் பார்த்தால் கூட பார்வையில் பெரியளவு பாதிப்பு ஏற்படுவதில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

''களைத்துப் போன குழந்தைகள்'' என்ற தலைப்பில் ரைம் (Time) சஞ்சிகையில் (நவம்பர் 6,1964) வெளியான அறிக்கை ஒன்று இந்தக் கருத்தை மறுக்கிறது. இரண்டு விமானப்படைத் தளத்தைச் சேர்ந்த குழந்தை வைத்திய நிபுணர்கள், மூன்று முதல் பன்னிரண்டு வயது வரையிலான பெரிய எண்ணிக்கையிலான குழந்தைகள் கடுமையான சோர்வு, தலையிடி, நித்திரையின்மை, வயிற்றுக் கோளாறு, வாந்தி என்பவற்றால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இந்த அறிகுறிகளுக்கு எத்தகைய மருத்துவக் காரணிகளும் கண்டு பிடிக்கப்படவில்லை. பின்பு பெற்றோருடனான தொடர்ச்சியான உரையாடலின் பின், இக் குழந்தைகள் தொலைக் காட்சிகளின் ஆளுகைக்குட்பட்டவர்களாக (Adicted) உள்ளார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் கிழமை நாட்களில் மூன்று முதல் ஆறு மணி நேரங்கள் வரையும் வார

மூலம்: டொக்டர் ஜெயிம் ஜி ஜினோட்
தமிழில்: அருண்



## தொ(ல்)லைக்காட்சியா?

இறுதி நாட்களில் ஆறு முதல் ஒன்பது மணி நேரம் வரையும் தொலைக் காட்சியைப் பார்ப்பவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்.

வைத்தியம் மிகவும் தீவிரமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொலைக்காட்சி பார்த்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டை கடைப்பிடித்த சிறுவர்களின் அறிகுறிகள் இல்லாமற் போயின, கடைப்பிடிக்கப் படாதவர்களின் அறிகுறிகள் அப்படியே இருந்தன. ஆயினும் குழந்தைகளின் ஆளுமையில் அது ஏற்படுத்தும் பாதிப்பு பற்றி ஒரு நிச்சயமற்ற தன்மையே நிலவுகிறது. நிபுணர்கள் முரண்பட்ட அபிப்பிராயங்களை தெரிவிக்கின்றார்கள்.

1. தொலைக்காட்சி குழந்தைகளுக்கு நல்லதல்ல. அது குழந்தைகளிடம் வன்முறை மீது ஆர்வத்தையும், மனித அவஸ்தைகள் குறித்து எத்தகைய உணர்வுமற்ற போக்கையும் உருவாக்கி விடுகின்றது.

2. தொலைக்காட்சி குழந்தைகட்கு நல்லது. நாடகப் பாணியிலான வன்முறை நடிப்புகள் குழந்தைகளை அச்ச நிலையிலிருந்து விடுபட உதவுகிறது.

3. தொலைக்காட்சி குழந்தைகளிடையே தாக்கத்தையே ஏற்படுத்துவதில்லை. ஆளுமையும், பெறுமானங்களும் பெற்றோராலும் சகாக்களாலும் வடிவமைக்கப்படுகின்றதே அன்றி திரையில் தோன்றும் உருவங்களால் அல்ல.

ஒரு விடயத்தில் எல்லோருடைய கருத்துகளும் ஒருமித்ததாக உள்ளன. தொலைக்காட்சி குழந்தையின் நேரத்தில் பெரும் பகுதியை உறிஞ்சி விடுகின்றது. தகப்பனார் தாயுடன் குழந்தைகள் செலவிடும் நேரத்தை விட அதிகமான நேரம் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் செலவழிக்கப்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரை பாலியல் தொடர்பான விடயங்களும் சரி, மிலேச்சத்தனமான காட்சிகளும் சரி, வெறும் சாதாரண முசுப்பாத்தி நிகழ்வுகளே என்ற போதிலும் அவை குழந்தைகளை பல பயனுள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைக்கிறது. சில குடும்பங்களில் குழந்தைகள் தொலைக்காட்சியை பார்க்க வார இறுதி நாட்களில் மாத்திரம் அனுமதிக்கப்படுகிறார்கள். வேறு சில குடும்பங்களில் அவர்கள் சில குறிப்பிட்ட நேரங்களில் பெற்றோரது அனுமதியுடன் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். இப்பெற்றோர்கள் தொலைக்காட்சியை மருந்து வழங்குவது போன்று குறிக்கப்பட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட அளவே வழங்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

பெருமளவு பெற்றோர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகளை பார்வையிடுவது என்பதைத் தீர்மானிப்பதனை முழுமையாக குழந்தைகளின் பொறுப்பில் விடக்கூடாது என்று கருதுகிறார்கள். அவர்கள் கொலைகாரர்களும் வன்முறைக் குண்டர்களும் தங்களது குழந்தைகளை தமது செல்வாக்குட்படுத்திவிடக் கூடாது என்று கருதுகிறார்கள்.

பெற்றோருக்கு தமது குழந்தைகளை கீழ்த்தரமான பாலியல் விடயங்களிலிருந்தும் பளிச்சிடும் வன்முறையிலிருந்தும் பாதுகாக்கும் உரிமை உண்டு. குழந்தைகள் எல்லா விதமான சோகங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் இல்லை என்றாலும் கூட குழந்தைகள், மனிதனை மனிதன் இம்சிக்கின்ற சோகங்களை பார்த்து ரசிப்பதை அனுமதிக்கக் கூடாது.

(அடுத்த இதழில் பொறாமை...)

## இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை

கொழும்பில் கடந்த வாரம் பல பயனுள்ள நிகழ்வுகள் நடைபெற்றன. இவற்றில் சிலதை 'விபவி" மாற்றுக் கலாசார அமைப்பின் தமிழ்ப் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது.

கடந்த பௌர்ணமி தினத்தன்று ஐம்பதாண்டுகால இலங்கைத் தமிழ்ச் சினிமா பற்றி தம்பிஐயா தேவதாஸின் உரை இடம் பெற்றது. இவர் 'இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை" என்கிற ஆய்வு நூலொன்றையும் எழுதியுள்ளார்

இவரது கருத்துரையைத் தொடர்ந்து அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட பலதரப்பட்ட கலை இலக்கிய ஆர்வலர்கள் பத்திரிகையாளர்கள் தங்களது இலங்கைச் சினிமா பற்றிய கருத்துக்களையும்,அபிப்பிராயங்களையும் முன்வைத்தனர்

இலங்கைச் சினிமாவின்- கிட்டத்தட்ட முற்றாகவே இறந்துபோன காலங்கள் பற்றி நினைவுகூர்ந்தும் இனிவரப் போகும் காலங்களில் இலங்கைத் தமிழ்ச் சினிமா எப்படியிருக்கலாம் என்றும் பல்வேறு கருத்துக்களை அவரவர் ரசனை நிலைசார்ந்து முன்வைத்தனர்.

இலங்கையில் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட படம் 'மாநகரக் காதல்" இப்படம் தொடர்பான விளம்பரங்கள் சில காலம் பத்திரிகையெங்கும் பரவலாய் வந்தது. இப்படப்பாடல் நாடாவும் வெளிவந்தது. எனினும் இப்படம் இன்னும் வெளிவரவில்லை. இப்படத்தின் இயக்குனர் தேவதாஸன் என்பவரும் அங்கு வந்து தன் திரையுலக அனுபவங்களை மிக அழகாக எடுத்துரைத்தார். சினிமா தொடர்பான விடயங்களை மூன்றாம் நிலையிலிருந்து அணுகுகிற ஒருவராக இல்லாமல் அதற்குள்ளேயே இருக்கிற ஒருவராக தன் அனுவவங்களைச் சொன்னார். படத்தயாரிப்புக்கு வங்கிகள் வழங்கும் கடனுதவி பற்றிக் குறிப்பிட்ட அவர், தமிழ் படத்திற்கான கடனுதவி மறுக்கப்படுவதாயும் கூறினார். தனது கதையை அப்படியே சிங்களத்தில் தயாரிப்பதாக இருந்தால் தாம் உடனே கடனுதவி செய்யத்தயாரென்று வங்கி குறிப்பிட்டதாகவும் கூறினார். தமிழ்ச் சினிமா, சிங்களச் சினிமா என்ற பிரிப்புப் பற்றியும் கேள்வியெழுப்பினார். ஆனால் இதனை ஒரு அரசியல் பின்னணியோடும் மேலதிக கருத்துக்களோடும் நோக்கினார் ரஞ்சகுமார். பல நல்ல விடயங்களை அறிய முடியுமாகவிருந்தாலும் இவ்வாறான நிகழ்வு குறுகிய வட்டத்துடனேயே சுருங்கிப் போய் விடுகிறது. எல்லா நிகழ்வுகளுக்கும் குறித்த ஒரே சிலர் வந்திருந்தனர். வருகின்றனர்.

நிகழ்வுகள் பற்றிய குறிப்பையும் அறிமுகத்தையும் அன்றி இக்குறிப்பேட்டில் பெரிதாய் எதையும் செய்யாமலிருப்பது துரதிருஸ்டமே..!

மேற்குறித்த இந்நிகழ்வின் போது இயக்குனர் தேவதாஸன் அவர்களால் 'திரை" என்ற சிறுபத்திரிகை விநியோகிக்கப்பட்டது. சினிமா பற்றிய செய்திகள், இலங்கையில் 1962ல் வெளிவந்த முதலாவது படமான 'சமுதாயத்திலிருந்து" 93ல் வெளியான 'ஷாமிலாவின் இதயராகம்" வரையிலான அட்டவணை இதில் தரப்பட்டிருக்கிறது.

இடம்பெற்ற கலந்துரையாடலின் போது 'புதிய காற்று" படத்துக்கு கதைவசனம்,திரைக்கதை எழுதிய தெளிவத்தை ஜோஸப் தன் கசப்பான அனுபவங்களைச் சுவைபடச் சொன்னார்.

கலந்துரையாடலின் இறுதியில் மாதாந்தம் ஒரு நல்ல படத்தை திரையிடுவது என்று முடிவானது. மறுநாளே 'சொல்தாது உன்னாஹே" என்ற தர்மசேன பத்திராஜாவின் சிங்களத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. பின்னர் கலந்துரையாடலும் இடம் பெற்றது. பத்திராஜா 1977ல் 'பொன்மணி" என்ற தமிழ்ப்படத்தினை இயக்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய இரு நிகழ்வுகளும் பெண்கள் கல்வி ஆய்வு வட்டத்தில் இடம் பெற்றன. இவற்றிற்கு மறுநாள் ஞாயிறன்று ரூபவாஹினியில் பெண்கள் சம்பந்தமாக மாதமொருமுறை ஒளிபரப்பாகவுள்ள 'மறுபாதி" நிகழ்ச்சி தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. பெண்கள் தொடர்பாக என்னென்ன நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம் எவ்வாறு அவற்றைப் பெறலாம் என்பது பற்றிக் கதைக்கப்பட்டது. வந்திருந்தவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குப் பொறுப்பேற்றார்கள். இதன்படி ஜுலை மாதம் வரையான நிகழ்ச்சிகளைச் செய்வதற்கான அவகாசம் முன்கூட்டியே ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. தங்கள் தங்கள் துறையில் ஒவ்வொருவரும் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கும் இந்நிகழ்ச்சிகள் பலபரிமாணங்களை முன்வைக்கும் என எதிர்பார்க்கலாம். ஒவ்வொரு மாதத்திலும் இறுதி வாரமளவில் ஒளிபரப்பாகவுள்ள இந்நிகழ்சிக்கான பொறுப்பாளர்களாக கலாநிதி.செல்வி திருச்சந்திரனும், பத்மா சோமகாந்தனும் இருக்கிறார்கள்.

எதிர்பார்த்துக் காத்திருப்போம்...!

இன்னுமொரு நிகழ்வு- 'தொடர்பு சாதனங்களும் அரசியலும்' என்ற தலைப்பில் இடம் பெற்றது. இதையும் 'விபவி" யே ஒழுங்கு செய்திருந்தது. மிகச் சொற்பமானோரே கலந்து கொண்டதாலோ என்னவோ நிகழ்வு குறிப்பிடத்தக்கதாக அமையவில்லை. திறந்த கலந்துரையாடலுக்கான வாய்ப்பிருந்தும் கருத்தாடல் பயன்தரவில்லை.

எனவே, இவ்வாறான நிகழ்வுகள் பற்றிய அறிமுகத்தை நாம் முதலில் பரந்துபட்ட ரீதியில் தெளிவுபடுத்தவேண்டும். 'விபவி" தன் மாதாந்த நிகழ்ச்சி நிரலை ஒவ்வொரு மாதமும் தேசியப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தலாம். இது பற்றி ஆவன செய்வார்களாக.

வாசகர்கள் 'விபவி'யின் மாதாந்த நிகழ்ச்சி நிரலைப் பெற்றுக் கொள்ள கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்க.

'விபவி" மாற்றுக் கலாசார மையம்
'தமிழ்ப்பிரிவு"
51/7, ராஜகிரிய வீதி, ராஜகிரிய,
கொழும்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net







# வர்த்தக சினிமாவும் சமூகத்தில் அதன் தாக்கமும்



*சென்ற இதழ் தொடர்ச்சி.*

சினிமாக்களில் ஆண்களின் நிலை மேலானதாகவும் பெண்கள் அவர்களுக்கு கீழானவர்களாகவும் சித்தரிக்கும் போக்கு இருக்கும். இது பெண் ஆணுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்னும் நிலையை உண்டாக்கும். சில. பெண்கள் கட்டுப்பட்டு வாழ்வதும், சில பெண்கள் அதற்கு எதிராக முரண்பட்டு நிற்பதுமான நிலை தோன்றுகிறது. இதனால், ஆண், பெண் இணக்கம் தகர்தல், சமூகத்தில் பெண்களுக்கு இரண்டாம் தர நிலை என இரு கருத்தாக்கம் வளருகிறது சாதாரணமாக பெரும்பான்மையான மக்கள் பாலியலின் பால் நாட்டம் உடையவர்கள். இத்தன்மையை உணர்த்தும் சினிமாக்காரர்களின் வெளிப்பாடே பாலியல் கவர்ச்சியை சினிமாவில் முதன்மை படுத்துவது எனலாம். இதனை நடிகை சங்கவி கூறுவதாக,

*''சில நடிகைகள் சேலை அணிந்து நடித்தால் ரசிகர்கள் பதற்றமடைந்து விடுகின்றனர். யாரும் பயப்பட வேண்டாம். நவீன உடைகளை மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் அணிந்து நடிப்பேன்*

என தின முரசு வெளியிட்ட குறிப்பு துல்லியமாகப் புலப்படுத்துகின்றது. இப்பாலியல் வெளிப்பாடு உடைய படங்களின் தாக்கம், பாலியல் துஷ்பிரயோகம், ஆண்/பெண் ஒழுக்கக் கேடு, பாலியல் வன்முறை, இளமைத் திருமணம், பலதாரமணம் என்னும் விளைவுகளை தோற்றுவிக்கிறது. இப்பாலியல் கவர்ச்சி படங்களினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் மனநிலையை இந்திய சினிமாவின் முன்னணி கவர்ச்சி நடிகரான விஜய் அவர்களுக்கு வரைந்த கடிதத்தில் இருந்து அறியலாம்.

*டியர் விஜய் அறிவது!*

*உங்கள் அன்பிற்கு உரிய அற்கா எழுதுவது, கோபமா, உங்கள் மனதை வேதனைப்படுத்தி என் மனதையும் வேதனைப்படுத்தியது போதும். உங்கள் மனதில் என்றாவது என்னைப்பற்றி எண்ணம் தோன்றி, என்னை ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் காதல், காதல், காதல், காதல் போயின் சாதல் என்ற முடிவில் முற்றுப் புள்ளி வைத்து விட்டு உங்கள் மனதில் ஒரு இடத்தை பிடிக்க விரும்புகின்றேன்.*

*(தினமுரசு182)*

இக்குறிப்பு பாலியல் கவர்ச்சிப் படங்கள் சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தை தோற்றுவிக்கின்றது என்பதை தோலுரித்துக்காட்டும்.

நவீன தொழில் நுட்ப வளர்ச்சி திரையரங்குகளில் இருந்த சினிமாவை ஒவ்வொரு வீட்டிற்கும் நகர்த்தியது (டி.வி, டெக்) இதன் விளைவு பாடசாலை மாணவர்கள் சினிமா படத்திற்கும் சினிமா தொடர்பான தேடலுக்கும் கொடுக்கும் முதன்மை, பாடசாலை கல்விக்கு கொடுக்காத நிலையை உண்டாக்குகின்றது. இது மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்க காரணமாக அமைகின்றது. சினிமாவின் மூலம் காட்டப்படும் விடயங்கள் மக்களுக்கு பெருமிதத்தைத் தோற்றுவிக்கின்றது. இக் கனவுலக வாழ்வு சினிமா முடிந்து வெளியே வந்ததும் தகர்க்கப்படுகின்றது. ஆனால், அவர்கள் சினிமா தமக்கு கொடுத்த சுகத்தை மேலானதாகவே போற்றுவர். இது மீண்டும் மீண்டும் அவர்களுக்கு சினிமா பார்க்க வேண்டும் என்ற உணர்வையும் சினிமாவில் தாம் அனுபவித்த உணர்வை இன்பமாக பகிர்ந்து கொள்ளும் விவாதத்திற்கும் இடம் அளிக்கின்றது. இது மக்களின் சிந்தனை திறனை முடக்குவதுடன் அவர்களை அறியாமை இருளின் உள்ளும் வைத்து இருக்கின்றது.

சினிமாவில் வன்முறைக் காட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காரணத்தால் சண்டை, கொலை, கத்திவெட்டு, துப்பாக்கிச்சூடு, ஆக்கிரமிப்பு, அடிமைப்படுத்தல், அதிகாரத்தை விரிவுபடுத்தல் என்பன சாதாரணமாக காட்டப்படுகின்றன. சாதாரணமாக மக்கள் இவற்றை பார்த்ததும் தாங்களும் ஒரு படி முன்னேறி விட்டதாக உணர்கின்றனர். சினிமா பாத்திரம் போல் தம் நடத்தையையும் மாற்ற முயல்ன்ற போது வாழ்வில் பல இன்னல்களை எதிர்கொள்வதுடன் அவர்கள் சமூகத்தில் இருந்து அன்னியப்படும் போக்கும் தோன்றுகின்றது.

சினிமாக்காரர்களினால், வரலாற்று புராண இதிகாச விடயங்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப திரிபுபடுத்திக் கூறப்படுகின்றன. சினிமாவின் மூலம் புகட்டும் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் பிழையான பாதையில் வழிநடத்தப்படுவதற்கும் மேலே கூறிய விடயங்களை கொச்சைப்படுத்தி விளங்கிக்கொள்வதற்கும் காலாகின்றது.

இப் பின்புல வர்த்தக சினிமா சமூகத்தில் தோற்றுவிக்கும் தாக்கம் ஆபத்தானது. மனித சமூகத்தின் வளர்ச்சிப் பாதையில் பல முரண்களை தோற்று விக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. இந்நிலையில் இருந்து மக்களை எவ்விதம் விடுவிக்கலாம்? இவ்வாறான நிலைக்கு காரணம் என்ன? சினிமாவை மக்களுக்கு பயன்படக் கூடியதாக எவ்விதம் வளர்த்தெடுக்கலாம்? அதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்பனவற்றை ஆக்கபூர்வமாக உணர்ந்து அதற்கு ஏற்ப சினிமாவை முன்னெடுத்துச் செல்லும் போது, சினிமா மக்களுக்கான சிறந்த வெளிப்பாட்டுச்சாதனமாக தொழில்படும்.

முதல் நடவடிக்கையாக சினிமா தொடர்பாக மக்கள் கொண்டுள்ள கருத்தாக்கத்தை தகர்த்து மக்களை வெளியே கொண்டு வர வேண்டும். இங்கு சினிமா சார் விளம்பரங்களைச் செய்யும் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்காற்ற வேண்டும். சினிமா சார்பான கருத்தரங்குகள், முதலாம், இரண்டாம் தர படங்களை காண்பித்தல். அது தொடர்பான விளக்கங்களை கொடுத்தல் என்பனவற்றின் மூலம் இன்னொரு தளத்திற்கு மக்களை நகர்த்தலாம்.

கலைத்துவ உணர்வுடனும் சமூக அக்கறையுடனும் நெறியாளர்கள், தயாரிப்பாளர்கள் படம் எடுக்கும் போது அவர்கள் முயற்சிகள் வெற்றியளியாது போவதுடன் தம்மால் வர்த்தக சினிமாவின் முன் நிலைத்து நிற்க முடிவது இல்லை. இப்பின்னணியில்தான் ருத்திரையா, ஜெயகாந்தன், மகேந்திரன், போன்ற நெறியாளர்களை சினிமா சமூகம் அறியாத நிலை எழுந்து உள்ளது எனலாம். இவ்வரிய முயற்சியாளர்களுக்கு அரச ஆதரவு கிடைப்பதற்கும் அவர்களின் படத்தை மக்கள் முன் கொண்டு சேர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் வர்த்தக சினிமாவை குறித்த காலத்தின் பின் செயல் இழக்கச் செய்வதுடன் மக்களுக்கான வெளிப்பாட்டுச் சாதனமாக சினிமா வளரும் நிலையைத் தோற்றுவிக்கும். அப்போது சினிமாவின் மூலம் பல கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கலாம். இதை 'கிளாபர் ரோச்சா' என்ற திரைப்பட மேதை,

*திரைப்படத்தோடு நான் விளையாட விரும்பவில்லை. திரைப்படம் தகவல் தொடர்பு ஆகும். கற்பிக்கும் தன்மையுடையதாகும். கிளர்ச்சி செய்வதாகும். ஒரு பண்பியலான செய்தித் தொடர்பாகும். விழிப்புணர்வை ஏற்றக் கூடியதாகும். எனக் குறிப்பிடுகின்றார்.* அடுத்து ஞ யாங் என்ற சீன மேதை சீன எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது கவுன்சிலுக்கு சமர்ப்பித்த அறிக்கையில்,

*மக்களின் உலக கண்ணோட்டத்திற்கும் படைப்புக்கும் இடையில் உள்ள உறவுகள் சிக்கலானவை. இவ்விடயத்தை மிகவும் எளிமைப் படுத்தி விளக்குவதோ கொச்சையாக புரிந்து கொள்வதோ தீங்கு பயப்பதாகும். உண்மையான அனைத்து யதார்த்தங்களும் மெய்யான வாழ்வில் இருந்தே வரவேண்டும் என்பதாலும், தங்களால் விரும்பப்படும் யதார்த்த வாழ்வைப்பற்றிய எழுத்தாளனின் உலகக்கண்ணோட்டமும் அவர்களின் அகவய புரிதலின் ஒரு பகுதியே என்பதிலும் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இக்கருத்து எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் பொருந்தும் ''*

என கிளாப் ரோச்சா சொன்ன கருத்தை இன்னொரு விதத்தில் குறிப்பிடுகின்றார். இக்கருத்துகள் சினிமா சமூகத்தில் எவ்விதம் செயற்பட வேண்டும் என்பதையும் அதன் பயன்பாட்டையும் சாட்டுகின்றன.

இவ் அடிப்படை விளங்கிக் கொண்டு மக்கள் நலனில் அக்கறை கொண்டு மக்களுக்கான ஒரு வெளிப்பாட்டுச் சாதனமாக, தொடர்புச்சாதனமாக செயற்படும் போது, சினிமாவின் மூலம் பல அரிய கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதுடன், சிறந்த ஒரு கலைவடிவமாகவும் பொழுது போக்குக் கருவியாகவும் மாற்றியமைக்கலாம்.


**வடிவேல் இன்பமோகன்**

## லெஸ்பியன் கவிதைகள்

**1**

ஒரு விபத்து,
ஒரு கணப்பொழுதில் தோன்றிய
மின்னல் வெட்டு...
... ... ... ... ... ...
என்னையும் அவளையும்
பிணைத்தது.

நானோ
அதை வாழ்வின் பிணைப்பாக
உறவின் பிணைப்பாக
விளங்கிக் கொண்டேன்.
அவளோ...
சில விபத்துக்களின் பிணைப்பாகவே
காண்கிறாள் போலும்!




**2**

ஒரு மாலைப் பொழுது.
அலைந்து திரிந்ததில்
இருவருமே களைத்திருந்தோம்.
வியர்த்திருந்தோம்.

எனது மடியில்
தலை வைத்துப் படுத்திருந்த
அவளது கண்களினால்.......
அது என்ன?

வாழ்வில் முதன் முதலாக
என் இதயத்தைத் துளைத்துச் சென்ற அம்பு
என்னை இன்று
சிறிது சிறிதாகக் கொலை செய்கிறது.

**நிஷா**
02021997 இரவு 12மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இருட்டுச் சந்துகளுக்கு அப்பால்...

ஹிந்தி மூலம்: ராஜி சேத்

ஆங்கில் வழி தமிழில்: ஷகீப்




அவள் வேலை செய்து கொண்டிருக்கும் போதெல்லாம் அடிக்கடி அந்த நினைவுவரும். முதுகுப் புறத்தில் ஊர்ந்து சங்கடப்படுத்துகிற ஒரு பூச்சியாய் அந்த நினைவுகள், உணர்வுகள் இவளில் ஊர்ந்து அலைக்கழிக்கும். சீழ் கட்டிய புண் போல் அது இவளை அடிக்கடி நோவு படுத்திக் கொண்டேயிருக்கும்.

எல்லாமே இதுதானா? இதுக்குத்தானா ஒரு புதுவாழ்க்கையைத் தொடங்கினாள் அவள்? ஏற்கெனவே வாழ்ந்த வாழ்க்கைதானா இதுவும்? இதற்காகத்தானா 'சுர்ஜித்'தை தள்ளியெறிந்துவிட்டு வந்தோம்?

அதே வாழ்க்கை! அந்தி சாயும் மட்டும் யாரோ இன்னொருவனுக்காக இவளின் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வாசலில் காத்திருக்கிற வாழ்க்கை.

சுர்ஜித் என்றால் எதிர்க்கிறவனோ, எதிர்பார்ப்ப வனோ அல்ல. எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்கிற ரகமுமில்லை. இப்படிச் சொல்லியிருந்தான். ''உன்னால் இங்கு வாழ முடியாவிட்டால் அல்லது வாழ விருப்பமில்லை யென்றால் வாழாதே. உன் இஷ்டப்படி செய். ஆனால் நான் நீயில்லாமல் சாகமாட்டேன்.''

ஆனால், பொஸ்மிஸ்ரா தான் பயங்காட்டினார். ''அவன் உன்னை ஏமாற்றக் குழி பறிக்கிறான். பிறகு எதையாவது பண்ணி உனக்கு விவாகரத் தும் தர மாட்டான்'' என்றார். ஆனால் இதுவரை விவாகரத்தை அவன் தர மறுப்பதற்கான எதுவும் நிகழவில்லை. 'கோட்'டில் இவள் அவனுக்கெதி ராய் கத்திக் குழறிக் குற்றஞ்சாட்டியபோதெல் லாம் அவன் மௌனமாய்த்தான் இருந்தான். தீர்ப்பு சொல்கிற நாளன்றும் எதிர்வாதியான அவன் வரவேயில்லை.

அவன் பற்றி எந்த எதிர்பார்ப்பும் அங்கிருக்க வில்லை. மௌனங்கலையச் செய்கிறதாய் அவன் வருவதான காலடி ஓசைகள் அங்கு கேட்கவில்லை. ஆரவாரமற்று எல்லாம் அவனின்றி நடந்தது. அவளால், எல்லாம் அவளுக்காக நடப்பதாய் நினைத்துக் கொண்டாள். சுர்ஜித் என்று அழைக்கப்படுகிற எவனுக்கும் அங்கு எதுவும் இருக்கவில்லை.

இவளுக்கு அவனுடன் வாழ்வதில் விருப்பமில் லைத் தான். எதிர்மாறாகவும், ஒருதலையாயுந் தான் உறவிருந்தது. அப்படி இருந்தும், எல்லாம் முடிந்தும் அவளுக்குள் இன்னும் தடுமாற்றம் தான் அதுதான் ஏனென்று தெரியவில்லை!

சுர்ஜித்தின் நடத்தைகள், அவன் இவளைப் படுத்துகிறபாடு, அவனின் அதிகாரத்தனங்கள் எல்லாம் இவளை எந்தளவு தான் கஷ்டப்படுத்தி யிருந்தாலும் விவாகரத்துக் கேட்கிற அளவுக்கு இவள் போகவுமில்லை, துணியவுமில்லை. மிஸ்ராதான் பிடிவாதப்படுத்தினான். சுதந்திரம் தான் அவசியமென்றான். சட்ட ரீதியான பாதுகாப்பென்றான். அடிப்படை உரிமைகள் என்றான். எல்லாம் சொல்லி சுர்ஜித்தின் பலவீனங்களை இவனது எதிர்காலத்துக்காய் பயன்படுத்திக் கொண்டான். மகா வெறுப்புக் குரிய படைப்பு அவன்!

ஏன்தான் இப்படியொரு வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக் கொண்டுவந்து இப்படி அலைக்கழிகிறோமென்று இப்போதுதான் குமுறிக்கொண்டிருக்கிறாள்.

சுர்ஜித்தோடு இருக்கும் போது இவள்தான் சமைத்தாள். இங்கு அடிமை வேலையாட்கள் சமைக்கிறார்கள். சுர்ஜித் ஒரு ரகம், மிஸ்ரா ஒரு ரகம். அவன் சாப்பிடும் போது சத்தம் போட்டுக் கொண்டு சாப்பிடுவான். இவன் இரவுமுழுக்கக் குறட்டை விட்டுக் கொண்டு கிடப்பான். ஒருவ னுக்கு சிகப்பு சப்பாத்து பிடிக்கும், மற்றவனுக்கு கறுப்பு. அவனுக்கு பால் விருப்பம், இவனுக்கு கோப்பி! சுர்ஜித் இந்தியன் விஸ்கி குடிப்பான். மிஸ்ரா 'கஸல் ஸ்கொட்ச்' குடிப்பான். அவன் காமத்தோடு இவள் உடம்புக்கு வருவான். இவன் இன்னொன்றோடு வருவான்.

இரவில், மிஸ்ராவின் கட்டிலின் பஞ்சு மெத்தை களில் படுப்பதும், சுர்ஜித்தின் தும்புத்தலை யணையில் படுப்பதும் ஒன்றுதான். எதுவும் நிம்மதியான தூக்கத்தைத் தரவில்லை. இரவில் சிலவேளைகளில் அறையை விட்டு வெளியே வருவாள்.

அமைதியான இரவோடு இவளின் தூக்கமும் கலைந்துபோக, நீண்ட நேரம் வெறிச்சுற்றிருப்பாள். இரவில், மிக மிகக் கறுப்பான இரவில் இவளும் ஒரு பாதிதான்.

நடுச்சாமத்தில் குறட்டை ஓய்ந்து விழிப்பு வந்தால் மிஸ்ரா இவளிடம் வருவான். அவனின் பருத்த உடம்புக்குள் இவள் அமிழ்வாள். நடுச்சாமக் கூடலில் இவனும் சுர்ஜித் மாதிரித் தான். வெறியோடு மேலேறிப் படுப்பான். மகா கெட்ட படைப்புகள் இவர்கள்!

அலுவலகத்தில் மிஸ்ரா பொஸ்; டை கோட், சப்பாத்து சிகரட் என்று உயர்தட்டு ஆளாய்த் தெரிந்தான். ஆனால் வீட்டில் எல்லாம் தலை கீழாய்...! அழகான மாயைகள் போய்விட்டன.

மிஸ்ராவின் எதுவோ இவளைக் கவர்ந்து விட்டிருந்தது. அவனின் கவர்ச்சிக்குள் இவள் ஆட்பட்டு முன்னைய மாயைகளிலிருந்து விடுபட்டிருந்தாள். இருந்தும் அவளால் அவனை முன்னைய மிஸ்ராவாய்ப் பார்க்க முடியாதிருக்கிறது. அவனுக்கு முன்னாலும், அவன் இவளுக்கு முன்னாலும் ஆசையாய் ஏன் இப்போது உட்கார முடிவதில்லை...? இனி சுர்ஜித்தின் வீட்டுக்குப் போவதில்லையென்ற முடிவுக்கு வரச்செய்த, அவனின் ஒரேபார்வை யில் அவளின் உலகு அடித்துச் செல்லப்படுகிற நிகழ்வு ஏன் இப்போது நிகழ்வதில்லை? அவனின் மாயப் பார்வையில் இவளின் எல்லாமே தொலைந்தது. இப்போது ஏன் எதுவுமில்லை?

சுர்ஜித்தை பிரிவதென்று நினைத்திருந்தாலும், அவன் மறுத்திருந்தால் நடந்திருக்காது. அது போலத்தான் மிஸ்ராவும் எதையும் சொல்லித் தூண்டி இருக்காவிட்டாலும் நடந்திருக்காது. மிஸ்ரா, நல்ல வாழ்வு தருகிறேன் என்ற வாக்குறுதியை லஞ்சமாய் அவளுக்குக் கொடுத்து விட்டான். புதிய கவர்ச்சிகளுக்குள் அவள் உடல் சிக்கிவிட்டது. சுர்ஜித்தோடான வாழ்க்கையைப் பற்றி இவன் அடிக்கடி கதைத்து இவளைக் குழப்பிவிட்டான். அவனுடனான விருப்பமில்லாத வாழ்வை இவன் பயன்படுத்தி விட்டான்.

சுர்ஜித்தோடு இவள் விருப்பமில்லாமல் வாழ்கிறாள் என்பதை இவன் எப்படி ஊகித்தான்? சுர்ஜித் எதையும் எதிர்க்காமல், சண்டையிடாமல் இவள் பற்றி எவரிடமும் முறையிடாமல் ஒரு மௌன வாழ்க்கையை நடத்தியதுதான் காரணமா? எல்லாத் தெரிவுகளையும் இவளுக்கே விட்டுவிட்ட சந்தர்ப்பத்தை இவன் பயன்படுத்திக் கொண்டானா?

இவள் சுர்ஜித்திடமிருந்து விடுபடுவதைத்தான் விரும்பினாள். அது ஏனோ அவனால், இலகுவாகக் கிடைத்து விட்டது. அப்படிக் கிடைக்காதி ருந்தால் மிஸ்ராவை அடைவதென்பது ஒரு பிரயத்தனமாகத்தான் இருந்திருக்குமோ? மிஸ்ரா அவளை விரும்பினான். அடைந்து விட்டான். சுர்ஜித் விரும்பவில்லை, விட்டு விட்டான். அவரவர் ஆசைப்படி நடந்து கொண்டு விட்டனர். ஆனால் அவளது சொந்த ஆசாபாசங்கள்...?

இந்தக் கேள்விகள் அவளை அமைதியற்ற தாக்கின. இது பற்றிய உணர்வுகள் அவளோடு ஒன்றிக்கொண்டு அலைக்கழித்தன. சிலவேளை களில் வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கும் போது தன்னை எதற்கும் பயனற்ற ஒரு நிமிடமாய் உணர்வாள். தானும் இந்த வீட்டின் தவிர்க்க முடியாத ஒருபகுதிதானா எனக்கேட்டுக் கொள்வாள்.

இந்த வீட்டின் பெரும்பாலான பகுதிகள் பெட்டகங்கள், பெட்டிகள், மிஸ்ராவின் செத்துப் போன மனைவியின் ஞாபகங்களோடு மூடப்பட்டுள்ளதாய்த் தோன்றும். இந்த வீட்டின் பெரும்பகுதி வாழ்ந்திருக்கிறது. அது ஒரு வரலாறாகி விட்டிருக்கிறது. மிஸ்ராவின் சுருக்கம் விழுந்த தேகம் விரயமாகிப் போன இறந்த காலத்தின் ஒரு அத்தாட்சி. புதையுண்டு போன இறந்தகாலமாகிவிட்ட இந்த வீட்டின் பெரும்பகுதி இவளுடையதல்ல. மிஸ்ராவின் அலுவலகத்தில் டைப் பண்ணும் பொழுது பார்க்க முடியாது போனதை இப்போது மிஸ்ராவின் குசினியில் இருந்து அவளால் பார்க்க முடிகிறது.

எல்லாக் குசினிகளும் இப்படித்தான் இருக்கும். சுர்ஜித்தின் குசினி போன்று. வாழ்வு இப்படித் தான். சுர்ஜித்தின் குசினிகளாய்த் தொடரும்... மிஸ்ரா அலுவலகத்தில் இருந்தானென்றால் அவன் சுர்ஜித் மாதிரியில்லை, மிஸ்ராவேதான். வீட்டுக்கு வந்துவிட்டால் அவனும் சுர்ஜித்தான். வித்தியாசமில்லை.

இப்போது இரண்டு பேரும் ஒரே மாதிரியான வர்களாகி விட்டார்கள். எனினும் சுர்ஜித் பரவாயில்லாதவனாகத் தெரிகிறான். அவனுக்கு சுருக்கம் விழுந்த இறந்த காலங்களில்லை.

சுர்ஜித் இவளை அடிப்பான், துன்புறுத்துவான், இவளை எப்போதும் இரண்டாம் பட்சமாகவே நடாத்துவான். அவசியம் என்றால் கூட இவளின் தாயைச் சந்திக்க விடமாட்டான். இவள் மௌனமாய் அழுது கரைவாள். அவனின் வன்முறையையெல்லாம் தாங்கிக் கொள்வாள். இதெல்லாம் சில நிமிடங்களில் போய்விடக்கூடிய ஒன்றுதான்.

களைப்புடனும், நொந்தமனத்துடனும் அலுவல கம் வருவாள். இங்கு வந்தால் மிஸ்ரா தன் ஒதல்களைத் தொடங்குவான். தேநீர்க் கோப்பை கள் இவளை ஆற்றுப்படுத்தும். உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்க வேதனையிலிருந்து விடுபடுகிற உணர்வு வரும். அவன் ஆறுதல் படுத்துவான். கையைப் பிடித்துக் கொண்டிருப் பான். 'உன் தேவைகளை நான் நன்கு அறிகிறேன்' என்பான்.

'என்ன தேவைகள்?' இந்தக் கேள்வியைக் கேட்க ஒரு துணிவான உறவு அவளுக்கு இருக்க வேண்டும். இருந்தால் கேட்டிருப்பாள். முடியவில்லை. கீழே பார்த்துக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருப்பாள்.

அவளை அவனருகே உட்காரச் சொல்லுவான். அவனுக்கு எதிரே இருந்துவிட்டு அருகே சென்று, அவனை எதிர்கொள்ளுதல் இவளின் இயலாமையின் வெளிப்பாடாயிற்றா? அவள் எதிர்கொள்ளப் பயந்ததை எப்போதும் எதிர்கொண்டிருக்கமாட்டாள். மிஸ்ராவை எதிர்கொள்வதா, அல்லது தன்னைத்தானே எதிர் கொள்வதா... ஏதோ ஒரு தெளிவில் அவள் கண்கள் ஒளிர்ந்தன.

ஒருநாள், அவனருகே உட்கார்ந்திருந்தாள். அவன் தோள்களில் கையைப் போட்டான். இவள் மறுக்கவில்லை, மறுக்கவும் முடிய வில்லை. எச்சரிக்கையுணர்வில்லாத மௌனத் தில் இருந்தாள்.

அவன் மெதுவாகக் கைகளைத் தோள்களில் அழுத்தினான். காதருகே வந்து ''நாம் பின்னேரம் எங்காவது போவோம், வாறியா?'' என்றான்.

அவள் மௌனமாய் இருந்தாள். மனம் போரிட் டுக் கொண்டிருந்தது. எதையோ உணர்ந்தவ னாய் அவன் சொன்னான். ''சுர்ஜித்தையும் கூப்பிடு, பிறகு கூப்பிட நேரமிருக்காது.''

சுர்ஜித்தைக் கூப்பிடுவதா? அவன் என்ன மிஸ்ராவைப் போல் மேசையில் இரண்டு, மூன்று டெலிபோன்களோடு வேலை செய்பவனா? அவனைக் கூப்பிட்டால், 'டெக்னிக்கல் செக்ஷனிலிருந்து' அழுக்குப் படிந்த கையோடு 'சுப்பர்வைசரின்' மேசையருகே ஓடிவந்து பேசவேண்டும், பேசினான்; மிகவும் கோபத்தோடு, ''ஏன் என்னைத் தொந்தரவு பண்ணுகிறாய். உன்னால் நேரத்தோடு வர முடியாவிட்டால் நான் என்ன பண்ண...?''

முதலில் இந்தக் கோபப் பேச்சைப் பொறுத்துக் கொண்டாள். போகப்போகக் 'கோல்' பண்ணுவ தையே தவிர்த்துக் கொண்டாள். மிஸ்ராவுக்கும் சொன்னாள். ''சுர்ஜித்தை கூப்பிட வேண்டிய அவசியமில்லை''. மிஸ்ராவுக்கு ஆறுதலாய் இருந்தது. ஒன்று தவிர்க்கப்பட்டது அவனுக்குச் சந்தோஷம். சுர்ஜித், தான் முக்கியமல்லாதவன், என்ற

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலையிலிருந்து படிப்படியாக 'தேவை யில்லாதவன்' என்ற நிலைக்கு மாறினான். அவள் மிகத் தாமதித்தே வீட்டுக்கு வரத் தொடங்கினாள். அவனும் தாமதித்தே தான் வருவான். சும்மாவே நீண்ட நேரம் வீட்டுக்கு வெளியே கிடப்பான். இதுபற்றி மைத்துனன் 'தரு'வை விசாரித்தாள். அவன் இவளுக்கு ஏசினான். ''நீதான், நீ ஒன்றுமே தெரியாத அப்பாவி, நீ அவனின் பொக்கெட்டிலுள்ள பணத்தை ஒவ்வொரு நாளும் கணக்குப் பார்ப்பதில்லையா?'' நக்கலாகக் கதைத்தான்.

மிஸ்ரா இவளைத் தூண்டிக் கொண்டேயிருந் தான். சுர்ஜித்தோடு வாழ விரும்பவில்லை என்று நேரடியாகச் சொல்ல வைக்குமளவுக்கு அவளைப் படுத்திக் கொண்டிருந்தான். சுர்ஜித் இப்படித்தான் பதில் சொன்னான். ''உன்னால் இங்கு இனிமேலும் வாழ முடியாது போனால் வாழாதே. நீ நினைக்கிறாயா நான் நீயில்லா விட்டால் சாவேனென்று?

மறுப்பில்லை, கோபமில்லை, அடி உதை யில்லை, ஒன்றுமேயில்லை. ஏதாவது செய்திருந் தால் ஏதோ ஓர் உரிமையை - அவன் நிலைநிறுத்துக் கொண்டிருக்கிற உரிமையை - பிரயோகித்திருக்கக் கூடும். இவளும் அதற்காகத் தன் உரிமையைப் பிரயோகித்திருக்கக் கூடும். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. இலகுவாய் இவள் பிரிந்து போவதற்கான சந்தர்ப்பங்களை அவன் ஏற்படுத்திக் கொடுத்தான். அவள் விரும்பியதும் அதைத்தான். இவளை இப்போது எதுவுமற்று வீதியில் வாழ வைத்திருப்பதும் அவனின் இலேசான அணுகல்தான். ஆனாலும், அங்கிருந் திருந்தால் அது அவளின் வீடாக இருந்திருக் குமா? நான்கு சுவர்கள் கூட இவள் வீட்டை விட்டு போவதைத்தான் விரும்பியிருக்கும்.

ஆக, எல்லாம் இலகுவாக நடந்தது. தான் மிஸ்ராவிடம் வந்தது, மிஸ்ரா தனதானது, எல்லாமே முயன்று அடைகிறதான ஓர் இலக்காக இருக்கவில்லை.

அதன் பிறகு அவள் அலுவலகத்துக்கு வந்திருந் தாள். சுர்ஜித்திடமிருந்து டெலிபோன் வருவ தான உணர்வு தோன்றியது; வரவில்லை. அவளின் தலைக்குள்ளேயே டெலிபோன் ஒலித்தது. வெளியே வெறும் நிசப்தம் நிலவியது.

மிஸ்ரா அவளை பம்பாய்க்குக் கூட்டிச் சென்றான். சுர்ஜித் உடனான அவளது அனுப வங்களை அழிக்க முயன்றான். புதுப்புது அனுப வங்களை அவளுக்குக் கொடுத்தான். அவள், அலையில் அடிபட்டு உடைந்த சங்காய் மணலில் கிடந்தாள். அலைகள் அவள் மீது ஏறியிறங்கின, அவள் எதுவுமற்றுக் கிடந்தாள். எதுவும் அவளை அண்டவில்லை, ஓர் அந்நியம். அவள் அன்று தான் முதல் தடவையாக கவலைப் படுகிறாள். அதன் ஆழத்துள் அதன் சக்திக்குள் அமிழ்ந்து போவதான ஓர் உணர்வு தோன்றி மறைந்திற்று.

அவர்கள் ஒரு ஹோட்டலில் தங்கினார்கள். நல்ல ஆடைகள், படங்கள், காட்சிகள், மெலிதான லேஸ் வைத்த கவுண் எல்லாமே கிடைத்தன. அவன் அவளை ஒரு மாதிரியாய் வித்யாசமாய்ப் பார்த்தான். இறந்த காலம் சுருங்கிக் கிடக்கிற அவனது களைப்படந்த பார்வையில் அவள் தன்னை இழந்து வெளிறிப் போனாள். ஓர் ஆழமான கவலையினூடே மிருதுவாய்ப் பற்றிக் கொள்ளுமிந்த உணர்வு இவளில் தங்கிச் செல்லும். கடலின் அலையைப் போல் குமுறியெழுகிற அவளின் துயரம் இதனால் சில கணங்களுக்கு அடங்கிப் போனது. பம்பாயி லிருந்து திரும்பியதன் பின் அவன் அவளை சட்ட ரீதியிலான விவாகரத்துப் பெறுமாறு வற்புறுத்தினான். அவளும் இசைந்தாள். அது தேவையாகவும் இருந்ததவளுக்கு. சட்டப்படி அவள் யாருக்குச் சொந்தமென்பதை அவள் அறிய விரும்பினாள். அவர்கள் ஒரு மனு அனுப்பினார்கள். சுர்ஜித் ஒரு குடிகாரன், எந்தப் பொறுப்புமில்லாதவன், மனைவியை அடித்துத் துன்புறுத்துவான், ஒரு பெண்ணின் உழைப்பில் வாழ்பவன் என்றெல்லாம் சுர்ஜித் மீது குற்றம் சுமத்தியிருந்தார்கள்.

இது ஒன்றும் சுர்ஜித்தை அருட்டவில்லை. அவன் எப்போதும் இயந்திரங்களுடனேயே கிடப்பவன். இதெல்லாம் அவனைப் பாதிக்கிற விடயங்களல்ல. அவர்கள் அனுப்பிய மனுவைக் கிழித்தெறிந்துவிட்டு ''நீயும் உன்னுடைய பொஸ்ஸும் எங்காவது போய்த் தொலையுங்கள்'' என்றான்.

மிஸ்ராவுக்கு நீதிபதி 'சக்சானா' நன்கு பரிச்சய மானவர். அவன், அவளை அவரிடம் அழைத் துச்சென்று அறிமுகம் செய்துவைத்தான்.

நல்ல உடைகளை அவளுக்கு அணிவித்தி ருந்தான். ''எப்படியாவது இந்தக் 'கேசை' கெதியில் முடித்துவிட முடியுமா? அவன் - சுர்ஜித் எங்களைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கிறான்'' என்றான்.

மிஸ்ராவின் இந்தக் குற்றச்சாட்டுக்களையெல் லாம் அறிந்த சுர்ஜித் அவன் முகத்தில் காறி உமிழ்ந்தான்.

எப்படியோ விவாகரத்தை இலகுவாகப் பெற முடியுமாயிருந்தது. மிஸ்ரா தன் ஆயுதங்களை யெல்லாம் பயன்படுத்தினான்.

மிஸ்ரா இவளை எப்போதும் சீண்டிக் கொண்டே இருப்பான். ''உன்னை வெல்வதென்பது எவ்வளவு போராட்டம் அன்பே'' என்று பூசி மெழுகுவான்.

உடனேயே நாம் சுர்ஜித்தின் வீட்டுக்குத் திரும்பிவிடலாமா என நினைத்தாள். குசினியில் அடுப்புக்கு முன்னால் நின்று கொண்டு, ஆவி பறக்கிற தேநீர் தயாரித்து, அவன் வருகைக்காக காத்துக்கொண்டு... நினைவுகள் அப்பிக் கொண்டன. அவனின் காலடி ஓசைகளுக்காய் வீட்டு வாசலைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவன் வருவானா?

வந்தால்...

எல்லாம் திகிலான கற்பனைகள்! மீள் இணைவின் சந்தோஷம்!? மீண்டும் சுர்ஜித்தா...? இல்லையில்லை. இறந்த காலமோ, எதிர்காலமோ எதையும் அவன் பின்னோக்கிப் பார்ப்பதில்லை. அவனுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. பாதிப்பும் இல்லை. அவன் தனித்த மாறுபட்ட பிறவி.

அவளின் தந்தை இறந்த போது, அவளின் மனச்சோர்வைப் போக்க அவன் தனது பாணியில் இவ்வாறு கூறினான். ''நீ போய் அம்மாவுடன் கொஞ்ச நாளைக்கு இரு. ஆறுதலானதன் பின் வா''




" அதே வாழ்க்கை! அந்தி சாயும் மட்டும் யாரோ இன்னொருவனுக்காக இவளின் எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு வாசலில் காத்திருக்கிற வாழ்க்கை! "

அது உண்மையாயிருந்திருந்தால் சுர்ஜித்திட மிருந்து பிரிந்து வந்து இவனோடு வாழ்வது ஒரு போராட்டமாக இருந்திருந்தால், இவளுக்கென் றொரு மதிப்பு இருந்திருக்கும். எனக்காக மிஸ்ரா போராட்டம் நடத்தியதென்பது உண்மையா? - இல்லை. இங்கே அவள் எந்தப் பெறுமதியும் அற்றுக் கிடக்கிறாள். முறிந்தும் வளைந்தும் நம்பிக்கை மோசடிக்குள் இலகுவாய்ச் சரணாகதி யாகிக் கிடக்கிறாள். போராடியிருந்தால் ஏதாவது இருப்பு இவளுக்கு இருந்திருக்கும்.

இப்போது வேதனை ஆழமாகிப்போயிற்று. அலுவலக வேலையை விட்டு விட்டு வந்து பெட்டகங்களால் நிறைந்து கிடந்த மிஸ்ராவின் இறந்த காலத்தை எதிர் கொள்ளப் போனது வேதனையாகிவிட்டது. அவள், அவளுக்கென்ற நிகழ்காலத்தில் இல்லை. அவனுடனான இறந்த காலத்திற்கே தன்னை இழந்து விட்டாள்.

ஹோட்டல் அறைகளிலும் மரநிழல்களிலும், அலுவலகத்திலும் அவள் மீதான அவனின் காதலால் மிதந்தாள். அது தன்னைத் தடவிச் சுகப்படுத்திய அனுபவமாக அவளுக்கு இருந்தது. வாசனைகளுக்குள் வசப்பட்டுப் போனாள். ஆனால் இப்போது தெவிட்டுகிற ஒன்றே வாழ்க்கையென்றில்லாது... சலிப்பூட்டிக் கொண்டு.... இப்போதுதான் அவளுக்குத் தெரிகிறது. பின்னேரங்களில் அவன் ஒழுங்காக நிறைவேற்றுகிற 'குடிக்கிற நிகழ்வில்' ஒரு விஸ்கிப் போத்தலாகத் தானும் மாறிப்போனது!

அவனின் வீட்டு வேலைகளைச் செய்வதற் கென்று தான் பொறிவைக்கப்பட்டதாய் இப்போது அவள் உணர்கிறாள்; முதுகின் குறுக்கே ஏதோ ஒரு பூச்சி ஊர்வதாய் அது இவளில்.

இந்த வேலைகளையே, இந்த வாழ்க்கையையே தான் சுர்ஜித்துக்காகத் தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?

இதையே மிஸ்ராவுக்காக செய்து கொண்டிருப்பதால் என்ன நடக்கும்?

''உங்கட அப்பா செத்து இருந்தால்...?''

''என்னுடைய அப்பாவை விடு'' அவளை மேலும் கதைக்க விடாமல் பல்லை நறநறவென்று கடித்தபடி சொல்வான். சின்ன வயதிலேயே அம்மாவை விட்டு விட்டு சாதுக்களோடு போய்விட்ட அவன் தந்தை பற்றிய மிகச்சிறிய அனுதாபமே அவனில் இருந்தது. அவனின் அம்மாதான் அவனை இந்த அளவுக்கு வளர்த்து எடுத்தாள். ஒரு வைராக்கியத்துடனேயே அவன் தன் வாழ்க்கையை வாழ்ந்தான். இடையில் எதுவும் இருக்கவில்லை; இவர்களிடையேயும் தான்...

அவளுக்கும் சுர்ஜித்துக்குமிடையே ஒன்றரை வருடங்களாக இடைவெளிகள் நீள்கின்றன. ஒரு வெறுமை. ஒரு வரலாறு...

அவளின் சரணாகதி வரலாறு அது. மாயையாய்த் தெரிந்த மிஸ்ராவில் அவளின் இடைவெளி வரலாறு தொடங்கியது.

அவள் தன்னைத்தானே வருத்திக் கொண்டாள். அவர்களுக்கிடையிலான இடைவெளி சட்டத்தின் பெயரால் விவாகரத்து என்றாயிற்று.

இப்போது மிஸ்ராவின் வித்து இவளுள், கருப்பையினுள் இருந்து கொண்டு கருப்பைச் சுவர்களில் உதைத்துக் கொண்டிருக்கிறது.

தவிர்த்தல் இயலாத பிணைப்பு அது. ஆனால் சுர்ஜித் எதுவுமற்று தனியனாக...! அவனிடமி ருந்து எந்த அழைப்புமில்லை. இங்கிருந்து மீள்வதற்கான, இதிலிருந்து தப்புவதற்கான வழிகளில்லை.

அவளின் எதிர்காலமாய் அவளுள்ளே கிடக்கிறது தடைக்கல் ஒன்று. அதைவிடுத்த எதிர் காலம் அவளுக்கில்லை. மிஸ்ராவின் புதைந்து கிடக்கிற இறந்த காலமாய்... அவளைப் புதையப் பார்க்கிற எதிர்காலம். இங்கிருந்து எங்காவது போவதற்கான பாதைகள் இருக்கின்றனவா?

அவர்களிலேயே அழுத்தி வைத்திருக்கிற பாதங்களை அகற்றிவிட முடியாதிருக்கிறது. தப்பித்தல் இயலாமையா? முன்னும் பின்னுமென தடையரண்கள்... இருட்டுச் சந்துகள்... சுழன்றடித்து புழுதியெழுப்பி... முடிவற்று... தப்பித்தல் தடைப்பட்டதா?

அவள் எதற்காக அவளையே முறித்துக் கொண்டாள்? அவளின் எதிர்பார்க்கைகள் என்ன சவர்க்கார நுரைகளா? வெறும் அழகாய்க் கரைந்து போகிறது. தற்துணிவு இழந்து நுரையாகிப் போனதுதான் அவள் வாழ்க்கையா? இருபக்க தொடங்கலும் இப்போது இருட்டுச் சந்தாய்?

மிஸ்ராவின் பொத்தான் கட்டாத சேர்ட்டை தூர எறிந்துவிட்டு, அவளின் அறைக்குத் தடுமாறி நடக்கிறாள்.

வெளியே சுட்டெரிக்கிற வெயில். அறைக்குள் இதமான குளிரும் அளவான இருட்டும் இவளை ஆசுவாசப்படுத்தியது. குளிர் நான்கு சுவர்களுக்குள் பூட்டப்பட்டிருந்தது. கட்டில ருகே வந்தாள். குளிரூட்டியை நிற்பாட்டினாள். ஜன்னலருகே சென்று திரைச்சீலைகளை அகற்றினாள். கதவுகளையும், ஜன்னல்களையும் தள்ளித் திறந்தாள்.

வெளிச்சமும், சூடும் அந்தப் பூட்டப்பட்ட அறைகளுக்குள் நுழைந்தன. எல்லாம் பரவியது உள்ளுக்குள் சூடு... ஒளி இயற்கையாய் இதற்குள் அரிதாய்த்தான் நுழைந்திருக்கும். அறையின் சீர்படுத்தப்பட்ட குளிரும், செயற்கைச் சட்டகங்களும் இல்லாமல் போனது.

அவள் மலைப்புற்றாள். அறையின் அதிகார ஒழுங்கை முறித்த வெளிச்சமும், வெக்கையும் இவளைக் குஷிப்படுத்தின. நோவிடையே தோன்றும் ஒரு சிறிய ஆறுதல். துன்பத்தில் கண்ணீர் தருகிற இதம். எல்லாம் கணப்பொழுதில் இவளில்.

எல்லாம் தெளிவாய்த் தெரிந்தது. மிஸ்ராவை விட்டும், சுர்ஜித்தை விட்டும் தூரமாகி நிற்பது ஆறுதலைத் தருகிறது. தனித்துக் கிடப்பது ஆறுதலானதா? இந்த அறையின் எதுவுமற்ற இறந்தகாலமும், செயற்கையான எதிர்காலமும் இவளுக்குப் பாடம் சொல்லின. பூட்டப்பட்ட அறைகளுக்குள் செயற்கையாய்த் தான் எல்லாம் வருகிறது; அடைப்பட்டுக் கிடக்கிறது. வெளியே கட்டுப்பாடற்ற ஒளியும், சூடும் இயற்கையாய் இதமாய் கிடைக்கிறது.

இவளில் ஏதோ செய்கிறதாய் இந்த அனுபவங்கள் அவளை உசுப்புகிறது.

அடைபட்ட இருளுக்குள் இருந்து எதையும் அவளால் தெளிவாகப் பார்க்க முடியாது போயிற்றா? துணிவும் அதற்குள்ளால் காணாமல் போனதா?

இப்போது எல்லாவற்றையும் முறித்துக் கொண்டு போக முடியுமான உணர்வு அவளுள் தோன்றுகிறது. மிஸ்ராவின் உடலியல் ஆக்கிரமிப்புக்களை, சுர்ஜித்தின் மானசீக வன்முறைகளை உடைத்தெறிகிற பலம் அவளில் எழுகிறது.

அவள் தனித்து சுயம் நிரம்பிக் கிடந்தாள்.

தெளிவாயும், உயிர்த்துடிப்பாயும் ஏதோ ஒன்று அவளில் சறுக்கியது. அந்தத் தன்னுணர்வோடு அவள் டொக்டர் அக்னிஹோதிரின் கிளினிக்கிற்கு வந்தாள். செருப்பணியாத வெறுங்கால்கள். முன்னமும் ஒரு தடவை அவள் தன் நண்பியுடன் இங்கு வந்திருக்கிறாள்.

''டொக்டர், உங்கள் உதவி தேவை'' கண்களில் தெளிவும், மலர்ச்சியும் இருந்தது.

ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே, ஒரு விண்ணப்பப்படிவத்தை நீட்டினார்.

வாங்கி நிரப்பியவள்...' நான் செய்கிற அபோர்ஷனுக்கு யாரும் பொறுப்பாய் நிற்கமாட்டார்கள் - டொக்டர், அப்படி யாரும் அவசியமில்லை'' என்றாள்.

''ஏன்?''

''அவர்கள் என்னைப் பலாத்காரப்படுத்திப் போட்டார்கள்.''

**ராஜி சேத்:-** டில்லியில் வசிக்கிற ஒரு ஹிந்தி நாவல், சிறுகதையாசிரியை. இவர் ஒரு கவிஞரும், கட்டுரையாளரும் கூட. Yug - Sakshi என்ற சஞ்சிகையின் இணையாசிரியராகவுள்ள இவர் இந்திய உயர் கற்கை நிறுவனத்தில் ஒரு மாணவியாகவுமிருக்கிறார்.

**நன்றி:- ''மனுஷி'' - இந்தியா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பின் காலனித்துவ விமர்சனவியல்

கொன்சன்ரைன்

கலை இலக்கியக் கோட்பாடுகள் காலத்திற்குக் காலம் விரிவடைந்து புதிய புதிய தரிசனங்களையும் புதிய புதிய பரிமாணங்களையும் தருவது இயல்பு. இந்த வகையிலே அண்மைக் காலங்களில் (தொண்ணூறுகளில்) சில புதிய இலக்கிய அணுகுமுறைகள் கோட்பாட்டு வடிவம் பெற்றுள்ளன.

புதிய அணுகுமுறைகள் அவ்வப் போது சிலரால் கையாளப்பட்டு வந்தாலும், அவை பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரன்முறையான கோட்பாட்டு வடிவமாக ஏற்றுக் கொள்ளப்படும்போதுதான் அவை பிரபலமடைகின்றன.

இந்த வகையிலே அண்மைக் காலங்களில் பின் காலனித்துவ விமர்சனவியல் (Post Colonial Criticism) ஒரு முக்கிய இலக்கியக் கோட்பாடாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த பின் காலனித்துவ அணுகுமுறையானது மேலைத்தேயவர் அல்லாத பிறரை குறிப்பாக கீழைத் தேசத்தவரை 'பிறத்தியான்' எனக் கருதி அவர்களை இரண்டாம் தர மனிதர்களாக கருதும் மனப் பாங்கின் ஒரு பிரதிபலிப்பாக உருவானது என நாம் பொதுவாகச் சொல்லாம்.

இந்தக் கோட்பாட்டியக்கத்திற்கு மூலமாக விளங்கும் ஒரு நூல் எட்வர்ட் செய்த் (Edward Said) எழுதிய 'ஓரியன்டலிசம்' (Orientalism) என்ற நூலாகும்.

மேலைத் தேசத்தினரிடையே கீழைத்தேசத்தினரை தனித்துவமற்ற ஒரு மனிதக்குழுவாகக் கருதும் மனப்பாங்கு தொன்று தொட்டு நிலவி வருகிறது அவன் ஒரு ஆசியன், அவன் ஒரு இந்தியன் என்ற பொதுமைக்கூடாக கீழைத் தேசத்தவரை பார்ப்பது அவர்களது வழமை. அவன் ஒரு தனித்துவமான மனிதன். அவனுக்கென்றொரு சுயமான இருப்பு உள்ளது என்பதை அங்கீகரிக்கத் தவறுவதே இதன் அடிப்படைக் காரணம்.

மேலைத் தேசத்தவர் தங்களது செயற்பாடுகள் அறிவுரீதியான, தத்துவார்த்த அடிப்படைகளில் உயர்ந்த தளத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளாகவே கருதுகின்றனர். அதேவேளை கீழைத் தேசத்தவர் பெரும்பாலும் இச்சைகளின்பாற்பட்ட அதாவது இயல்பூக்கங்களின் (Instincts) அடியாக உந்தல்களின் அடிப்படையிலேயே செயற்படுபவர்கள் என்ற கருத்து மேலைத்தேசத்தவரின் மனச்சட்டகத்தில் ஆழப்பதிந்துள்ளது.

கீழைத்தேசங்கள் அழகிய ரம்மியமான இயற்கை எழில் நிறைந்த நாடுகள் என்ற கருத்தும், கீழைத் தேசத்தினர் மாயாஜாலங்களிலும் விஞ்ஞான பூர்வமற்ற மந்திர தந்திரங்களிலும் மூழ்கியிருப்பவர்கள் என்ற அபிப்பிராயமும் இத்தகைய ஒரு மனப்பாங்கின் வெளிப் பாடேயாகும். ஆகவே கீழைத் தேசத்தினர் திக்குத்திசை தெரியாதவர்கள் வழிகாட்டப்படவேண்டியவர்கள் என்பது அவர்களது அபிப்பிராயம்

இந்த மனப்பாங்கு ஒரு புறமிருக்க இலக்கியத்தை பொதுமைத்தன்மை வாய்ந்ததாகக் கருதுவதும் ஒரு வகையில் 'கலாசார ஒதுக்கல்' மனப் பாங்கிற்கு அனுகூலமானதாகவே அமைகிறது.

ஒரு இலக்கியத்தை உன்னதமானது காலதேச வர்த்தமானத்திற்கு அப்பாற்பட்டது, மனித குலம் முழுவதற்கும் பொருத்தமானது எனக் கருதுவதும் ஒரு வகையில் ஏனைய பண்பாட்டு கலாசாரங்களின் தனித்துவத்தை குறை மதிப்பீடு செய்யும் முயற்சியாகவே கொள்ளப்பட வேண்டும்.

இப்படியான நோக்கு நிலைகள் அல்லது கருத்துப் போக்குகள் உக்கிரமடையக் காரணமாயிருந்தது காலனித்துவ ஆட்சிக்காலம் தான். ஐரோப்பியர் தாம் கைப்பற்றிய தேசமெங்கும் தமது கலாசார பாரம்பரியங்களை பரப்புவதில் பெரும் சிரத்தை கொண்டிருந்தனர்.

ஐரோப்பியர் தாம் கைப்பற்றிய தேசங்களில் நிலவிவந்த கலாசாரத்தையும் வழக்காறுகளையும் நாகரீகமற்ற பிற்போக்குத்தனங்கள் எனக் கருதி அப்படியான ஒரு கருத்து நிலையைச் சுதேசிகளிடத்திலும் நிலைபெறச் செய்தனர்.

காலனித்துவ ஆட்சியாளர்களது இத்தகைய நடவடிக்கைகளையும்



இதற்கு எதிரான சுதேசிகளின் செயற்பாடுகளையும் கலை இலக்கிய வரலாற்றில் நாம் ஆங்காங்கு காணலாம்.

உதாரணமாக இலங்கை இந்திய ஓவிய வரலாறை நோக்கும் பொழுது இது தெளிவாகும். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் ஹர்வெல்போன்றோர் விக்ரோரிய மரபு முறை ஓவியத்தினை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தி அதனை மிகவும் உயர்ந்த கலை வடிவாக முதன்மைப்படுத்தினர். இதனை ஆட்சியாளரும் ஊக்குவித்தனர். இந்தத் திணிப்பு முறைகளுக்கு எதிராக செயற்பட்ட பலரும் முனைப் படைந்தனர். இதன் வழிவந்தவர்கள் தாம் ஜெமினி ராய், ஆனந்த குமாரசுவாமி போன்றோர் (ஜெமினி ராயின் முயற்சிகள் பாரம்பரியத்தின் புத்துயிர்ப்பாகவும், ஒருவகை எதிர்வினை (Reactionary) முயற்சியாகவுமே அமைந்தது.)

இத்தகைய பின் காலனித்துவ முனைப்புகள் அங்காங்கு தலைப் பட்டாலும் அவை ஒரு பேரியக்கமாகவே உருவாகத் தவறின. இதற்கு எமது சமூகங்களிலேயே ஆங்கிலேயர் ஏற்படுத்திச் சென்ற சமூக அரசியல் ஊடாட்ட பண்பே அடிப்படைக் காரணம்.

எமது சமூகங்களிலும், அரசியலிலும், முதன்மை பெறுபவர்களும், செல்வாக்கு உடையவர்களும் பெரும்பாலும் மேலைத்தேய வாழ் முறைகளையும் கலாசாரத்தையும் வரித்துக் கொள்பவர்களாகவே அமைந்துள்ளனர். இவர்கள் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக வேடம் தரித்தாலும், ஆத்ம அளவில் அந்நியர்களாகவே வாழ்பவர்கள்.

அத்துடன் சக சுதேசிகளை அந்நியப் படுத்தி அவர்களில் இருந்து மிகுந்த மரியாதையையும் வரவேற்பையும் பெறுவது தமது உரிமை போன்று கருதுபவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இவ்வாறு சமூக மேல் நிலை அசைவியக்கம் என்பது பெருமளவு மேலைத்தேய பண்பாட்டு அம்சங்களை வரித்துக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. இப்படியான சமூக அரசியல் தன்மை ஒரு பொதுவான மனச்சட்டமாக எமது சமூகத்தில் பரவியிருப்பது வருத்தத்திற்குரியது. இத்தகைய கலாசார ஒதுக்கல் மனப் பான்மை இனங்களுக்கிடையே மட்டுமன்றி ஒரே இனத்தின் வெவ்வேறு பண்பாட்டு உப குழுமங்களுக்கிடையிலும் செயற்படவே செய்கிறது. இந்தப் பண்பாட்டு உப குழுமங்களுக்கிடையிலான 'ஒதுக்கல் மனப்பாங்கினை' ஆராயும்குழு அணுகுமுறையாக நாம் தலித்தியத்தைக் கருதலாம்.

ஆகப் பின் காலனித்துவ விமர்சனம் பொதுவில், 'கலாசார ஒதுக்கல்' மனப்பாங்கின் வெவ்வேறு வடிவங்களை இலக்கியப் பிரதியில் ஆராய்வதை அடிப்படையாகக் கொண்டது. இது பொதுமைப்பாட்டுக்கு எதிரானதாக அமைகிறது.

ஒரு இலக்கியம் காலனித்துவ மேலதிகாரம் அல்லது இன ஒதுக்கல் சம்பந்தமாக மௌனம் சாதிக்கும் பொழுது அல்லது அதற்கு கொடுக்கப்பட வேண்டிய இடம் தவிர்க்கப்படும் பொழுது அவ்விலக்கியம் பின் காலனித்துவ விமர்சனத்திற்கு ஏற்ற களமாய் அமைகிறது.

பல்வேறு கலாசாரங்கள் ஒரு இலக்கியப்பிரதியில் அவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. அவற்றின் செயற்பாட்டு அரசியல் என்ன என்பதைப் பற்றி நுணுக்கமாக ஆராய்வதுதான் பின்காலனித்துவ விமர்சனம்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக குறிப்பாக செய்தி பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள அபரிதமான முன்னேற்றம் காரணமாக நாடுகளுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும் இருந்த இடைவெளி சடுதியாக குறுகத் தொடங்கியுள்ளது. இந்த நெருக்கம் தனித்துவத்தினை உறுதி செய்து கொள்வதற்கான தேவையை வலுப்படுத்தியுள்ளதாகவே தோன்றுகின்றது. இதுவே இனங்களுக்கிடையிலான தேசியவாத எழுச்சிக்கும், தனித்துவப் போராட்டங்களுக்குமான அடிப்படைகளை வலுப்பெறச் செய்துள்ளது. இந்த சமூக பின்புலங்களுக்கூடாகப் பார்க்கையில் பின் காலனித்துவமும் , தலித்தியமும் இக்கால கட்டத்தில் முக்கியமான சமூக இலக்கியக் கோட்பாடுகளாக பரிணமித்திருப்பது வியப்புக்குரியதல்ல.

## ஒரு ஆண் மகனுடைய கவிதை

நீ அழகி.

மாநிறம் உன்னது.

கலைந்து,
கலைந்தே நெற்றிப் பரப்பெங்கும் பரவியே
காற்றில் உலையுமுன் கூந்தல்-பின் புறத்தே
அகன்று தடித்துச் சதைபிடித்த
பிருஷ்டப் பகுதியெங்கும் உரச
உரச
தசைகள் தோறும் எரிந்து கிளர்வுறும்.

கண்ணொரு சோடியுஞ் சிறியன,
சிமிட்டிச்,
சிமிட்டி நீ பார்க்கையிலும்-
பேசுகையில்,
நாற்றிசையுஞ் சுழன்றவை
ஓய்வுக்கு வந்தபின்னும்-திசை கெட்டே
மனமலையும் .
திசை கெட்டே மனமலையும்.

பொந்து விழாது,
நீண்டு முன்துருத்தாமலும்
தாண்டு உட்புகாமலும்
அளவாயமைந்த வுன்
மூக்குத்தான்--மூக்கு.

சிவத்தச் சிற்றுதடுகள் - கடித்துத்
தின்
தின்னெனச்சொல்லுமவை

கிள்ளிப் பார்க்கவென்றே - என்
கையெழும்
மொழு மொழுக்
கன்னம் பற்றி என் சொல்வேன்.
சிரிக்குங்கால் விழும் குழிவு பற்றியும்.

அவனின் அவாவல்போல் பெரிதும்
நான் விரும்பாச் சிறிதுமற்ற -கைக்குள்
அடங்கும் அளவினதானவுன்
மார்பின் இடை வெட்டில்-மோகித்தே
முகம் புதைத்துக்கிடக்கவென்றே ஆசைதான்
எனக்கென்றால் ஆசைதான்.

இன்னுமென்ன:
மருந்துக்குமில்லா உதரமுஞ் சிற்றிடையும்
கீழான,
......................
............................
தொடையும்,
அளவான காதும்,
கையும் கைவிரலும்
காலும் -காற்
பாதமும் சிறு விரல்களும்,
தோலின்
பூனை முடிகளும்,
ஏன்-
கை கால் நகங்கள் கூட -என்னை
உன் வழியே கறங்கித் திரிய வைப்பன பெண்ணே!
கிறங்கித்திரிய வைப்பன.

நீ அழகிதான் -பேரழகி.

ஆனாலும்-
நான் மோகித்தே முகம் புதைத்துக்கிடக்கவும்,
எனதிருப்பை அங்கேயே ஆக்கிக் கொள்ளவுமென்றே
அவாவியெழும் உன்
மார்புகளுள் இடதின் பின்னான
விலாவென்புக் கூட்டின் உள்ளிருந்து ஓரிதயம்
உயிர்ப்பாய்த்துடிப்பதுவும்,
அதன்
அழுகுரலுஞ் சிரிப்பொலியும் ஒருபொழுதும்
கேட்டதில்லையெனக்கு
கேட்டதேயில்லை.

அதிகமென்ன-
உனக்கென்றொரு இதயமிருப்பதே
தெரியாதெனக்கு.

19970223 இரவு 10மணி

www.tamilarangam.net





# சப்பாத்துப் பெண்மணி!

மங்கலிகா டி சில்வா

''உண்மையான ஆணுக்குரிய அடையாளங்கள் அவன் உடல்பூராவும் எழுதப்பட்டிருக்கின்றன. இளமை, கருணை, நிறைவேற்றும் ஆற்றல். கடற்படையால் உங்களையும் ஒரு உண்மையான ஆணாக்கிவிட முடியும்'' (ஜனவரி 1997)

தாய்நிலத்தைக் காக்கவும், எதிரிகளை அழிக்கவும் ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ளுமாறு ஆண்களையும் பெண்களையும் தூண்டும் விதத்தில் வெளிவருகின்ற இனவெறி வாய்ந்ததும் அல்லது பாலியற் சார்புடையதுமான நாளாந்த விளம்பரங்களால் மக்கள் குளிப்பாட்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கடற்படைக்கு இளம் ஆண்களையும் பெண்களையும் திரட்டுவதற்காக வெளியிடப்பட்டுள்ள இந்த விளம்பரத்தின் 'ஆண் அடையாளம்' ஒரு வன்முறை கொண்ட ஆண்தன்மையாக உருப்பெற்றுள்ளது.

### ஆண்தன்மையை உண்மையாக்கல்

இனத்தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் உருவாக்கப்படும் தீவிர ஆண்தன்மையானது ஒரு இராணுவ சீருடையணிந்த, ஆயுதமேந்திய, கைப்பறவும், வெற்றிகொள்ளவும் தயாரான ஒரு ஆணின் வடிவத்தில் பிரதிமைப்படுத்தப்படுகிறது. ஒரு 'உண்மையான ஆண்' பற்றிய தேடுதலில் அரசானது இராணுவ ரீதியான அர்த்தங்களால்வரைவிலக்கணப்படுத்தப்படும் ஆண் தன்மையைப் போற்றிப் புகழவும், சிங்கள பௌத்தத்தை அரசின் ஆதிக்கம் செலுத்தும் தத்துவமாகக் காட்டவும் முனைகிறது. இது சமூக ரீதியாக ஒடுக்குமுறைத் தன்மை கொண்டதும் இராணுவமயப்பட்டதுமான ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கும் இலங்கையர்களான எமது தார்மீக எண்ணங்களில் குழப்பங்களை ஏற்படுத்துகின்றது. இங்கு உண்மையான ஆண்கள் தேசத்தை, சிங்கள தேசத்தைக் காப்பாற்றுவதற்காக ஆயுதம் தூக்கியவர்களும், தேச பக்த சிங்கள, பௌத்த 'புதல்வர்களும்' தான். இவர்களிடமிருந்தே கடற்படை தனக்கு ஆட்களைத் திரட்டுகிறது. இவர்களே தேசத்தின் பெருமைக்கும் மதிப்புக்குமான அடையாளச் சின்னங்களாகிறார்கள்.

எந்தப்பாலாக இருப்பினும் அதை இனவாதமயப்படுத்தும்போது அது இன்னும் மோசமான இனப்பிளவுகட்கே இட்டுச் செல்கிறது. இங்கு அரசு புறக்கணித்து விடுகின்ற விடயம் என்னவென்றால், மக்கள் அரசினால் உருவாக்கப்பட்டவர்கள் அல்ல, மாறாக, சமூகங்களாக வாழும் மனிதர்களே அவர்கள் என்பதேயாகும். சிங்களப் புதல்வர்களிடையே தீவிரத்தன்மை வாய்ந்த வீரர்களை உருவாக்குவதன் மூலமாக அரசு செய்வதெல்லாம் பால்ரீதியான, இனத்துவரீதியான, வர்க்கரீதியான அடையாளங்களின் அடிப்படையில்மேலும்பிளவுகளை உருவாக்குதல் மட்டுமே. 'நிறைவேற்றும் ஆற்றலும் உண்மைத் தன்மையும்' ஆக இருப்பதற்கான புதிதாக உள்வாங்கப்பட்டிருக்கும் அடையாளமாக, இராணுவ பலம் காரணமாக உருவாகின்ற உயர் தன்மை வாய்ந்த ஒரு தேசிய கலாசாரத்தை ஏற்றுக் கொள்ளுதல் காட்டப்படுகிறது. பலமும் அல்லது வீரமும் தான் ஆண் தன்மையின் அடிப்படையான சாரமாக உயர்த்திப்பிடிக்கப்படுகிறது. அரசு சமூகங்களை இரு எதிர்கோடி முனைகளை நோக்கித் தள்ளுவதை விட்டுவிட்டு ஏற்பட்டுள்ள தடைகளை தகர்க்கின்ற இன்றைய பாரிய பிரச்சினையை அணுகுவது உசிதமானது.

### பெண்ணும் நடத்தையும் தேசியவாதமும்

ஜனவரி 27ம் திகதிய (1997) டெயிலி நியூஸ் பத்திரிகையில் இளம் பெண்களை விமானப் படையில் சேருமாறு அன்பொழுக கோருகின்ற ஒரு அரைப்பக்க விளம்பரம் வெளியாகியிருந்தது. ஒரு பெண் விமானப்படை அதிகாரியின் சமூகரீதியாக உயர்த்தப்பட்ட அந்தஸ்தையும் அங்கீகாரத்தையும் குறிக்கும் விதத்தில் ஒரு குதியுயர்ந்த சப்பாத்து குறியீடாக அவ்விளம்பரத்தில் பாவிக்கப்பட்டு இருந்தது.

அந்தச் சப்பாத்து பெண்களின் 'தர உயர்ச்சி' உருவாக்கப்படுவதைக் குறியீட்டுரீதியாகக் காட்டுகின்றது. பெண்களுக்கு இன்றைய சமூகம் வழங்கியுள்ள கீழ்த்தர நிலையைத் தெளிவாக வெளிப்படுத்துவதாக இது அமைந்துள்ளது இதிலுள்ள முரண்நகையாகும் பெண்களின் ஆடையணிகள் அவர்களின் சமூக நிலையைத் தீர்மானிக்கின்றன: அதாவது அவர்களது அதிகாரம், நிலை, ஒரு மேலோட்டமான சமத்துவ உணர்வு.

''திடீரென்று, இன்று இது ஒரு பெண்களின் உலகம். நவீன பெண்கள் அங்கே ஆண்களுடன் மேலெழுந்து நிற்கிறார்கள். நீங்கள் ஒரு விவேகமான இளம் பெண்ணாயிருந்தால், ஒரு அங்கீகரிக்கப்பட்ட பெண்ணாக மாறுவதற்கு, பெருமைக்குரிய இலங்கை விமானப்படையின் புதிய பாணியிலான சீருடையில் தோன்றுவதை விட சிறப்பான வழி வேறில்லை. எங்களுடன் சேருங்கள்; பிறரை விட உயர்ந்து நில்லுங்கள்''

நாம் ஒரு ஆணாதிக்க சமூகத்திற்குப் பிந்திய காலகட்ட சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று கூறுவது உண்மையா? அப்படி இல்லையென்றால் 'இது ஒரு பெண்களின் உலகம்' என்று பொதுமைப்படுத்திச் சொல்வது எப்படி உண்மையாகும்?. 'திடீரென்று' என்ற சொல் ஆணாதிக்க இராணுவ இயந்திரத்திற்காகப் பேசுகிறது. அதாவது அது ஒரு தோல்வியுற்றுச் செல்லும் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால் ஏற்கெனவே நிறைய ஆண்களை இழந்து விட்டது. இதனால் இப்போது பெண்கள் இந்த யுத்தத்தைக் கையில் எடுத்து மனோபலத்தை இழந்திருக்கும் படையினருக்கு உதவ வேண்டும் என்று கோரவேண்டிய யதார்த்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்பதை இச்சொல் பேசுகிறது.

### சப்பாத்துப் பெண்

எவ்வாறாயினும் இங்கே பெண் ஒரு சப்பாத்தின் தரத்திற்கு குறுக்கப்பட்டுள்ளாள். அதாவது ஆண்கள் பெண்களை ஒரு சப்பாத்தைப்போல இலகுவில் இட்டு நிரப்பக்கூடியவர்களாக, தேய்ந்த சப்பாத்தை கழித்துவிடுவது போல கழிக்கப்படக்கூடியவர்களாக அடையாளப்படுத்துகின்றனர். எவ்வளவு சாதாரணமானவள் ஒரு பெண்!

இந்த வெளிப்படையான பாலியல் வாதத்தினை உந்தித் தள்ளுகின்ற அரசியல் தத்துவத்திற்கான காரணம் என்னவென்றால் நிலவும் இனத்துவ தேசியவாதத்தைப் பொறுத்தவரையில் இதற்கு பெண்களை யுத்தத்திற்காகச் சேர்த்துக் கொள்வது ஒரு வரலாற்றுத் தேவையாக உருவாகியிருப்பதுதான். அரசு ஒரு இலட்சியப் பெண்ணை உருவாக்க முயல்கிறது; மதிப்பிற்குரியவளாக, நற்பண்புடையவளாக இருப்பதே பெண்மையின் அடிப்படைச் சாரமாக அது வெளிப்படுத்துகிறது. அது பெண்களுக்கெதிரான பெறுமானத்தை - கல்வி, சுதந்திரம், பெண்களிடம் காணப்படும் பலம் என்பவற்றாலான இழப்புகளை திட்டமிட்டுப் புறக்கணிக்கும் ஒரு பெறுமானத்தை முன்கொண்டுவர முயல்கிறது. அது சமூகத்தினால் வரையறுக்கப்பட்ட விழுமியங்கள் மற்றும் வரையறைகளுக்குட்பட்ட விதத்தில் தேசத்தின் 'நவீன' உலகத்தில் பெண்களின் நிலை பற்றிய சமூக, தார்மீக வரையறைகளை வகுத்தளிக்க முயல்கிறது. அதுவும் மிலேச்சத்தனமான உடல்ரீதியான அடக்குமுறைகளுக்கு ஆண்களினால்பெண்கள் இன்னமும் உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் அரசு இப்படிச் செய்ய முனைகிறது. பெண்களை, வீட்டுக்கு வெளியிலுள்ள ஒரு பொருளாயத உலகை நோக்கிவருமாறு கோருவதன் மூலம் பெண்கள் மீது பல சமூக தடைகளை சுமத்துகிறார்கள்; இயற்கையான சேமிப்பாகஇலட்சியமயப்படுத்தல், பண்பாகவும் சமூகத்தின் நன்நடத்தையாகவும்... இவையெல்லாவற்றையும் இலங்கை விமானப் படையின் பெருமைக்குரியதும் நவீன பாணியிலானதுமான சீருடைகள் வழங்குகின்றன! முதலாளித்துவ சமூக ஒழுங்கின் விழுமியங்களுக்கேற்ற விதத்தில், சமூகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள பெண்மைக்கு ஊறு ஏற்படாத விதத்தில் ஒரு போரிடும் பெண்ணாக உருவாகுதலால் சமூகரீதியில் மேல்நோக்கிச் செல்லலாமென உத்தரவாதம் வழங்குகிறது இந்தச் சீருடை.

இது தேசியவாத அடிப்படையிலான ஒரு தன்மையுடன் முதலிடப்பட்டுள்ளது. இந்தத் தேசியவாத அடிப்படைதான் பெண்ணுக்கு ஒரு கலாசார மீயுயர் தன்மையை வழங்குகின்றது. நவீன பாணியில் உடை உடுத்திய, சிவப்புநிற குதியுயர்ந்த சப்பாத்தணிந்த, முதலாளித்துவ பொதுவிழுமியங்களைக் கொண்ட இப் பெண்கள் தம்மை ஒரு போராடும் படையாக மாற்றிக் கொள்கிறார்கள். ஆண், பெண் நடத்தைகள் தொடர்பாக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கலாசார ரீதியில் தீர்மானிக்கப்பட்ட வேறுபாடுகளைக் கொண்டதான ஆனால், அதிகளவு நெகிழ்வுத்தன்மை கொண்டதொரு நிலையை நோக்கி அவர்கள் வருமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

அந்த முக்கியமான வேறுபாடுகளான தேசிய அடையாளம், சமூக விடுதலை, கலாசார ஒழுங்கமைப்பு என்று குறிப்பிட்டுக் காட்டப்படும் இவை யாரிடமிருந்து வேறுபடுகின்றனவென்றால் கீழ்மட்ட வர்க்கப் பெண்களிடமிருந்துதான். இந்தத் தேசியவாதத்தால் தெரிவிக்கப்படும் புதிய ஆணாதிக்கம், பெண்களுக்கு புதிய சமூகப் பொறுப்பினை எடுத்துக்கொள்ளும் கௌரவத்தை வழங்குவதுடன் 'பெண் விடுதலை'யையும் இறைமையுள்ள தேசத்தின் வரலாற்று நோக்கங்களையும் அவர்களுடன் இணைத்துக் கொள்வதன் மூலம், இன்னொரு புதிய ஆனால் முழுமையாகச் சட்டபூர்வமாக்கப்பட்ட ஒரு இரண்டாம் தர நிலைக்குள் அவர்களைத் தள்ளிவிடுகிறது. பெண்களின் பிரதிமைகளுடன் வெளியிடப்படும் இத்தகைய அறிவிப்புக்களால் பெண்கள் அவமானப்படுத்தப்படுவதும், பெறுமானம் இறக்கப்படுவதும் அவர்கள் பெண்களாக இருப்பதால் மட்டுமேயாகும் என்பதை நாம் மிகவும் மனவருத்தத்துடன் குறிப்பிடுகின்றோம்.

அரச ஆதரவுடன் வெளிவரும் இத்தகைய விளம்பரங்கள் வன்முறையின் ஒழுக்கு பெண்களின் உடலில் எழுதப்பட்டுள்ளது என்கிற அளவுக்கு அரசியல் பரிவதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. பெண்கள் வெறும் பெண்கள் மட்டுமல்ல. அவர்கள் இலங்கைச் சமூகத்தின் பிரஜைகளும் கூட. பல்வேறு முகமூடிகளைப் போட்டுக் கொண்டிருக்கும் இந்த அரசானது பல்வேறு விதமான பிரஜைகளை உருவாக்கி வருகின்றது என்பது தெளிவான ஒரு விடயம். ஆனால் பெண்கள் அனைவரும் ஒரே தன்மையதான ஒரு குழுவல்ல. அவர்களிடையே பலவிதமான அடையாளங்களும் நிலைப்பாடுகளும் உண்டு. அரசிடம் உண்மையில் பல்லினத் தன்மை குறித்து அக்கறையும் ஈடுபாடும் இருப்பின் அது செய்யவேண்டியதெல்லாம் அதனுடன் வாழக்கற்றுக் கொள்வதுதான்.

தமிழில்: அரவிந்தன்

3 →

## தீர்வுப்

நிலையில் 'ஆற்றங்கரையில் நின்று கொண்டு குளிப்பதா, விடுவதா என்று நினைத்துக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் கட்சிகளின் நிலையை நோக்குகின்ற போது முஸ்லிம் காங்கிரஸ் தீர்வை எப்படியாவது ஆதரித்தாக வேண்டும். இல்லையெனில் கூடவிருந்து குழிதோண்டி, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்ததாகிவிடும். முஸ்லிம் கட்சி தீர்வை முற்று முழுதாய் எதிர்க்கிறது. இதன் நிலைப்பாடு பெரிதாக எத்தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இக் கட்சி இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட சிறிய கட்சிகளோடு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்வுப் பொதியைப் பற்றி எதுவுமே இன்னும் கருத்துச் சொல்லவில்லை.

இத்தீர்வுப் பொதி சட்டமாய் இயற்றப்பட பல படிமுறைகளூடாய் செல்ல வேண்டி இருக்கிறது.

- மக்களின் விமர்சனதிற்காய் தீர்வை மக்கள் முன் கொண்டு போதல்,
- இதனை சட்டநகலாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பித்தல்.
- பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை ஆதரவைப் பெறல்.
- மக்கள் தீர்ப்புக்கு இதனை விட்டு மக்கள் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல்.

இந்நான்கு படிமுறைகளில் முதலாவது நிகழ்வே இன்னும் முற்றுப்பெறாமலேயே இருக்கிறது. நாட்டின் குறிப்பிட்ட பிரதேசத்தினர் மாத்திரமே தீர்வின் உள்ளடக்கம் குறித்து அறிந்திருக்கிறார்கள்.

இது இவ்வாறு இருக்கையில் அரசு தீர்வினை உடனடியாக 'மக்கள் தீர்ப்புக்கு' விட சென்ற மாதமளவில் ஆலோசித்து இருக்கிறது. இவ்வாறு படிமுறை தாண்டி இத் தீர்வு யோசனை மக்கள் தீர்ப்புக்கு விடப்படுமாய் இருந்தால் பல சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு.

மக்கள் தீர்ப்பிலே தீர்வுக்கு ஆதரவாக மக்கள் அங்கீகாரம் கிடைக்கும் அதேவேளை பாராளுமன்றத்திலே தீர்வுக்கு எதிர்ப்பாக அங்கீகாரம் கிடைப்பின் நிலைமையை கைக்கொள்வது சிக்கல் நிறைந்ததொன்றாகவே காணப்படப் போகின்றது.

இத்தகைய காரணங்களுக்காக உள்ளூராட்சி தேர்தலை ஒரு தந்திரமான திட்டமாய் பயன்படுத்தி கருமமாற்ற முனைகிறது அரசு.

எது எவ்வாறு இருப்பினும் தேர்தல் முடிவுகள் அரசுக்கு சாதகமாய் அமையுமாயின் தீர்வுத் திட்டம் பற்றிய 'மிதமிஞ்சிய' நம்பிக்கை அரசுக்கு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண் விடுதலை என்று ராதிகா எதைக் கருதுகிறார்?

"வன்முறையில் பாதிக்கப்படுகின்ற பெண்களைப் பாதுகாக்கின்ற ஒரு பணியில் ஈடுபடுகின்ற நான் எவ்வாறு பெண்களே வன்முறையாளர்களாக மாறுகின்ற ஒரு சூழலை எதிர்கொள்வது'' என்று கருத்துத் தெரிவிக்கும் ராதிகா அவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார். ''ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று தான் இயேசு பிரான் சொன்னாரே தவிர அதன் பின்னர் என்ன செய்வது என்று சொல்லவில்லையே - அவருக்கே தெரியும் அதன் பிறகு அதற்கு எதிராக செயற்படுவதைத் தவிர வேறுவழியில்லை என்று. (அதை அவர் தன் வாயால் திருவருள விரும்பவில்லை)- ஆகவே ஒரு பெண் தன் மீதான அல்லது தன் மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக எழுவது ஒரு போதும் வெறும் வன்முறை ஆகாது. ஆக, வன்முறை என அவர் கருதுவது எது என்பதை தெளிவுபடுத்துவது நல்லது?

ஒரு பெண் தனக்கு, தன் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதை வெறுமனே மனித உரிமைவாதியாக நின்று 'சமுதாயமே இராணுவமயப்படுதல்' என்றும், பெண்ணிலைவாதியாக நின்று 'ஆண் நிலைப்படுதல்'' என்றுமே பார்க்க முடிகின்ற அவரின் கையாலாகாத்தனத்தை என்னவென்று சொல்வது?

''புலிகள் இயக்கத்தினர் பெண்களை ஆயுதப் போராளிகளாக்குவதற்கு நியாயங்கள், காரணிகள் காட்டுகின்றனர்'' என்ற முக்கியமான விடயத்தைத் தூக்கி ஒரு புறம் வைத்து விட்டு தனக்கேற்றாற்போல் விமர்சனங்களை அடுக்கிக் கொண்டு போகிறார். அவரது பக்கத்திற்கு வாதிடுவதற்கு அப்படிச் செய்வதைத் தவிர வேறுவழியில்லை. ஏனெனில், ஒரு பெண் வன்முறையாளராக (அவருடைய பாஷையில்) உருவாவதற்குரிய காரணங்களை ஏற்றுக் கொண்டால் அவர் தன் கருத்தை நிறுவ முடியாது போயிருக்கும்.

அவரின் கருத்தின்படி பார்த்தால் பெண்கள் போராளிகளாக மாறுவதற்கான எந்தவிதமான சூழ்நிலையோ அல்லது தேவையோ இல்லாமல் வெறுமனே புலிகள் பெண்கள் மீது ஆயுதத்தை திணித்தார்கள் என்பது போல் உள்ளது. இது இனவாதிகள் கூறுவதைப்போன்று, ''இந்நாட்டில் தமிழர்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. தமிழர்கள் சிங்களவர்களை அழிப்பதற்காகவே ஆயுதம் ஏந்தினார்கள்'' என்று கூறுவதற்குச் சமனாகும்.

ஆனால் உண்மை புத்திஜீவிகளையும் மனிதஉரிமைவாதிகளையும் விட, தமிழ் மக்களுக்குத் தெரியும்.

தனக்கெதிரான அடக்குமுறையின் போது அதற்கு எதிராக எழுவதை தவறு என்று ராதிகா அவர்கள் கருதுவாராயின், சிங்கள இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி போன்றோருக்கும், இன்னும் அதே பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்போருக்கும், எதிர்கொள்ளப் போவோருக்கும் அவர் மனிதஉரிமையின் பெயரால் கூறுவது எதை? மௌனமான சாவையா?

''பெண்கள் எப்போதுமே பெண்மை அடையாளங்களை அழிப்பதற்காக/ இல்லாமல் ஆக்குவதற்காகப் போராடவில்லை. அதன் அங்கீகாரத்திற்காகவே போராடுகிறார்கள் என்று கூறிக்கொள்ளும் ராதிகா ''பெண்மை'' என்ற அடையாளம் கூட ஆண்களால் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதை எப்படி மறந்து போனார்? ஆண்களால் தங்களுக்காக/ தங்கள் ஆணாதிக்க இருப்பிற்காக உருவாக்கப்பட்ட அடையாளங்களை அவர் ஏற்றுக் கொள்வாராயின் பெண் விடுதலை பெண்கள் தம் மக்கள் மீதான வன்முறைக்கு எதிராகத் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக ஒரு அணியாக மாறும் பொழுது தேவை ஏற்படின் இராணுவ உடை அணிவதை அல்லது தலைமுடி வெட்டுவதை ''பாலற்ற நிலை'', ''ஆண்மை நோக்கிய நிலை'' என இனம் காணும் ராதிகா இவ்விடயத்தை 'மனித உரிமைவாதி' என்ற நிலையில் இருந்து பார்ப்பின் அவ்வாறு இனம் காண மாட்டார். மாறாக அது ஒரு பெண்களுக்கான உயிர்வாழ்வதற்கான தேவை என்றே பார்ப்பார். சீதாராமன் நீண்ட தலைமுடியுடன் தான் இருந்தார் என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். நாகரிக(?) வளர்ச்சிக்கேற்பத்தான் ஆண்கள் தங்களை மாற்றிக்கொண்டு பெண்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கலாசாரக் காவிகளாக வைத்திருந்தார்களே தவிர, தலைமயிர் வெட்டுதல் ஆண்களுக்கான ஒன்றல்ல. ஆண் பெண் வகைப்படுத்தலுக்கு மனித உரிமைவாதி என்ற உயர்ந்த அந்தஸ்த்தில் இருக்கும் ராதிகா தலைமயிரை அடையாளப்படுத்துவதும், பெண்கள் தலைமுடி வெட்டுவதை பாலற்ற நிலை, ஆண் நோக்கில் என்று இனம் காண்பதும் எந்த வகையில் என்று தெரியவில்லை.

வன்முறையைப் பிரயோகிக்கும் ஒரு இராணுவத்துடன் சேலை கட்டி நீண்ட கூந்தலுடன் பூக்கள் வைத்து பொட்டுவைத்து பெண்மைக்கான மென்மையுடன் ஆன்மீகம் பற்றி பிரஸ்தாபம் செய்யுங்கள் என்று சொல்வது போல் உள்ளது.

மற்றையது, பெண் போராளிகள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் போராளித்தாய், ஆயுத மேந்திய கன்னி என்று இரண்டு வகையாக பிரிக்கின்றார். ஆயுத மேந்திய கன்னி என்ற பதத்தை எதை ஆதாரமாகக்கொண்டு தேர்ந்தெடுத்தார் என்று தெரியவில்லை. பாலியல் உறவு என்பது புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை பெண்களுக்கு மட்டும் தடை செய்யப்பட்ட ஒரு விடயம் அல்ல.

தமிழ் சமூக கலாசார கட்டுப்பாட்டுச் சூழலில் தான் புலிகள் உருவானார்கள். அங்கே தான் வளர்கிறார்கள். எல்லோரையும் போலவே அவர்களும் தமிழ் கலாசாரக் கருத்தியலினால் உள்வாங்கப்பட்டவர்கள். தனி நபரான ராதிகாவுக்கே பெண்ணிலைவாதம் தொடர்பாக தெளிவான முடிவிற்கு வரமுடியாமல் கலாசாரத்திற்கும் கருத்தியலிற்கும் இடையில் ஊசலாட்டம் காணப்படுமாயின், புலிகள் இயக்கம் ஒரு அமைப்பு என்றும் கட்டமைப்பிற்குள்ளேயே வளர்கின்றது என்றும் வைத்துப் பார்த்தால் இவ்வாறான சீரற்ற போக்குகள் காணப்படுவது இயல்பு. அந்த அமைப்பிற்கு தன் உறுப்பினர்களிடையே பாலியல் உறவைத் தடை செய்வது அவசியமாகவிருந்தது. புலிகள் இயக்கம் கன்னிகள் மட்டும் தான் போராட வரலாம் என்று அழைப்பு விடுக்கவில்லை. கன்னித் தன்மையைப் பரிசோதித்து அமைப்பிற்குள் பெண் போராளிகளை சேர்த்துக்கொள்ளவும் இல்லை. அமைப்பிற்குள் மட்டுமே வரன்முறையற்ற பாலியல் உறவு தடை செய்யப்பட்டிருந்தது. எனினும் கால மாற்ற இயங்கியல் காரணமாக அமைப்பிற்குள்ளேயே காதலிக்கிறார்கள். திருமணங்கள் நடக்கின்றன. அவர்கள் தங்கள் தடையை தேவையான இடங்களில் தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

புலிகள் இயக்கம் புரட்சிகர கோட்பாடுகளின் அடிப்படையில் தோன்றிய அல்லது கட்டமைக்கப்பட்ட ஒரு இயக்கம் அல்ல. அது இனவாதத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு அமைப்பே. வாழ்வியல் நடைமுறைகளின் ஊடாக அனுபவங்களின் ஊடாகவே தன்னை மாற்றியமைத்துக்கொண்டு வந்துள்ளது. இதற்கு உதாரணமாக, சீதனப் பிரச்சினை, சாதிப்பிரச்சினை ஏன் முஸ்லிம்களது பிரச்சினையைக் கூடச் சொல்லலாம். புலிகளின் பெண் விடுதலை பற்றிய கண்ணோட்டம் தமிழ் கலாசாரத்துடன் ஒட்டியதாகவே காணப்படுகின்றது. இக் கண்ணோட்டம் இன்னும் குறுகிப் போகலாம் அல்லது மாற்றமடையலாம். எனவே அதற்குக் பெண் விடுதலை தொடர்பான கருத்தியல் ரீதியான தெளிவும், வழிநடத்தலும் அவசியம். பெண்ணிய வாதிகளே தெளிவான நீரோட்டம் இல்லாமல் இருக்கும் பொழுது தமிழ் சமூக கட்டமைப்பில் வளர்ந்த புலிகள் எம் மாத்திரம்?

இறுதியாக, ஒரு பெண் வெறும் மனிதாபிமான அடிப்படையிலேயே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தனக்கெதிரான அல்லது தனது மக்களுக்கெதிரான எல்லா வகையான அடக்கு முறை களுக்கு எதிராகப் போராடுவதும்; தன் சுதந்திரத்துடன் மற்றவர்களுடைய சுதந்திரத்தை மதிக்கவும், வழங்கவும் தயாரானவராக இருத்தலும் கூட அவசியமானது. அதல்லாதவை, அடித்தளங்களை இழக்கச் செய்து 'வெற்று சமத்துவம்' பற்றிய பல்வேறு கதைகளுக்கு இட்டுச் செல்லும்!

ரேவ்



# பெண்விடுதலை கருதி அழைக்கவில்லைப் புலிகள்!

சரிநிகரில் வெளிவந்த கலாநிதி ராதிகா குமாரசுவாமியின் கட்டுரையையும் அதற்கான எஸ்.ஜி.இராகவனின் எதிர்வினையையும் வாசிக்க முடிந்தது. ஏனைய நாடுகள் சிலவற்றின் ஆயுதம் தரித்த பெண்களை ஒப்பீடாகக் கொண்டு ஒரு புத்தகப்பூச்சியின் தன்மையோடு தான் தமிழீழப் பெண்களின் போராட்டப் பிரவேசத்தை ராதிகா குமாரசுவாமி நோக்குகிறார் என்று எஸ்.ஜி இராகவன் சாடுகிறார். தமிழ்ச் சமூக இயங்கியல் மாற்றத்திற்கு ஏற்ப பெண்களை இராணுவமயப்படுத்துவது புலிகளுக்கு (மனிதவள) தேவையாக இருந்தது. புலிகள் எந்த பெண் விடுதலை கருதியும் பெண்களை ஆயுதம் தாங்க அழைக்கவில்லை. புலிகளின் தத்துவமும் நடைமுறையும் பெண்களின் உண்மையான பெண்விடுதலையுடன் பொருந்தாது என்பது என்கருத்து. ஆணாதிக்க சித்தாந்தத்தில் ஊறிப்போன எமது சமூகக் கட்டுமானத்தில் பெண்களின் நிலைப்பாடானது, அதன் ஒவ்வொரு அம்சத்தினாலும் வடிவமைக்கப்படுகிறது. புலிகள் அமைப்புக்குள்ளும் நிலைமை இதேதான். பெண் புலிகள் இராணுவமயப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். மற்றபடி எந்தவிதமான பெண்ணியச் சிந்தனைகளை அல்லது கருத்து மாற்றத்தை ஈழத்தில் இவர்கள் முன்வைத்தார்கள், நடைமுறைப்படுத்தினார்கள்? சீதனம் நமது நாட்டுப் பெண்களின் ஒரு முக்கியமான பிரச்சினை. ஈழத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் ஒவ்வொரு திருமணத்திலும் வாங்கப்படும் சீதனத்தின் ஒருபகுதி கொமிசனாக புலிகளுக்கு சேர்வது அறிந்த விடயம்.

புலிகளிடமுள்ள பெண்கைதிகள் பற்றிய விவரங்கள் கூட வெளியிடப்படுவதில்லை. ஈழத்தில் புலிகளின் பெண்கள் வதைமுகாம் ஒன்று இருப்பதாக மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை (1995) குறிப்பிட்டுள்ளது. மாற்று இயக்கத்திலிருந்த பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கான பெண்கள் இவ்வதைமுகாமில் இருப்பதாகவும், பெண்புலி உறுப்பினர்கள் கைதிகளான சக பெண்களை ஈவிரக்கமற்ற முறையில் கொடுமையாக நடத்துவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

பூப்புனித நீராட்டுவிழா பெண்ணடிமைத்தனம் இல்லை, சமூகக் கலாசாரத்தின் ஒரு குணாம்சம் என்கிறார் எஸ்.ஜி. இராகவன். அதிர்ச்சியாக இருந்தது. பெண் ஒடுக்குமுறையின் ஒரு முக்கிய அம்சம் இது. சமூகத்தில் பெண்ணுக்கு கீழான தரத்தை பெற்றுத்தருகிறது இச்சடங்கு. பெண்ணின் உடல் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுவது போல் ஆணுக்கும் உடல் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுகிறது. (முதன் முதலில் விந்து உற்பத்தியாகும் பருவம்). ஆனால் ஆணுக்கு சடங்குகள் செய்வதில்லை. அதை கண்டுகொள்வதுமில்லை. இனவிருத்தியையே அடிப்படையாகக் கொண்ட குடும்ப அமைப்பு முறையில், பெண் ஒரு 'குடும்பப் பெண்ணாவதற்குரிய' பருவத்தை எட்டி விட்டாள் என்று ஊருக்கு அறிவிப்புச் செய்கிறது இச்சடங்கு. அதைவிட அச்சடங்கின் உள்நோக்கமே பெண்ணை உளவியல் ரீதியில் 'பக்குவப்படுத்துவதாகும்'. முதல்நாள் வரை துள்ளித் திரிந்தவள், அடங்கி நடக்கிறாள். சேர்ந்து விளையாடிய சிறுவர்கள் இப்பொழுதும் சிறுவர்களாகவே இருக்க அவள் ஒரு நாளிலேயே பெரியபிள்ளையாகிறாள். கட்டிப் புரண்டு தட்டிப்பறித்து கூடிவிளையாடியவள் இப்போ சம்பந்தமெதுவும் இல்லாதவள் போல் தலைகுனிந்து நடக்கிறாள். 'குடும்பப்பெண்ணின்' சமூக வரையறைகள் மற்றும் குணாம்சங்களையெல்லாம் இச்சடங்கு ஆரம்பித்து வைக்கிறது. மொத்தத்தில் உளவியல் ரீதியில் சமூகத்தில் இரண்டாம் தர நிலையை தொடக்கி வைக்கிறது. இதையெல்லாம் எமது கலாசாரம் என்று கட்டிக்காக்கப் புறப்படும் எஸ்.ஜி.இராகவன் பெண்விடுதலை என்று எதைத்தான் கூறவருகிறாரோ!

ரஞ்சி
(சுவிஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு வாரங்களில்

**பெப்.15**

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையிலும் தமிழ்ச் சந்தையையும் நோக்கி படையினரால் ஏவப்பட்ட ஷெல் வீச்சின் காரணமாக 12 பேர் படுகாயம். இரு வீடுகள் பலத்த சேதம்.

**பெப்.16**

-வவுனியா சாளம்பைக் குளம் பகுதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவத்தினர் படுகாயமுற்றதாக இராணுவம் அறிவிப்பு.

-கல்முனை ரெலிகொம், ஏ.எஸ்.பி.அலுவலகம், டி.ஐ.ஜி விடுதி ஆகிய மூன்று பிரதான இடங்களிலும் புலிகள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடாத்தினர். சேதம் பற்றிய விபரம் சரியாக அறிவிக்கப்படவில்லை.

**பெப்.17**

-திருமலை-யாழ் கப்பல் பயண கட்டணம் 200 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. தமிழ் அமைப்புக்கள் கட்டணம்.

-யாழ்-மாலுசந்தி-உடுப்பிட்டியில் வைத்து படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரு படையினர் பலி.

**பெப்.18**

-இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக தப்பிச் சென்ற 150 பொது மக்களில் 130 பேர் மன்னார் கடலில் படகு கவிழ்ந்து இறந்தனர். இவர்களில் 20 பேர் காப்பாற்றப்பட்டனர்.

-எடிபல இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 63 பொதுமக்கள் நெலுக்குளம் நலன்புரி நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

**பெப்.19**

-மட்டு-அம்பாறை எல்லையிலுள்ள துறைநீலாவணை கிராமத்தில் விசேட அதிரடிப்படையினர் புலிகள் மோதலில் 3 புலிகள், ஒரு வர்த்தகர் பலி.

-யாழ்-வட்டுக்கோட்டையில் படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 5 படையினர் 4 பொது மக்கள் காயமென இராணுவம் தெரிவிப்பு.

**பெப்.20**

-சாவகச்சேரியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிப்பு.

-மன்னார் உயிலங்குளத்தில் படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் புலிகள் தரப்பில் 5 பேர் பலி. படையினர் தரப்பு இழப்பு குறித்து தகவல் கிடைக்கவில்லை.

**பெப்.21**

எடிபல இராணுவ நடவடிக்கையின் மூலம் வவுனியா-மன்னார் தரைப்பாதை இணைக்கப்பட்டுவிட்டதாக இராணுவு தளபதி அறிவிப்பு.

**பெப்.22**

மன்னார் கடலில் உயிரிழந்த பொது மக்களுக்காக புலிகள் அமைப்பினர் தேசிய துக்க தினமாக அனுஷ்டிப்பு.

**மார்ச்.23**

பாவற்குளம் புளொட் அலுவலகம் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

**மார்ச்.24**

-வந்தாறுமூலை-களுவன்கேணியில் இயங்கிய இராணுவ முகாம் திடீரென அகற்றப்பட்டது.

-வவுனியா-கண்டி வீதியில் பொலிஸார் மீது புலிகள் தாக்கியதில் ஒரு பொலிஸார் காயம். துப்பாக்கியையும் புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

-மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் உளவுப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ்காரர் சுட்டுக் கொலை.

-வவுனியா-மாமடுவில் பிரயாணிகள் வான் ஒன்று கண்ணிவெடிக்குசிக்கி ஒருவர் பலி. 7 பேர் காயம்.

-வாழைச்சேனையில் பொலிஸார், படையினர் மீதான புலிகளின் தாக்குதலில் ஒரு படையினன் காயம்.

-வாழைச்சேனையில் படையினரின் ஷெல் தாக்குதலினால் தமயந்தி எனும் 13 வயது சிறுமி படுகாயம்.

**பெப்.25**

வன்னிப்பகுதியில் அக்கராயன், மல்லாவி ஆஸ்பத்திரிகளில்ட மருந்தின்றி தினமும் 10 பேருக்கும் மேற்பட்டோர் இறந்து வருகின்றனர் என அரச அதிபர் அமைச்சரிடம் அறிவிப்பு.

-வாழைச்சேனையில் கண்ணன் கிராமத்தில் படையினர் மீதான புலிகளின் தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் காயம்.

**பெப்.26**

ஓட்டமாவடி சம்பவங்களைத் தொடர்ந்து முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் இலுப்படிச்சேனையிலுள்ள புலிகளின் அலுவலகத்தில் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர். முஸ்லிம் தரப்பில் எஸ்.எல்.எம்.ஹனீபா, அப்துல் காதர் ஆகியோரும் புலிகள் தரப்பில் கிழக்கு மாகாண புதிய அரசியல் பொறுப்பாளர் கீதன் மற்றும் கார்த்திக், ராம், விசு, மார்ஷல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**பெப்.27**

-சம்பள அதிகரிப்புக் கோரி அரசாங்க டொக்டர்கள் நான்கு மணி நேர வெளிநடப்பு.

-மட்டு கல்முனை வீதியில் தோற்றாதீவில் பொலிஸாரின் வாகனம் கண்ணி வெடியில் சிக்கி சேதம்.

**பெப்.28**

மட்டு நகரில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு பொலிஸார் படுகாயம்.

-கொக்குவெளியில் பொலிஸ் காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் ஒரு பொலிஸார் பலி. ஒரு பொலிஸார் காயம்.

**மார்ச்.2**

மட்டு-கல்லடி சிவானந்தா பாடசாலை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த தியாகராஜன் சமியா எனும் 5 வயது சிறுமி படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி.

**மார்ச்.3**

-மட்டு சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் 10ம் திகதியிலிருந்து சாகும் வரை உண்ணாவிரதமிருக்க முடிவு. இதற்கு முன்னர் இருந்த உண்ணாவிரதத்தின் போது தரப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து தங்களது உண்ணாவிரதத்தைக் கைவிட்டிருந்த இந்த கைதிகள் உறுதிமொழி மீறப்பட்டுவிட்டதாக குற்றஞ்சாட்டியே இவ்வுண்ணாவிரதத்தை ஆரம்பிக்க முடிவெடுத்துள்ளனர்.

-நுவரெலியாவில் ஜனாதிபதி மாளிகைக்கு சமீபமாக குண்டொன்று வெடித்ததில் செந்தில்குமார் எனும் ஒரு தமிழ் மாணவர் பலி. இன்னொரு மாணவர் படுகாயம்.

-வவுனியா-பறையனாலங்குள இராணுவ காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் 4 படையினர் காயம். இரு புலிகள் பலியானதாக இராணுவம் தெரிவிப்பு.

## ஆசையும் மோசமும்

யாழ் மாவட்டத்தில் புனர்வாழ்வுப் பணிகள், புனரமைப்பு அதிகாரசபை, மீளக்குடியேறல் என்று எல்லாம் செய்திகள் வருகின்றன. அத்துடன் மீண்டும் மக்கள் பாதுகாப்பாக வாழ்கின்றனர். படையினர் மக்களுக்கு உதவியென்றெல்லாம் அரசு கூறிவருகிறது.

பொன்னாலையில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து ஒன்பது அப்பாவி மக்கள் (பெண்கள் உட்பட) கொல்லப்பட்டதற்கு படையினரே காரணம் என ஈ.பி.டி.பி., ஈ.ஆர்.எல்.எப். ஆகியன கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால் படையினர் புலிகளே செய்தனர் என்று அறிக்கை விடுத்துள்ளனர். அது அப்படியிருக்க புத்தூர் வாதர்வத்தையில் பெப்.10ம் திகதியன்று புலிகளின் கிளைமோர் தாக்குதலையடுத்து படையினர் அப்பகுதி மக்களை சிறுவர், பெண்கள், வயோதிபர் என்ற வேறுபாடு இன்றி சுட்டும், ஆயுதங்கள், தடிகள் கொண்டு தாக்கியும் உள்ளனர். இதில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவங்களால் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றி வருகிறது. பல இடங்களில் இவ்வாறான புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. பதிலாக அப்பகுதியில் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் புலிகளின் கோரிக்கைகளை மீறி அதாவது வன்னிக்கு போங்கள் என்பதற்கு மாறாக அரசின் ஆசை வார்த்தைகளை நம்பி வலிகாமம் திரும்பினார்கள். ஆனால் இங்கே பொது மக்கள் காணாமல் போவது, கைது செய்யப்படுவது, பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு என்பன போன்றவை தொடர்கின்றன. ஆசை வார்த்தைகள் இப்போது மோசம் செய்கின்றன.

*மரிமைந்தன்.*

## பதவி விலகக் கோரிக்கை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கற்குடாத் தொகுதி அமைப்பாளரான எஸ். ஐ. முகம்மட் தம்பி அவர்களை தாம் வகிக்கும் அமைப்பாளர் பதிவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு முஸ்லிம் காங்கிரசின் ஓட்டமாவடி பிரதேச முன்னணி ஆதரவாளர்கள் வேண்டிக்கொள்வதாக தெரிய வருகிறது. இது சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர்களுக்கு கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

அதாவது, அமைப்பாளரான முஹம்மது தம்பி அவர்கள் கடதாசிக் கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் பதவி வகிப்பதால் கற்குடாத் தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் சம்பந்தப்பட்ட வேலைகள் எதிலும் சம்பந்தப் படுவதில்லையென்றும், குறிப்பிட்ட அமைப்பாளர் வழங்கிய வேலை வாய்ப்பு விடயங்களில் முறையற்ற விதமாக நடந்து கொண்டுள்ளதாக குற்றமும் சாட்டப்படுகின்றது. இதுமட்டுமல்லாமல் அண்மையில் ஓட்டமாவடியில் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதல் சம்பவங்களையடுத்து, அமைப்பாளரின் நடவடிக்கைகள் மிகவும் செயற்றிறன் அற்றவையாகவும் இருந்ததாக தெரியவருகின்றது. இதனால் அமைப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டுமென கட்சியின் ஓட்டமாவடி பிரதேச முன்னணி உறுப்பினர்களும் விரும்புவதாக அறியவருகிறது.

இவற்றையெல்லாம் விட ஓட்டமாவடி பிரதேச முஸ்லிம் காங்கிரசின் இளைஞர் குழுவொன்று அமைப்பாளரின் விடயங்கள் சம்பந்தமாக கொழும்பில் உள்ள முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பீடங்களுடன் அதிருப்தியை காட்டி வருவதாகவும் கூறப்படுகின்றது.

*ஹிஸாம்*

## பூட்டப்பட்ட அலுவலகம்

வெண்தாமரை இயக்கம் யாழ்ப்பாணத்தில் செயற்படுவதாக அரசு கூறிவந்தது. ஆனால் 'வெண்தாமரை இயக்க' விளம்பர பலகை மட்டும் மாடி வீடு ஒன்றின் முன்பாக இலங்கை வங்கிக்கு அருகில் காணப்படுகிறது. அங்கு 'வெண்தாமரை இயக்க' அலுவல்கள் எதுவுமே நடைபெறுவதில்லை. அந்த மாடி வீடு பூட்டிய நிலையில் உள்ளது.

இந்த மாடி வீட்டில் முன்னர் புலிகளின் முக்கிய அலுவலகம் இயங்கி வந்தது. வெண்தாமரை இயக்கம் மூலம் யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பு வழங்கப் போவதாகவும் அரசு கூறியது. இதனை நம்பிய இளைஞர் - யுவதிகள் இங்கு தினமும் சென்று பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வர். 'யாழ் ஆயரை சந்திக்க வந்த அதிகாரி!

## அதிகாரியின் வருகை

பெப்.11 செவ்வாயன்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் யாழ் ஆயர் இல்லத்துக்கு மாலை 3 மணியளவில் ஆயரைச் சந்திக்க வந்தார். எப்படி? படையினர் பெருமளவு பாதுகாப்பு. கோவில் வீதி, பிரதான வீதி, கதீற்றல் வீதி, அச்சுக்கூட வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி, சென் பற்றிக்ஸ்வீதி, பாங்சால் வீதி எல்லாம் திடீரென மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது. அன்று கோவில் வீதியில் உள்ள லூர்து கெபியில் திருநாளுக்கு வந்த பக்தர்களும் போக முடியவில்லை.

திடீரென தடைவிதிக்கப்பட்டதால் அப்பகுதியில் சுற்றிவளைப்பு என மக்கள் எண்ணிவிடுவது யாழ்ப்பாணத்தில் வழக்கமாகி விட்டது.

இதில் கசவ வாகனங்களும் ஆயர் இல்லத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் என்னவோ ஏதோ என்ற மாதிரி பதற்றப்பட்டனர்.

*கரவையூரான்.*

5→

## மக்கள்...

நிலைமை ஒரு பெரும் வாய்ப்பாக அமைந்து விட்டது. இதன் மூலம் தொண்டமானின் மற்றுமொரு எதிர்ப்பாளரான சந்திரசேகரன், செல்லச்சாமி ஆகியோர்களின் வளர்ச்சியை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைத்திருக்கிறது. நிலைமை இப்படியிருக்க ஐ.தே.க வுடன் இத்தேர்தலில் இணைவதற்கு செல்லச்சாமி மேற்கொண்ட முயற்சி தனது மனைவிக்கு கொழும்பு மாநகர சபையிலே போட்டியிடுவதற்கு ஐ.தே.க.ட்சியின் பட்டியலில் இடம் கொடுக்க மறுத்ததன் கராணமாக கைவிடப்பட்டுள்ளது.

கருத்தியல் அடிப்படையுமற்ற அறிவியல் தன்மையுமற்ற சந்தர்ப்பவாத சலுகைகளுக்கு மண்டியிடுகிற மலையக அரசியலானது முழு சமூகத்திற்குமே ஒரு சாபக்கேடாக உருவாகி வருகின்றது. சிறுபான்மையினங்களின் உரிமைகளை மறுக்கின்ற பேரினவாத கொடூர ஆட்சி நிலவுகின்ற ஒரு சமூகத்திலே சிறுபான்மையினத்தின் அரசியலானது, அந்த மக்களின் இனத் தனித்துவத்தையும் இன சமத்துவத்தையும் சமூக உரிமைகளையும் மீட்டெடுப்பதை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படவேண்டும். இதன் மூலமே மக்களை ஒரு முறையான எதிர்காலத்தை இலக்காகக்கொண்டு அரசியல் மயப்படுத்தவும், மறுபுறத்தில் பேரினவாத வேட்கை கொண்ட அரசியலோடு சிறுபான்மையினமான மலையக மக்களின் உரிமைகள் தொடர்பாக பேரம் பேசக் கூடிய ஆற்றலையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் கடந்த கால மலையக அரசியலானது முழு மலையக இனத்திற்கெதிராக செயற்படுகின்ற பேரினவாத சக்திகளுக்கு மண்டியிடுவதன் மூலம் சலுகைகளை சன்மானமாகப் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளானது மலையக மக்களது அரசியலை மிகவும் கொடூரத்தனமான வகையிலே விபச்சாரமயப் படுத்துவதாகவே அமைகின்றது.

மலையக அரசியல் வியாபாரிகளின் இந்தப் போக்கானது மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தேவையான போர்க்குணங்களை மழுங்கடிப்பதோடு மலையக மக்களின் அரையடிமை வாழ்க்கையை நிரந்தர மயப்படுத்தவே வழிகோலும். இதுதான் இதுவரை மலையக அரசியலில் பெற்றுக்கொண்ட அனுபவம்.

மலையக மக்களின் வாழ்வியல் அங்கீகாரத்தைப்பெற்றுக்கொள்ளக் கூடியதும், அவர்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கக் கூடியதும், அரசாட்சியில் அவர்களின் ஜனநாயகப் பங்கு பற்றுதலை உத்தரவாதம் செய்யக்கூடியதுமான தேசிய நிகழ்ச்சி நிரலும் அந்த தேசிய நிகழ்ச்சி நிரலை அடைவதை இலக்காகக் கொண்ட வழிமுறைகளை வகுத்து அந்த வழிமுறைகளில் மலையக மக்கள் பரவலாக ஜனநாயக ரீதியாகப் பங்குபற்றக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குவதும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய மலையக மக்களின் போராட்டத்தை இலங்கையின் ஏனைய முற்போக்குப் போராட்டத்துடன் இணைத்துச் செயற்படக் கூடிய புதிய அரசியல் சிந்தனையும், புதிய அரசியல் தலைமையும் மலையக மக்கள் மத்தியில் ஏற்படும் வரை தற்போதைய மலையக அரசியல் வியாபாரிகளின் விபச்சாரத்திற்கு மக்கள் தொடர்ந்தும் பலியாவதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை மலையக மக்கள் உணர்ந்து கொள்வது நல்லது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

சரிநிகர்
'SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

# அரச பயங்கரவாதம்

இலங்கையின் அரசியற் தளத்தில் வன்முறைச் சம்பவங்களை ஆரம்பிக்கும் சக்தியாக ஆளும் கட்சிகளே முன்னிலை வகிக்கின்றன. தமிழ் மக்களின் சமத்துவ உரிமைகளைப் பறித்தெடுப்தையும், பின்பு அவர்களின் சமவுரிமைக்கான போராட்டத்தையும், எழுச்சியையும் அடக்குவதையும் நோக்கமாகக் கொண்டு அரசியலை வன்முறை மயப்படுத்தும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிங்கள, பௌத்த பேரினவாதத்தை அசர பலத்தின் மூலமும் அரச பயங்கரவாதப் பிரயோகத்தின் மூலமும் நிலை நாட்டிக் கொள்வதற்கு மாறி மாறி ஆட்சி செய்த இரு கட்சிகளும் முயன்றதன் விளைவாக இனமுரண்பாடு இராணுவ மயப்படுத்தப்பட்டது. ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழிகள் இல்லாத நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர்.

சிறுபான்மையினத்தினருக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் அரச பயங்கரவாதக் கெடுபிடிகளை நியாயப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களும், அரசாங்கங்களினால் நிறைவேற்றப்பட்டு பெரும்பான்மையின ஆட்சியை நியாயப்படுத்த பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இவ்வகையில் நிறுவகமயப்படுத்தப்பட்ட பெரும்பான்மையின வன்முறை அரசியலானது நாளடைவில் ஆளும் அணியினர், தம் ஆதிக்கத்தை ஜனநாயக விரோத வழிமுறைகள் மூலமாக நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் எதிர்ப்புக்களை முறியடிப்பதற்காகவும் எதிரணியினருக்கு எதிரான வன்முறைப் பிரயோகத்தை ஆரம்பித்தனர். இதன் மூலம் இலங்கையின் அரசியல் முழுமையாக வன்முறை மயப்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது.

குறிப்பாக 1956ம் ஆண்டில் பண்டாரநாயக்காவின் ஆட்சியுடன் வன்முறைப் பிரயோக அரசியலை ஆர்வத்துடன் வளர்த்தெடுக்கும் செயல் ஆரம்பமாகியது.

நிலமானிய அமைப்பு அரசியலின்(Feudal Politics) பண்புகளுக்கு சமமான எதேச்சாதிகாரப் பண்புகளைக் கொண்ட அரசியல் நடைமுறைகளை ஜனநாயக அரசியலில் பயன்படுத்த விளைந்ததன் காரணமாக ஜனநாயக அரசியல் கலாசாரம் இல்லாதொழிக்கப்பட்டு, ஜனநாயகப் பண்புகளான பேச்சுவார்த்தை, கலந்துரையாடல், கருத்தொருமைப்பாடு போன்றவற்றிற்குப் பதிலாக ஆதிக்கம், அடக்கு முறை, பலாத்காரம், வன்முறைகள் போன்றவைகளும் ஊழல்களும், அதிகார மமதையும் ஜனநாயகப் பண்புகளைக் குழிதோண்டிப் புதைக்கும் ஜனநாயக விரோத நடைமுறைகள் உருவாகத் தொடங்கின. ஜனநாயக வழிமுறைகளை நாடுவதை விட ஜனநாயக விரோத நடைமுறைகளின் மூலம் குறுகிய இலாபம் தேடும் முயற்சியின் விளைவே இன்றைய வன்முறைகளுக்கான காரணமாகும்.

இந்த அரசியல் வன்முறைகள் 80ம் ஆண்டில் மிகத் தீவிரமாக வளர்க்கப்பட்டு 80களின் பிற்பகுதியிலும் 90களின் முற்பகுதியிலும் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்நிலைமைகளுக்கு மத்தியில் தான் ''பயமற்ற, பீதியற்ற, ஜனநாயக ஆட்சியை'' உறுதி செய்யும் உத்தரவாதத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையுடன் பலவீனமடைந்த ஆளும் கட்சியின் வன்முறை அரசியல் சூழலை சாதகமாகப் பயன்படுத்தி பதவிக்கு வந்த பொ.ஐ.முன்னணி நாளடைவில் அதே வன்முறை மூலமான அடக்குமுறை அரசியலை ஆரம்பித்து விட்டது.

குருநாகல், நீர்கொழும்பு, கட்டுநாயக்க போன்ற பிரதேசங்களில் எதிர்க்கட்சியினருக்கு எதிராக வன்முறை நடவடிக்கைகளை ஏவி விட்டதோடு பெந்தோட்டையில் நடைபெறவிருந்த அரச சார்பற்ற அமைப்புகளின் மகாநாட்டை வன்முறைப் பிரயோகத்தின் மூலம் சீர்குலைத்தமை போன்ற பல சம்பவங்களுக்குப் பொறுப்பாக இவ்வரசாங்கம செயற்பட்டு வந்துள்ளது.

ஆட்சித் தலைவியினால் தொடர்ந்தும் நியாயப்படுத்தப்பட்டு வரும் பொதுஜன முன்னணியின் அரசியல் வன்முறைகள் உள்ளூராட்சித் தேர்தல்களின் அறிவிப்பைத் தொடர்ந்து அதிகரித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஐ.தே.கட்சி குண்டர்களினால் நாலந்த எல்லாவெல கொலைசெய்யப்பட்ட சம்பவத்தை சாதகமாகப் பயன்படுத்தும் பொதுஜன முன்னணியினர் ஐ.தே.கட்சிக்கு எதிராக பரவலான வன்முறைகளைப் பயன்படுத்தி பயமுறுத்தி வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எவ்வகையிலும் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பவுதும் 62%க்கும் மேலான வாக்குகளை மொத்தமாகப் பெறவேண்டும் என்ற நோக்கமும் பரவலாகப் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பலாத்கார வழிகளில் பெறுகின்ற எத் தேர்தல் வெற்றிகளும் ''ஜனநாயகத் தார்மீகத் தன்மையை'' இழந்து விடும் என்பது புதிய அனுபவமல்ல. இனமுரண்பாட்டிற்கான அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதற்குத் தேவையான ''அபிப்பிராய வாக்கெடுப்பை'' நடத்துவதற்கான ஒரு முன்னேற்பாடாக இத்தேர்தல்கள் நடாத்தப்படுவதாக பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. எனவே இத்தேர்தலில் வன்முறை, ஊழல் என்பன அபிப்பிராய வாக்கெடுப்பில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதையும் அதன் தார்மீகத் தன்மையையே (Legitimacy) கேள்விக்குட்படுத்தும் என்பதையும் சரிநிகர் முன்னெச்சரிக்கையாகக் கூறி வைக்க விரும்புகிறது.

# திருமலை:கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள்!

திருக்கோணமலை பொதுச்சந்தை விவகாரம் புதிய புதிய கிளைகளை விட்டு பிரச்சினைகளைத் திசைமாற்றிக் கொண்டிருக்கிறது. இரண்டு மாதங்கள் கழிந்து விட்ட நிலையிலும் நகரசபையால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. குத்தகைக்கு எடுத்த நபரோ வரிவசூலிக்கச் செல்வதில்லை. இந்த நிலையில் ஓடுகிறவரைக் கண்டால் துரத்துகிறவருக்குக் கொண்டாட்டம் என்ற போக்கில் சிங்கள வியாபாரிகள் ஜமாய்த்துத் தள்ளுகிறார்கள்.

சந்தை விவகாரத்தில் நகரசபையைச் செயலிழக்க வைத்ததும் குத்தகை எடுத்தவரை சந்தைப் பக்கம் போக விடாமல் தடுத்ததும் பாதுகாப்புப் படையின் மறைமுகப் பணியே எனப் பொதுமக்கள் பரவலான அபிப்பிராயம் கொண்டுள்ளனர். என்றாலும் மக்களிடையே இன்று ஓங்கி நிற்கும் கேள்வி சந்தைப் பிரச்சினை சிக்கலடையும் என்ற சாதாரண விடயம் கூட நகர சபையாலும் குத்தகை எடுத்தவராலும் உணர்ந்து கொள்ள்முடியாத ஒன்றாக இருந்ததா என்பதுவும் இவற்றைச் சமாளிக்கும் திறன் இல்லாதவர்கள் ஏன் களத்தில் இறங்கினார்கள் என்பதும்தான்.

தமிழ் மக்கள் உயிர்வாழ்வதே போராட்டம் என்றாகிவிட்ட இலங்கையில் பெரும்பான்மை இன முதலாளி ஒருவரின் வருமான மார்க்கம் மிக இலகுவாகவே சிறுபான்மையினர் ஒருவருக்கு கைமாற்றப்படும் என எதிர்பார்த்தது அரசியல், நிகழ்வுகள் என்பன பற்றிய அறிவுக்குறைவையே காட்டுகின்றது.

ஆரம்பத்தில் சிங்கள முதலாளிகள் பணம், படை என்பவற்றின் பாதுகாப்புடன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கட்சிபேதமின்றி அரசியல் வாதிகளைக் கொணர்ந்து தலையிட வைத்தார்கள். பிரிகேடியர் மூலம் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படலாம் எனப் பயமுறுத்தி வைத்தார்கள்.

இவர்களது சக்தியின் முன் நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தியின் அதிகாரம் எடுபடவில்லை என்பது தான் உண்மை. ஜனவரி இறுதி வாரத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு நகரசபைத் தலைவர் அழைக்கப்பட்டும் உற்சாகமான முடிவுகள் எதுவும் கிடைத்தபாடில்லை.

குத்தகை எடுத்தவர்தான் போகவில்லை. நாங்களாவது போய்ப் பார்ப்போம் என்று வரி வசூலிக்கச் சென்ற நகரசபை உத்தியோகத்தர்கள் பலதடவை பயமுறுத்தித் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். நகர சபையால் எதுவும் செய்ய முடியவில்லை.

இதுவரைகாலமும் பொதுச் சந்தையாக இருந்தது இப்போது சிங்கள பௌத்த சந்தையாகிவிட்டது. யாரோ உரிமைக்காரர் இருக்க தேசியததின் பெயரால் யாரோ வரி வசூலிக்கிறார்கள். தேசியத்தின் மகத்துவத்தைக் காட்ட போயா தினங்களில் சந்தைக்கு விடுமுறை கூட வழங்குகிறார்கள். நகரசபை கைகட்டிக் கொண்டு நிற்கிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் கடமையைச் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது நகரசபைத் தலைவரின் வாதம். உதாரணத்துக்கு பெப்ரவரி 13ம் திகதி செய்யப்பட்ட முறைப்பாடொன்றைப் பொலிஸார் குழப்பமான முறையில் பதிந்து விட்டார்கள் என்று கூறுகிறார்.

இந்த முறைப்பாட்டில் நகரசபைச் செயலாளர் சண்முகம் கணேசனின் வயது 66 எனக் காட்டப்பட்டுள்ளது. பிரச்சனைக்குரிய மரக்கறிச் சந்தை மீன் சந்தை என மாற்றம் பெற்றுள்ளது. வேண்டுமென்றே பிழையாக முறைப்பாடு பதிந்து எம்மை அடுத்த நடவடிக்கை எடுக்க விடாமல் பொலிஸ் தரப்பில் தடை போடும் முயற்சியே அது என நகர சபை கூறுகிறது.

இந்தப் பிழைகளின் கீழ்தான் நகர சபைச்செயலாளர் பொலிஸ்முறைப்பாட்டில் கையெழுத்திட்டிருக்கிறார் என்பது இவர்களது பலவீனம். செயலாளர் தனக்குச் சிங்களமொழி தெரியாது என்று சட்டப்படி வாதிட முடியாது. தாமே முறைப்பாட்டை எழுதி பொலிஸ் புத்தகத்தில் ஒட்டியிருக்கலாம். அல்லது தமிழில் பதிவு செய்யுமாறு பொலிஸைக் கோரியிருக்கலாம் என்கிறார் ஒரு உத்தியோகத்தர். இதற்கே இவர்கள் துணியவில்லை என்பது இவரது ஆதங்கம்.

சந்தைக்கு நீர் வழங்க மாட்டோம்; கழிவுகளை அப்புறப்படுத்த மாட்டோம் என்று நகரசபை சிலநாட்களுக்கு அடம்பிடிப்பதும் பிறகு தானாகவே விட்டுக் கொடுப்பதும் சாதாரணமாகி விட்டது.

இப்போது நகரசபைத் தலைவர் 'சிறப்பு அங்காடி' என்ற பெயரில் தந்தை செல்வா வீதியில்புதிய சந்தை ஒன்றை நிறுவும் யோசனையிலிருக்கிறார். தடையின்றி இத்திட்டம் வெற்றிபெறுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

தங்களது உரிமைகளையே காப்பாற்ற முடியாமல் தத்தளிக்கும் தமிழ்க் குழுக்கள் தமிழர்களது உரிமையை மீட்பதற்காகப் போராடுவோம் என்பது வேடிக்கையாக இல்லையா?

**விவேகி**

# வவுனியா:திடீர் மரணங்கள்

வடபகுதியின் போர்முனைகளில் மோதலில் ஈடுபடுகின்ற இராணுவத்தினரும் புலிகளும் நாளாந்தம் உயிரிழக்கிறார்கள். இந்த மோதல்களின் எதிர்விளைவுகளாலும் இடையில் சிக்க நேரிடுகின்றமையாலும் பொதுமக்களும் உயிரிழக்கிறார்கள். இது ஒரு வகையான உயிரிழப்புகள்.

இன்னும் ஒரு புறத்தே நோய்களாலும் யுத்த நெருக்கடிகளின் உளவியல்ரீதியான தாக்கங்களாலும் பொதுமக்கள் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள். இது இராணுவத்தின்பிடியிலில்லாத வட பகுதி பிரதேசங்களில் உள்ள நிலைமை.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வட பகுதிகளிலும் மர்மமான கொலைகளுக்கும் காணாமல் போகும் சிலர் சடலங்களாக வீதிகளில்எறியப்படுகின்ற சம்பவங்களுக்கும் குறைவே கிடையாது. இவ்வாறான கொலைகள், உயிரிழப்புகளுக்கு அடுத்ததாக குறிப்பாக வவுனியா பகுதியில் நிகழும்திடீர் மரணங்கள் அதிகமாகியுள்ளன.

வன்னிப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் (முகாம்களுக்குள்) நலன்புரி நிலையங்களில் தங்கவைப்பட்டவர்களிடையே இந்த மரணங்கள் அதிகமாகியுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும் 28 தினங்களில் 30 திடீர் மரணங்கள் நடந்துள்ளதாக வவுனியா நகர திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவிக்கின்றார்.

விபத்து மரணங்கள் துப்பாக்கி சூட்டு மரணங்கள் எதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. இந்த மரணங்களுக்கான காரணங்கள் பலவாறாக உள்ளதாக சமூகவியலாளர்களும் உளவியலாளர்களும் அதிகாரிகளும், வைத்தியர்களும் கூறுகிறார்கள்.

பொதுமக்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பாஸ் நடைமுறைகள் வவுனியாவுக்கு வந்து குடியிருக்கின்றவர்களும் நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களும் மாதக்கணக்கில் நாட்டின் தென்பகுதிக்கு செல்வதற்குரிய அவசரத்தேவைகளிருந்தும் அவ்வாறு செல்வதற்குரிய பிரயாண பாஸ் பெறமுடியாமல் அவஸ்தைப் படுகின்றனர். இதன் காரணமாக எழுகின்ற மன அழுத்தங்கள் எதிர்கால வாழ்வைப் பற்றிய நிச்சயமில்லாத தன்மைகள் என்பனவும் இவற்றுக்கு பின்புல காரணங்களாக உள்ளதாக கூறுகின்றார்கள்.

இது ஒரு புறமிருக்க திடீர் மரணமடைந்தவர்களின் சடலங்களை உறவினர்களோ, உரியவர்களோ எடுத்துச் சென்று இறுதிக் கிரியைகளை செய்ய முடியாத சோக நிலைமையும் பரவலாக காணப்படுகிறது.

இவ்வாறான சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்படுகின்றன. இதற்குரிய செலவுத் தொகையாக பெரியவர்களுக்கு ஆயிரம் ரூபா அரசினால் வழங்கப்படுகிறது. சிறுவர்களுக்கு ஐநூறு ரூபா வழங்கப்படுகிறது.

ஆயினும் வவுனியா வைத்தியசாலைக்கு வருகின்ற அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட சடலங்களுக்கு இந்தப்பணியில் ஈடுபடுகின்ற வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாதது இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடந்த சில வாரங்களில் இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட 39 சடலங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென வைத்தியசாலை சிற்றூழியர்கள், அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளார்கள்.

இவ்விடயம் பற்றி வவுனியா பிரதேச் செயலாளர் அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார்.

வைத்தியசாலையிலிருந்து அரச செலவில் அடக்கம் செய்யப்படுகின்ற சடலங்களுக்குரிய உடைகள் சவப்பெட்டி மற்றும் அத்தியாவசிய செலவுகளுக்கும் ஊழியச் செலவுகளுக்குமே பணம் வழங்கப்படுகிறது. ஆனால் இந்தச் சடலங்கள் கௌரவமான முறையில்லாமல், பாயில் சுற்றிய நிலையிலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் ஊழியர்களின் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையெனவும் முறையிடப்புள்ளது. இவ்வாறான அடக்கப் பணிகளுக்கு கிராம சேவை அதிகாரியொருவரே பொறுப்பெனவும் அவருடாகவே பணக்கொடுப்பனவுகளும் பணிகளும் மேற்கொள்ளப்படுவதே நடைமுறையாகும். ஆயினும் வைத்தியசாலை சிற்றூழியர்களின் கூற்றின் படி சம்பந்தப்பட்ட கிராமசேவை அதிகாரி இச்சடலங்களை பார்வையிடுவதோ, அல்லது அடக்கம் செய்யும் பணிகளை மேற்பார்வையிடுவதோ இல்லையெனவும் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேசசபைச் செயலாளர் விசாரணை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 8 பெண்கள் தினத்தையொட்டி இவ்விதழ் பெண்கள் சிறப்பிதழாக வெளிவருவதால் வழமையான அம்சங்கள் இம்முறை இடம் பெறவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்